பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2036 கார்த்திகை 22 புதன்கிழமை (07.12.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 11

## மூன்று நாள்களில் இரண்டாவது சம்பவம்:

# இருபாலையில் கிளைமோர் தாக்கு அதிகாரி உட்பட 7 படையினர் பலி!

யாழ்ப்பாணம், டிசெம்பர் 7

**இருபாலைப் பகுதியில் நேற்று முற்பகல் 9.45 மணியளவில் இடம்பெற்ற கிளைமோர் கண்ணித் தாக்குதல் ஒன்றில் லெப்டினன்ட் தர அதிகாரி ஒருவர் உட்பட ஏழு படையினர் கொல்லப்பட்டனர்.**

இராணுவ நிலைகளில் பணிபுரியும் துருப்பினருக்கான காலை உணவு விநியோகத்தில் ஈடுபட்டிருந்த டிராக்டர் ஒன்றை இலக்கு வைத்தே இந்தக் கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது.

பருத்தித்துறை பிரதான வீதி வழியாக இருபாலை நோக்கிச் சென்றுகொண்டிருந்த சமயம், இருபாலைச் சந்திக்குச் சமீபமாக டிராக்டர் கிளைமோர் கண்ணியில் சிக்கியது.

வீதியோரம் மறைத்துப் பொருத்தப்பட்டிருந்த கிளைமோர் கண்ணி தொலைவில் இருந்து இயக்கப்பட்டிருப்பதாகப் படை வட்டாரங்கள் தெரிவித்தன.

கண்ணியில் சிக்கிய டிராக்டர் சிதறிச் சின்னா

(16 ஆம் பக்கம் பார்க்க)

### நெல்லியடியில் குண்டுவீச்சு

கரவெட்டி, டிசெ.7

நெல்லியடியில் செல்லமுத்து கட்டடத்தடியில் நேற்று மாலை 6 மணியளவில் பொலிஸ் ஜீப் ஒன்றை நோக்கி கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது.

கிரனேட் தவறி வேறு இடத்தில் வீழ்ந்து வெடித்தது. வாகனத்துக்கு சேதம் ஏற்படவில்லை. ஆனால் படையினர் வேட்டுக்களைத் தீர்த்தனர். (3-70)

சம்பவ இடத்தில் நீதிவான் விசாரணை நடத்தும்போது...



### ஐம்பதடி தூரத்துக்கு இழுபட்டுப் பள்ளத்தில் வீழ்ந்தது டிராக்டர்

## சிதறிக் கிடந்த சடலங்களில் கிரனேட்டுக்கள் இருந்ததால் குண்டு செயலிழக்கும் பிரிவு வந்தே அவற்றை மீட்டன

யாழ்ப்பாணம், டிசெ.7

இருபாலையில் நேற்றுக்காலை நடந்த தாக்குதலில் கொல்லப்பட்ட படையினரின் சடலங்களை அப்புறப்படுத்துவதற்குக் குண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவு வரவழைக்கப்பட்டது.

மரண விசாரணைகளை நடத்துவதற்காக சம்பவ இடத்துக்கு யாழ்.மேலதிக நீதிவான் திருமதி. ஸ்ரீநிதி நந்தசேகரன் நேற்று முற்பகல் 11. 30 மணிக்குச் சென்றார்.

தாக்குதலுக்கு இலக்கான டிராக்டர் வீதியை விட்டு விலகிப் பள்ளத்தில் வீழ்ந்து கிடந்தது.

உயிரிழந்தோரின் சடலங்கள் மிகவும் மோசமான நிலையில் அங்கு காணப்பட்டதாலும் - உயிரிழந்தவர்கள் வசம் இருந்த 'கிரனேட்' குண்டுகள் 'கிளிப்' கழன்று வெடிக்கும் நிலையில் காணப்படும் சூழல் இருந்ததாலும் -

(16 ஆம் பக்கம் பார்க்க)

### உயர் மட்டக்குழு பலாலி வந்தது

யாழ்ப்பாணம், டிச.07

பாதுகாப்பமைச்சின் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான உயர் மட்டப் பாதுகாப்புக் குழுவொன்று நேற்று பலாலிக்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டது.

நேற்று புதிய இராணுவத்தளபதியாக பதவியேற்ற லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா மற்றும் கூட்டுப் படைகளின் தளபதி தயா சந்தகிரி ஆகியோரும் இக்குழுவில் அடங்கியிருந்தனர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## கருணா குழுவினர் நால்வர் சுட்டுக் கொல்லப்பட்டனர்

### இனியபாரதியும் அவர்களில் ஒருவர்

அம்பாறை, டிசெ.7

அம்பாறை கஞ்சிகுடிச்சாறு பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற தாக்குதல் சம்பவமொன்றில் கருணா குழுவின் முக்கியஸ்தரான இனியபாரதி உட்பட நான்கு பேர் கொல்லப்பட்டனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் கருணா குழு ஊடுருவித் தாக்க முயன்றபோது இந்தச் சம்பவம் இடம்பெற்றது என்றும் கருணா குழுவினரை விடுதலைப் புலிகள் வழிமறித்துத் தாக்கிக் கொன்றனர் என்றும் கூறப்படுகிறது. இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர்களில் இனியபாரதி

(16 ஆம் பக்கம் பார்க்க)

### யாழ்.பல்கலைக் கழகத்தின் பேரவை உறுப்பினர்களுக்கு பதவிவிலக அறிவுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ.7

யாழ்.பல்கலைக் கழகத்தின் பேரவை உறுப்பினர்களையும் பேரவையின் தலைவரையும் உடன் ராஜினாமாச் செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

கல்வியமைச்சின் உயர்கல்விப் பிரிவின் மேலதிகச் செயலாளர் மாலினி பீரிஸ் இது தொடர்பான கடிதம் ஒன்றை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தருக்கு நேற்று மாலை அனுப்பியுள்ளார்.

கடந்த 23ஆம் திகதி நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படியும் ஜனாதிபதி விடுத்துள்ள அறிவுறுத்தலின் படியும்

(16 ஆம் பக்கம் பார்க்க)

### இராணுவ விலகலை வலியுறுத்தி

## மாணவர் போராட்டம் இன்று குடாநாட்டுக்கு விஸ்தரிப்பு

வடமராட்சியில் நடைபெற்று வரும் மாணவர்களின் கல்விச்செயற்பாடுகளைப் புறக்கணிக்கும் போராட்டம் இன்று குடாநாட்டுக்கு முழுமையாக விஸ்தரிக்கப்படவிருக்கின்றது.

ஜி.சீ.ஈ.(சாதாரண) பரீட்சையைக் கருத்திற்கொண்டு போராட்டம் எதிர்வரும் 9 ஆம் திகதி மாலையுடன் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு பரீட்சை முடிந்த பின்தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

தமிழ் மாணவர் ஒன்றிய யாழ். மாவட்டப்பிரிவு நேற்று விடுத்த அறிக்கையில் இதனைத்தெரிவித்துள்ளது.

(15 ஆம் பக்கம் பார்க்க )

## மன்னாரில் படகில் சென்ற ஐந்து போராளிகள் கைது


மன்னார், பள்ளிமுனை இறங்குதுறையை நேற்று பிற்பகல் 4 மணியளவில் வந்தடைந்த படகு ஒன்றைக் கடற்படையினர் சோதனையிட்டனர். பின்னர் அந்தப் படகில் இருந்த 2 பெண் போராளிகள் உள்ளிட்ட 5 போராளிகள் கைதுசெய்யப்பட்டனர்.

அப்படகில் இருந்த பெண் போராளி ஒருவர் சயனைட் வில்லையை உட்கொள்ள முயன்றார் என்றும் - கடற்படையினர் அதைத் தடுத்தனர் என்றும் - இதில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் காயமடைந்தார் என்றும் - பொலீஸார் தெரிவித்தனர்.

காயமடைந்த சிப்பாயும் அந்தப் பெண்ணும் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

(15 ஆம் பக்கம் பார்க்க)

# எந்தச் சவாலுக்கும் முகம் கொடுக்கத் தயார் புதிய இராணுவத் தளபதி உறுதி அறிவிப்பு



கொழும்பு, டிசெ.7

விடுதலைப் புலிகளால் விடுக்கப்படும் எந்தச் சவால்களுக்கும் முகம்கொடுக்க இலங்கை இராணுவம் தயாராக இருக்கின்றது.

- இப்படிக் கூறினார் புதிய இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா.

புதிய தளபதியாக நேற்றுப் பதவியேற்ற பின் ஊடகவியலாளர்களிடம் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இராணுவத்தினர் யுத்த மனநிலையில் இருந்து மாறுபட்டு முழுமையாக சமாதானத்தை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கும் வேளையில், இராணுவத்தினர் மீது தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன. இராணுவத்தினர் இந்தத் தாக்குதல்களில் பல உயிர்களை இழந்தும் இன்னும் அமைதி காக்கின்றனர்.

இந்தத் தாக்குதல்களை நடத்துவது புலிகள் என்றே நாம் நம்புகிறோம். புலிகள் தாம் இதனைச் செய்யவில்லையென மறுத்தாலும் அதனை ஏற்கமுடியாது. வடக்கில் புலிகளுக்குத் தெரியாமல் வேறு ஆயுதக்குழுக்கள் இயங்க வாய்ப்பில்லை. ஏனென்றால், புலிகளிடம் பலமான புலனாய்வுத்துறை உள்ளது. புலிகளுக்கு அங்கு செல்வாக்கு உண்டு.

இந்தநிலையில் பதில் தாக்குதல் நடத்தவோ அல்லது யுத்தத்தைத் தொடங்கவோ இராணுவத்தினர் தயாராக இல்லை. அவர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# 2 முஸ்லிம் மீனவ இளைஞர்கள் மருதமுனையில் சுட்டுக்கொலை

## கடற்கரையில் இருந்து சடலங்கள் மீட்பு

கல்முனை,டிசெம்பர்.07

**நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை இரவு மருதமுனையில் இரு முஸ்லிம் மீனவர்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளனர்.**

**இவர்களின் சடலங்கள் நேற்று அதிகாலை மருதமுனை மக்பூலியாபுரம் கடற்கரையில் கண்டுபிடிக்கப்பட்டன. அபுஉபைதா மிர்ஸான் (வயது 24), முஹம்மட் பானூக் றிஸ்வான் (வயது 30) ஆகியோரே சுட்டுப்படுகொலை செய்யப்பட்டவர்களாவர். இவர்கள் இருவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.**

நேற்றுமுன்தினம் இரவு ஒன்பது மணியளவில் கடற்கரையில் எறி கயிற்றின் மூலம் மீன்பிடித்துக் கொண்டிருக்கையிலேயே இவர்கள் இனந்தெரியாத நபர்களினால் சுடப்பட்டிருக்கின்றனர். எனினும் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட மருதமுனைக் கடற்கரைப் பகுதியில் மக்கள் குடியிருப்புக்கள் இல்லாதனால் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் பெரிதாகப் பொருட்படுத்தப்படவில்லை.

நேற்று அதிகாலை சுபஹ் தொழுகையின் பின்னர் கடலுக்குச் சென்ற மீனவர்களே இவர்களது சடலங்களைக் கண்டிருக்கின்றனர். இதனைத் தொடர்ந்து பொலீஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டு, கல்முனை அஷ்ரப் வைத்தியசாலைக்கு பிரேதப் பரிசோதனைக்காக சடலங்கள் எடுத்துச் செல்லப்பட்டன.

கல்முனை மஜிஸ்ட்ரேட் எம்.ஏ. முகைதீன் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டார். கல்முனைப் பொலீஸார் புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க-3)

# கிழக்கில் நேற்றும் ஹர்த்தால்

சாய்ந்தமருது,டிசெ.7

அம்பாறை மாவட்டத்தின் கரையோர முஸ்லிம் பிரதேசங்களில் இரண்டாவது நாளாக நேற்று செவ்வாய்க்கிழமை கடையடைப்புச் செய்யப்பட்டு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

கல்முனை பொலீஸ் பிரிவுக்குட்பட்ட மருதமுனையில் இரு இளைஞர்கள் இனந்தெரியாத துப்பாக்கி நபர்களால் கடந்த திங்கட்கிழமை இரவு சுட்டுக்கொல்லப்பட்டனர். இக்கொலைகளையடுத்து, இப்பிரதேசத்தில் ஒருவகை அச்சமும், பதற்ற நிலையும் மக்களிடையே ஏற்பட்டுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை கல்முனைப் பிரதேசத்தைச் சேர்ந்த பிரதேச செயலாளர் ஏ.எல்.எம். பளீல் சுட்டுக்கொல்லப்பட்டார். இவரின் கொலையைக் கண்டித்து இப்பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கடையடைப்பு, ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டன. இந்நிலையில் இரு இளைஞர்களின் கொலைகளைத் தொடர்ந்து இப்பிரதேசங்களில் அடுத்து என்ன நடைபெறும் என்ற ஒரு பதற்றமான நிலையில் மக்கள் இருந்து வருகின்றனர்.

இரண்டாவது நாளாக, நேற்றும் அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசத்தில் இயல்பு நிலை முற்றாக ஸ்தம்பிதம் அடைந்து காணப்பட்டது. (க)

# யுத்தநிறுத்த மீறல்களை கண்டிக்கிறது அமெரிக்கா

கொழும்பு,டிசெ.7

இலங்கையில் யுத்தநிறுத்த உடன்பாடு தொடர்ந்து பொதுவாகவும் - குறிப்பாகக் கடந்த சில வாரங்களாகவும் - மீறப்பட்டு வருவது தொடர்பில் அமெரிக்கா ஆழ்ந்த கவலையை வெளியிட்டிருக்கின்றது.

இலங்கையின் வன்முறைகள் குறித்து நேற்று அறிக்கையொன்றை விடுத்திருக்கும் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம், வன்முறைகளைத் தவிர்த்து போர்நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் பேணுவதற்கு இலங்கை அரசும், விடுதலைப்புலிகளும் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டுமென வலியுறுத்தியிருக்கின்றது.

"டிசெம்பர் 4இல் இராணுவ வாகனம் மீது நடத்தப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் தாக்குதலில் ஏழு துருப்பினர் உயிரிழக்க நேர்ந்த சம்பவத்தை நாங்கள் கண்டிக்கிறோம். இத்தகைய வன்முறைகள் அமைதி முயற்சிகளுக்கு திரும்பப்போவதாகக் கூறும் புலிகளின் கூற்றுக்களுக்கு மாறாக உள்ளன." - என்றும் அமெரிக்கா அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

(க-3)

# யசூஷி அகாஷி இன்று கொழும்பு வருகிறார்

கொழும்பு,டிசெ.7

இலங்கை அமைதி முயற்சிகளுக்கான ஜப்பானின் விசேட பிரதிநிதி யசூஷி அகாஷி இன்று இலங்கை வரவுள்ளார்.எதிர்வரும் 12ஆம் திகதிவரை கொழும்பில் தங்கியிருக்கும் அகாஷி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோரையும் இதர அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்களையும் சந்திக்கவுள்ளார்.

இம்முறை இலங்கை விஜயத்தின்போது அவர் வன்னிக்கு செல்லமாட்டாரெனத் தெரிவிக்கப்படுகிறது. (க-3)

# வடக்கு - கிழக்கு நிலைமை: ஐ.தே.க. கூட்டத்தில் ஆராய்வு

கொழும்பு,டிசெ.7

வடக்கு - கிழக்கில் ஏற்பட்டிருக்கும் பதற்றமான நிலைமை தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் நேற்றைய நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தின்போது விரிவாக ஆராயப்பட்டிருக்கிறது.

அதேசமயம், கட்சித் தலைமைப் பதவி தொடர்பில் நேற்றைய கூட்டத்தில் சர்ச்சைகள் எழுமென்று எதிர்பார்க்கப்பட்டபோதும் அவ்வாறான எதுவும் இடம்பெறவில்லை.

ஆனாலும், அனைத்து உறுப்பினர்களின் கருத்துகளைக் கேட்டறிந்து கட்சி மறுசீரமைப்புத் தொடர்பில் தீர்மானமொன்றைத் தாம் எடுக்கப்போகிறார் என ஐ.தே.கட்சித் தலைவர்நேற்றுத் தெரிவித்திருக்கின்றார்.

இதேவேளை, நேற்றைய கூட்டத்தில் உரையாற்றிய ஐ.தே.க. தலைவர் போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்தும், அமைதிப் பேச்சின் இறுதித் தீர்வு குறித்தும் ஜனாதிபதி தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

இலங்கை அமைதி முயற்சிகளுக்கான இணைத்தலைமை நாடுகளும், இந்தியாவும் இறுதித் தீர்வு தொடர்பில் கொண்டுள்ள நிலைப்பாட்டைக் மாற்றவில்லை என்றும், அதனால் வேறு ஒரு நிலைப்பாட்டைக் கொண்டுள்ள ஜனாதிபதி எப்படி அமைதி முயற்சிகளை முன்னெடுக்கப் போகிறாரென்றும் ஐ.தே.க. தலைவர் அங்கு கேள்வி எழுப்பினார். (க-3)

## மாவட்ட கண்காணிப்பு குழுவின் கூட்டம்

யாழ்.பிரதி மாகாண சுகாதார பணிப்பாளர் அலுவலகத்தில் மாதாந்தம் நடத்தப்படும் நிறுவனத் தலைவர்களுக்கான மாவட்ட கண்காணிப்புக் குழுக்கூட்டம் திட்டமிட்டபடி இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்அலுவலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் என்றும் -

சகல நிறுவனத் தலைவர்களும் தவறாது இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறும் -

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் கேட்டுள்ளார். (3-51)

## றொனிக்குப் புதிய பதவி

கொழும்பு,டிசெ.7

முன்னாள் நிதி அமைச்சரும் மூத்த அரசியல்வாதியுமான றொனி டி மெல் நிதி மற்றும் பொருளாதார செயற்பாடுகள் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகராக நியமனம் செய்யப்பட்டுள்ளார். (3-206)

# மருதமுனைப் படுகொலைகளை கண்டித்துப் புலிகள் அறிக்கை

அம்பாறை மாவட்டம், மருதமுனைப் பகுதியில் வைத்து இரு முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளமைக்குத் தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியற்துறையினர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

அரசுத் தலைவர் தேர்தலின் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது சேறு பூசுவதற்காகத் தமிழ் பேசும் முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களை அரசுப் படைகளுடன் இயங்கும் ஆயுதக் குழுக்கள் தீவிரப்படுத்தியுள்ளன. தொடர்ந்தும் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதன் காரணமாக மருதமுனையில் உயிரிழந்த இளைஞர்களின் உறவினர்களுக்கு நாம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம். அத்துடன் இப்படுகொலைகளை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இக்கால கட்டத்தில் தமிழ் - முஸ்லிம் மக்கள் மிகவும் அவதானமாகவும் விழிப்புடனும் இருக்கவேண்டும். இப்படியான தாக்குதல் அக்கரைப்பற்றில் நடந்தபோது அதற்குக் காரணமானவர்களை நாம் கண்டுபிடித்துள்ளோம். இங்கும் கண்டுபிடிக்க வேண்டிய தேவைஇருக்கிறது. இதற்கு மக்கள் எமக்கு ஒத்துழைப்புத் தரவேண்டும். இதேவேளை, இச்சம்பவங்களின் பின் கலவரங்களைத் தூண்டிவிடும் நடவடிக்கைகளை ஆயுதக் குழுக்கள் மேற்கொள்ள இருப்பதால் தமிழ் - முஸ்லிம் மக்கள் மிகவும் அவதானமாக இருக்கவேண்டும். - இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-3)

# திருமலையில் புலிகளுடன் முஸ்லிம் பிரதிநிதிகள் பேச்சு

## முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு முயற்சி

திருகோணமலை மூதூரில் தமிழ் -முஸ்லிம் மக்களிடையே வன்முறைகளைத் தணிக்கும் வகையில் விடுதலைப் புலிகளுக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

பள்ளிக்குடியிருப்பு முன்னரண் பகுதியில் நேற்று முற்பகல் 10 மணிக்கு இந்தக் கலந்துரையாடல் கூட்டம் இடம்பெற்றது.

விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன், மூதூர் தோப்பூர் பள்ளிவாசல் சம்மேளனத் தலைவர் லத்தீப் ஆகியோர் இந்தக் கலந்துரையாடலில் பங்குகொண்டனர்.

அங்கு நடந்த வன்முறைகள் தொடர்பில் தனது கண்டனத்தை எழிலன் தெரிவித்தார்.

சம்பூரில் இருந்து சென்று மூதூரில் "காணாமல்போன 5 தமிழர்களில் ஒருவர் பள்ளிவாசல் வளவு ஒன்றில் சேற்றுப் பகுதியில் - களப்புப் பிரதேசத்தில் - புதைக்கப்பட்டு உருக்குலைந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மதத் தலத்துக்குள் இப்படியான சம்பவங்கள் நடைபெறுவது மோசமான செயல் என்றும் எழிலன் கூறினார்.

மேலும், ஸ்ரீலங்காப் பொலீஸார் முன்னிலையிலேயே தமிழர்கள் இருவர் வெட்டிக்கொல்லப்பட்டுள்ளனர். ஸ்ரீலங்காப் பொலீஸின் திட்டமிட்ட போக்கையே இது காட்டுகின்றது என்றும் எழிலன் தெரிவித்தார்.

இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்ற முஸ்லிம்களின் பிரதிநிதி லத்தீப், தமிழ் மக்கள் மீது முஸ்லிம்கள் மேற்கொண்ட வன்முறைகளுக்கு வருத்தம் தெரிவித்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டார் என்றும் கூறப்பட்டது.

# வெடிகுண்டு வதந்தி; மக்கள் மத்தியில் பதற்றம்!

## உரும்பிராய்ப் பகுதியில் அல்லோலகல்லோலம்

கோண்டாவில்,டிசெ.7

உரும்பிராய்ப் பகுதியில் வெடிகுண்டு இருப்பதாகப் பரவிய வதந்தியால், அப்பகுதிப் பொதுமக்கள் பெரும் அல்லோல கல்லோலப்பட்டனர்.

நேற்றுப் பிற்பகல் 3.15 மணியளவில் உரும்பிராய் றோமன் கத்தோலிக்கப் பாடசாலை வீதியில் உள்ள பற்றைக் காணி ஒன்றில் இரண்டு இளைஞர்கள் ஏதோ ஒரு பொருளை வைத்துவிட்டுப் போனதாகவும்-

இதனை அவதானித்த வயோதிப மாது ஒருவர் இவ்விடயத்தைத் திரிவுபடுத்தியதாலேயே இவ்விடயம் பெரிதாகி நிலைமை மோசமானதாகவும் -

தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்து அப்பகுதிப் பொதுமக்கள் கையில் அகப்பட்டதை எடுத்துக்கொண்டு அவ்விடத்தை விட்டு ஓடியதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதி இளைஞர்கள் சிலர் அந்தப் பற்றைக் காணியில் குண்டு ஏதும் உள்ளதா எனத் தேடிப் பார்த்தபோது பற்றைக்குள் சீன வெடிக் கோர்வை ஒன்று காணப்பட்டதாகவும் -

இதன் பின்னரே நிலைமை வழமைக்குத் திரும்பியதாகவும் கூறப்படுகிறது.(3-12-49)

# தொல்புரத்தில் குடிசையில் தீ; குடும்பஸ்தர் கருகி மரணம்

தொல்புரம்,டிசெ.7

சுழிபுரம் பகுதியில் குடிசை வீடொன்று தீப்பிடித்து எரிந்ததில், அதில் சிக்கி குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நேற்று மாலை 5 மணியளவில் இடம்பெற்றதாகக் கூறப்படும் இச்சம்பவத்தில் சுழிபுரத்தைச் சேர்ந்த ச.மனோகரன் (வயது 34) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

இறந்தவர் நித்திரையில் இருந்த வேளையிலேயே வீடு தீப்பற்றிக்கொண்டதாகவும் -

வெளியே சென்ற குடும்பஸ்தவர்களும் மற்றும் அயலவர்களும் இணைந்து எரிந்து கொண்டிருந்த வீட்டை அணைத்துவிட்டு உள்ளே சென்றபோதே வீட்டினுள் எரிந்த நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டார் எனவும் - தெரிவிக்கப்படுகிறது.

வீடு எரிந்த வேளையில் அவர் உள்ளே உறங்கிக்கொண்டிருந்த விடயம் எவருக்கும் தெரியாது எனவும் கூறப்படுகிறது.

தீ எவ்வாறு வீட்டில் பற்றிக்கொண்டது என்ற விடயம் இதுவரை தெரியவரவில்லை. (3-12-119)


## முன்பள்ளியின் கலைவிழா

யாழ்ப்பாணம், டிசெ.7

வடக்கு-கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம் குழந்தைகள் தினத்தை முன்னிட்டு நடத்தும் யாழ். பிரதேச முன்பள்ளிச் சிறார்களின் கலை விழா இன்று புதன்கிழமை காலை 8.30 மணிக்கு கொட்டடி நமசிவாய வித்தியாலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் ச. ஜெயராஜ் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். கல்வி வலய இணைப்பாளர் த.பஞ்சலிங்கம், பாலர் கல்விக் கழக செயலாளர் தெ.இரட்ணகோபால், ஆகியோர் கலந்துகொள்வர். (3-204)



இருபாலையில் தாக்குதல் நடந்த இடத்தையும் வாகனத்தில் எடுத்துச் செல்லப்பட்ட உணவுகள் சிதறிக் கிடப்பதையும் சேதமடைந்த ட்ரக்டரையும் சேதமாக்கப்பட்ட கடையையும் அந்தப் பகுதி வெறிச்சோடிக் கிடப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் : பிரபா, நேசன்)

# காயமடைந்த சகாக்களை மினிபஸ்ஸில் பலாலிக்கு கொண்டுசென்ற படையினர்!

## பயணிகள் பஸ் மறிக்கப்பட்டது குறித்து கண்காணிப்புக் குழுவிடம் புகார்

யாழ்ப்பாணம்,டிசெ.7

இருபாலைச் சந்திக்குச் சமீபமாக இராணுவ ட்ரக்டர் மீது கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்ட சமயம் அப்பகுதிக்குச் சமீபமாக வீதியால் வந்துகொண்டிருந்த தனியார் மினிபஸ் ஒன்றை மறித்த படையினர் அதற்குள் இருந்த பயணிகளை இறக்கிவிட்டு அந்த மினி பஸ்ஸில் காயமடைந்த படையினரை ஏற்றிச் சென்றனர். இது தொடர்பாக தனியார் மினி பஸ் சங்கம் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

நேற்றுக்காலை அச்சுவேலியில் இருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு யாழ்ப்பாணம் நோக்கி மினிபஸ் ஒன்று வந்துகொண்டிருந்தது.

நீர்வேலிக்கும் இருபாலைக்கும் இடைப்பட்ட பகுதியில் பஸ் சென்றுகொண்டிருந்த போது, இருபாலையில் கிளைமோர்க் குண்டு வெடித்தது. அப்போது தாக்குதல் இடம்பெற்ற இடத்துக்குச் சென்றுகொண்டிருந்த படையினர் குறிப்பிட்ட மினிபஸ்ஸை வழிமறித்தனர் என்றும் - பஸ்ஸில் இருந்த பயணிகளை நடு வீதியில் இறக்கிவிட்டு சாரதி, மற்றும் நடத்துனர் ஆகிய இருவருடனும் பஸ்ஸை சம்பவ இடத்து[illegible]க் கொண்டு சென்றனர் என்று கூறப்பட்டது.

காயமடைந்த படையினரை அந்த பஸ்ஸில் ஏற்றிக்கொண்டு பலாலிக்குக் கொண்டு சென்றனர் படையினர். நேற்று இரவுவரை குறித்த மினிபஸ் மற்றும் சாரதி, நடத்துநர் ஆகியோர் விடுவிக்கப்படவில்லை.

இச் சம்பவம் தொடர்பாக தனியார் மினி பஸ் சங்கத்தின் தலைவர் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிற்கும் யாழ். அரச அதிபருக்கும் முறையிட்டுள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது. (த-7-11-12-13-14-15)

# இருபாலைப் பகுதி மாணவர்கள் வீடு திரும்ப முடியாமல் அந்தரிப்பு!

யாழ்ப்பாணம்,டிசெ.7

இருபாலைச் சந்திக்குச் சமீபமாக படையினரின் உழவு இயந்திரம் மீது கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டதும் சிறிது நேரத்தில் அங்கு வந்துகுவிந்த பெருமளவான இராணுவத்தினர் இருபாலை, கோப்பாய்ப் பகுதிகளை உள்ளடக்கிய பெரும்பகுதியைச் சுற்றி வளைத்து அப்பகுதிக்குள் பொதுமக்கள் எவரையும் செல்லவிடாது தடுத்தனர்.

இதனால், அந்தப் பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் - குறிப்பாக பாடசாலை மாணவர்கள் தமது வீடுகளுக்குத் திரும்ப முடியாது திண்டாடினர்.

கிளைமோர்த் தாக்குதல் நடந்த இருபாலை மற்றும் அதனை அண்டிய பகுதிகளுக்குச் செல்லும் சகல வீதிகளும் படையினரால் மூடப்பட்டன.

மதியம் பாடசாலை முடிந்து தமது வீடுகளுக்குச் சென்ற இருபாலைப் பகுதி மாணவர்களும் அரச, தனியார்துறை அலுவலர்களும் தடுத்து நிறுத்தப்பட்டனர். இதனால், சிறுவர் முதல் அரச அலுவலர்கள் வரை அனைவரும் தத்தமது வீடுகளுக்குச் செல்லமுடியாது திண்டாடிக்கொண்டிருந்தனர். அந்தப் பகுதிக்குள் இருந்த பெற்றோர் தமது பிள்ளைகளுக்கு என்ன நடந்ததோ ஏது நடந்ததோ என்று தெரியாமல் அந்தரப்பட்டுக்கொண்டிருந்தனர்.

பின்னர் நேற்றுமாலையே படையினரின் வீதித்தடை நீக்கப்பட்டது. அதன் பிறகு மாணவர்களும் அரச அலுவலர்களும் தத்தமது வீடுகளுக்குச் சென்றனர்.

இதேவேளை, நீர்வேலி, அச்சுவேலி, ஆவரங்கால் உட்பட பல பகுதிகளிலும் பாடசாலைகள் முற்பகல் 11 மணிக்கே மூடப்பட்டன. பெற்றோர்கள் பாடசாலைகளுக்கு விரைந்துசென்று தமது பிள்ளைகளைக் கூட்டிச் சென்றனர். (த-7-13-11-15)

# பணம், நகை மாயம்

வலி.வடக்கு,டிசெ.6

இருபாலைச் சந்தியில் உள்ள நகைக் கடையொன்றில் இருந்து சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் காணாமற் போயுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுப் பகல் இப்பகுதியில் இடம்பெற்ற இராணுவ உழவு இயந்திரத்தின் மீதான கிளைமோர்த் தாக்குதலைத் தொடர்ந்து அப்பகுதியில் உள்ள வர்த்தகர்கள் வர்த்தக நிலையங்களைப் பூட்டாது கைவிட்டு ஓடினர்.

மாலை 5 மணிக்கு இராணுவத்தினர் அப்பகுதியில் இருந்து வெளியேறிய பின்னர் கடைக்கு வந்து உரிமையாளர்கள் பார்த்தபோது கடையில் இருந்த நகைகள் காணாமற் போயிருந்தன என்றும் - கடையும் உடைத்து நொறுக்கப்பட்டிருந்ததாகவும் - உரிமையாளர் தெரிவித்தார். இதேபோன்று அப்பகுதியில் உள்ள தேனீர்க் கடையொன்றில் இருந்து இரண்டாயிரத்து ஐநூறு ரூபா பணமும் காணாமற்போயுள்ளது என்றும் - தெரிவிக்கப்படுகின்றது.(3-86)

# வடமராட்சி மாணவர் நேற்றும் போராட்டம் நெல்லியடியில் இராணுவம் துப்பாக்கிச் சூடு!

கரவெட்டி,டிசெ.7

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மற்றும் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி ஆகியவற்றின் மாணவர்கள் நேற்று இரண்டாவது நாளாகவும் இராணுவத்தினருக்கு எதிரான ஆர்ப்பாட்டம் மற்றும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாணவர்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து பருத்தித்துறை, நெல்லியடிப் பகுதிகளில் மக்களும் போராட்டங்களில் கலந்து கொண்டனர். நெல்லியடியில் ஆர்ப்பாட்டக் காரர்களை விரட்ட படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதில் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை. எனினும் இந்தச் சம்பவங்கள் காரணமாக வடமராட்சிப் பகுதியில் நேற்று முழு நாளும் பெரும் பதற்றம் காணப்பட்டது. கடைகள் மூடப்பட்டிருந்தன. போக்குவரத்து முடங்கியிருந்தது. இயல்பு வாழ்க்கை பெருமளவில் பாதிக்கப்பட்டிருந்தது.

தமது பாடசாலைகளுக்கு அருகில் இராணுவப் பாதுகாப்பு அரண்கள் புதுப்பிக்கப்படுவதை ஆட்சேபித்தும், யாழ். குடாநாட்டில் பாடசாலைகளை ஆக்கிரமித்தும், அவற்றை அண்மித்துமுள்ள இராணுவ முகாம்கள், காவலரண்கள் என்பன அகற்றப்படவேண்டும் என்று கோரி மாணவர்கள் கடந்த இரு நாள்களாக இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாதுவிட்டால், இன்று முதல் யாழ். குடாநாடு தழுவிய ரீதியில் போராட்டம் விஸ்தரிக்கப்படும் என்றும் மாணவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்றுக் காலை ஹாட்லிக் கல்லூரி அமைந்துள்ள பகுதி வீதிகளில் கூடிய நூற்றுக்கணக்கான மாணவர்கள், வீதிகளில் தடைகளை ஏற்படுத்தியும் டயர்களை எரித்தும் இராணுவத்தினருக்குத் தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர். கல்லூரி வீதி, பி.எம்.வீதி, வியாபாரி மூலை, மெத்தைக் கடைச் சந்தி ஆகிய பகுதிகளில் பெரும் எண்ணிக்கையில் டயர்கள் எரிக்கப்பட்டன. அச்சமயத்தில் கல்லூரி வீதி முழுவதும் ஆயுதம் தாங்கிய படையினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

காலை 9.00 மணியளவில் நூற்றுக்கணக்கான மாணவர்களும் பொதுமக்களும் திரண்டு கோஷங்களை எழுப்பியவாறு இராணுவத்தினரை நோக்கி வந்ததை அடுத்து, கல்லூரி வீதியில் குவிக்கப்பட்டிருந்த படையினர் அங்கிருந்து பின்வாங்கிச்சென்று முகாம்களுக்குள் புகுந்துகொண்டனர். அதன் பின்னர் அவர்களின் தடையரண் முன்பாகக் கூடிய மாணவர்களும் பொதுமக்களும் இராணுவத்தினரை நோக்கி கற்களையும் தடிகளையும் வீசித் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

அதேபோன்று நெல்லியடிச் சந்திப் பகுதியிலும் நூற்றுக்கணக்கில் கூடிய மாணவர்களும் பொதுமக்களும் ஆக்கிரமிப்பு சக்திகளை வெளியேறுமாறு கோரி கோஷங்களை எழுப்பியவாறு இராணுவத்தினரை நோக்கி ஊர்வலமாகச் செல்ல முயன்றனர். இதனை அடுத்து, அச்சமடைந்த இராணுவத்தினர் வான்நோக்கி துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதனால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சிதறி ஓடினர். அந்த நெரிசலில் கீழே வீழந்தும், சுவர்களில் மோதியும் சிலர் சிறு காயங்களுக்கு உள்ளாகினர்.

மாணவர்களின் போராட்டம், இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூடு ஆகியன காரணமாக பகல் 11.00 மணியளவில் பருத்தித்துறை, நெல்லியடி நகரங்களிலும் அதனை அண்டியுள்ள பகுதிகளிலும் கடைகள் அனைத்தும் மூடப்பட்டன. வீதிகள் வெறிச்சோடின. கனரக ஆயுதம் தாங்கிய படையினர் மட்டுமே வீதிகளை நிறைத்துக் குவிக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையால் அப்பகுதியெங்கும் பெரும் பதற்றம் நிலவியது. வெளியே நடமாடமுடியாத அச்சம் காரணமாக மக்கள் வீடுகளுக்குள் முடங்கினர். யாழ்.நகரப்பகுதியில் இருந்து பருத்தித்துறை நோக்கிச் செல்லும் பஸ்களின் சேவைகள் ரத்துச் செய்யப்பட்டன. இதனால் காலையில் அரச அலுவலகங்களுக்கும் தேவைகளுக்கும் என யாழ். நகருக்கு வந்தவர்கள் வீடு திரும்புவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

பாடசாலைகளை 'அண்மித்துள்ள இராணுவத்தினர் அந்த இடங்களை விட்டு வெளியேறுவதற்கு மாணவர்கள் விதித்திருந்த ஒரு நாள் காலக்கெடு நேற்றுடன் முடிவடைந்தது. எனினும் படையினரின் வெளியேற்றம் ஏதும் இடம்பெறவில்லை. இதனால் யாழ். குடாநாடு முழுவதும் மாணவர்கள் இன்று போராட்டத்தில் குதிப்பர் என்று மாணவர் பிரதிநிதிகளும் அமைப்புக்களும் தெரிவித்துள்ளன. அறிக்கைகளையும் விடுத்துள்ளன.

(ஐ-70-173-15-78)



# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

நீராவியடி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த
நாகேந்திரன்-காயத்ரி
தம்பதியரின் ஏக புத்திரன்

**புருஷோத்தமன்**

அவர்கள் தனது முதலாவது பிறந்தநாளை இன்று (07.12.2005) புதன்கிழமை தமது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை கொண்டலடி விநாயகர் அருள் பெற்று பல்கலையும் கற்று சகல சௌபாக்கியங்களும் பெற்றுப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க வாழ்கவென வாழ்த்தும்...

அன்புள்ளங்கள் அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணன்மார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள்.




44/8, கல்லூரி ஒழுங்கை,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
தா.தில்லைநாதன் (சிவம்)
(அம்மப்பா)


# சின்னஞ்சிறு விளம்பரங்கள்


### விற்பனைக்கு

200ஐ தொடர் இலக்கமாகக் கொண்ட ஆட்டோ ஒன்று உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: றொசான், 18/9, மூத்த விநாயகர் வீதி, நல்லூர். (43650)

### தவறிவிட்டது

Nokia 3120 மொடல் கையடக்கத் தொலைபேசி ஒன்று முகமாலைக்கும் கொடிகாமத்திற்கும் இடையில் 05.12.2005 பிற்பகல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். T.P. 222 3629, 0777686086 தகுந்த சன்மானம் வழங்கப்படும். (43721)

குணநாதன் நிர்மலகாந்தன் என்பவருடைய தே. அ. அ. (812492845V) 03.11.05 அன்று கஸ்தூரியார் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்: பிள்ளையார் இன் இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (43639)

கச்சேரியடியைச் சேர்ந்த செல்வராசா செல்வறூபன் என்பவரது தே.அ.அ. 05.12.2005 திங்கட்கிழமை யாழ்நகரப் பகுதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் இல.09, நீக்கஸ் லேன், கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். T.P. 077 3276277. (43713)

### விற்பனைக்கு

தென்மராட்சியின் முன்னணி கணனி நிறுவனம் இயக்க நிலையில் முழுமையாக விற்பனைக்கு
தொடர்பு: 021-222 2715(6-8 a.m)
(43636) (21.16.19)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக்கொள்ளலாம் (Electronic நிறுவை). தொடர்பு: (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (43384)

### கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 12.12.2005 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக்கிளைகளிலும், உடுவில் பாம் சென்ரர் - உடுவில், நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி நல்லூர்
(43385)

**COMPUTER EXPRESS**
Institute of Information Technology
No 15, Sirambiyadi Lane,Jaffna.
Tel:- 021-2228250, 0777-222422

அனைத்துக் கணனிக்கற்கை நெறிகளிற்கும் இவ் ஆண்டிற்கான இறுதிப் பிரிவுகள் ஆரம்பம்.
December 11ம் திகதிக்கு முன்னர் பதிவுசெய்து கொள்ளவும். 80% Off

வகுப்புக்கள் ஆரம்பம்:-
Batch I(a) :- 09/12/2005 - 09.30-11.30
Batch II(a) :- 10/12/2005 - 11.30-12.30
Batch III(a) :- 11/12/2005 - 02.00-03.00



*பண்புமிகுந்த சேவையாளனுக்கு நல்லூர் லயன்களின்*

# இதய அஞ்சலி

## அமரர் லயன் கிருஷ்ணபிள்ளை துரைராஜா
**(ஓய்வுபெற்ற பிரதம பொறியியலாளர். R.D.D)**



எமது லயன்ஸ் கழகத்தின் மூத்த உறுப்பினர் லயன் கி.துரைராஜா அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு நாம் கலங்கி நிற்கிறோம்.

அமரர் லயன் துரைராஜா அவர்கள் எமது கழகத்தின் மூத்த உறுப்பினர் மட்டுமல்லாது கழகத்தின் தலைவராகவும் பிராந்திய மட்டத்தில் பல உயர் பதவிகளையும் வகித்தவராவார். சிறந்த ஒரு புத்தி ஜீவியும் ஒரு சமூகத் தொண்டாளனுமாகிய அமரர் லயன் துரைராஜா அவர்கள் எமது கழகத்தினால் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டங்களில் முன்னின்று உழைத்தவராவார். அன்னாரின் மறைவு நல்லூர் லயன்ஸ் கழகத்திற்கு ஒரு பேரிழப்பாகும்.

அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினருக்கு எமது கழகத்தின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மசாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி/46652) (21.32.16.19)

**தலைவர், செயலாளர், பொருளாளர்,**
**பணிப்பாளர் சபை கழக உறுப்பினர்கள்.**
**நல்லூர் லயன்ஸ் கழகம், யாழ்ப்பாணம்.**


# நவாலி விவசாயிகளுக்கு கடன் உதவி

நவாலிப் பகுதி பெரும்போக நெற்செய்கையாளர்களுக்கு மானிப்பாய் இலங்கை வங்கிக் கிளை இவ்வருடம் கூடுதலான கடன்களை வழங்க முன்வந்துள்ளது.

இவ்வங்கி கடந்த வருடம் இவர்களுக்கு வழங்கிய விவசாயக் கடனை அனைவரும் தவணைமுறையில் ஒழுங்காகச் செலுத்தி முடித்துள்ளனர். இதனால் இம்முறை அதிக கடனை வழங்குவதற்கு அதற்குரிய படிவங்களை நவாலி விவசாய சம்மேளனத்திடம் வழங்கியுள்ளது.

அத்துடன் வங்கியின் ஆலோசனைக்கிணங்க கடன் பெறுவதற்கு விவசாய சேமிப்பு கணக்குகளை வங்கியில் சகலரும் திறந்துள்ளனர்.

(த-100)


**Refresh System**

*புதிய, பழைய கணனிகள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும். தொடர்பு: சுதுமலை,* **மானிப்பாய், 077-6279671, 077-3253104.**
(43247)(21.19.16)



## வடக்கு - கிழக்கு மாகாண சபை
### சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான மீள் கட்டுமானத் திட்டம் (TAARP)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
"ஆ.அ.வ" கொடை இல.00006 - **SRI (SF)**
யாழ்.மாவட்ட நிர்மாண வேலைகளுக்கான

## கேள்வி அறிவித்தல் - இல: 02

1. சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கான மீள் கட்டுமானத்திட்டத்தின் (TAARP) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து("ஆ.அ.வ") கொடையொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின்கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இதன் பின்னகத்துத் தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் **NECORD,** கருத்திட்டத்தின் பணிப்பாளருக்காக யாழ்ப்பாண மாவட்டசெயலாளர் பின்வரும் ஒப்பந்தங்களுக்குத் தகுதிவாய்ந்த கேள்வி கோருவோரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகளைத் தற்போது கோருகின்றார்.

| இல. | ஒப்பந்த இனங் காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலைப் பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | JF/TAARP/CD/01 Package I | வடமராட்சியில் பொலிகண்டி கிராம அபிவிருத்திச் செயலகம் மீளமைத்தல் | M7 (கட்டடங்கள்) | 30,200.00 |
| 02 | JF/TAARP/CD/ 01 Package II | வடமராட்சியில் கெருடாவில் கிராம அபிவிருத்திச் செயலகம் மீளமைத்தல் | M7 (கட்டடங்கள்) | 30,200.00 |
| 03 | JF/TAARP/RD/ 01 | மருதங்கேணி ஆழியவளை "C" வகுப்பு வீதி (4 கி.மீ) புனரமைத்தல் | M5 (பெருந்தெருக்கள்) | 180,500.00 |

3 பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

i) நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (**ICTAD**) விருத்திசெய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

ii) இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக ("இக்ராட்"டுடன் **M7** இற்கு மேல் பதிவுசெய்தவர்களுக்கு மட்டும்) இருத்தல் வேண்டும்.

iii) கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின்போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் / அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்படவேண்டும்.

iv) "இக்ராட்" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.

v) மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக் கூடாது.

vi) ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராகஇருத்தல் வேண்டும்.

4. மேலே உள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தகாரர்கள் கேள்வி கோரமுடியும். ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் **NECORD** வேலைகள் அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.
5. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலதிக விவரங்களை *மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD, கச்சேரி, யாழ்ப்பாணத்தில* பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: **021– 2223625,** தொலைநகல்: **021- 2225163,** மின்னஞ்சல்: **neco[illegible]@sltnet.lk**
6. ஒப்பந்த ஆவணங்கள் டிசெம்பர் மாதம் 7ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 21ஆம் திகதி வரை காலை **9.30** மணியிலிருந்து பிற்பகல் **3** மணி வரை வேலை நாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000/- செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
7. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும், கேள்வியிடுவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்கவேண்டும் என்பதுடன் இது தொடர்பாக பந்தி 8 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம்,திகதி,மற்றும் நேரம் ஆகியவற்றிற்கு ஏற்ப ஒப்படைக்கப்படவேண்டும்.
8. அந்தந்த வேலைக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் "*தலைவர் , மாவட்டக் கேள்விச்சபை, NECORD, கச்சேரி, யாழ்ப்பாணம்*" இற்கு டிசெம்பர் மாதம் **28**ஆம திகதி பி.ப. **3** மணிக்கு முன்பாகக் கிடைக்கவேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
9. ஒப்பந்தகாரருக்குக் கேள்வி கோருவதற்கு வேண்டிய விளக்கத்தை அளிப்பதற்கான கூட்டமொன்று கச்சேரியில் டிசெம்பர் மாதம் **20**ஆம் திகதி பிற்பகல் **2** மணிக்கு நடைபெறும்.
10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்குத் தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

**க.கணேஸ்,**
**தலைவர், மாவட்டக் கேள்விச்சபை,**
**அரசாங்க அதிபர், யாழ்ப்பாண மாவட்டம்.** (C/4[illegible]5[illegible]1)(21.19.16)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2063, 222 3837.

# நோர்வேயின் பங்களிப்புக் குறித்து இலங்கையின் நிலைப்பாடு என்ன?

*“நாடு இன்று ஒரு கொந்தளிப்பு நிலையில் உள்ளது. எந்த நேரமும் அது குமுறி வெடிக்கலாம். இந்த நிலைமையை விரைந்து நேர் சீர்செய்யவேண்டும்.*

*“பொதுமக்கள் மத்தியில் - மனதில் - ஒருவிதப் பீதி நிலைமை ஏற்பட்டுள்ளது. அவர்கள் அச்சத்துடன் வாழ்கிறார்கள். எனவே, சமாதான நிலைமை பேணப்படுவதை விரைந்து உறுதிப்படுத்தவேண்டும்.”* - இவ்வாறு கூறியிருக்கின்றார் சர்வதேச மன்னிப்புச்சபையின் செயலாளர் நாயகம் ஐரின் சுபைடா கான் அம்மையார்.

இதையே நாமும் இப்பத்தியில் தொடர்ந்து தெரிவித்து வந்தோம். ‘நிழல் யுத்தம் நிஜயுத்தமாகின்றது’ என நேற்று இப்பத்தியில் சுட்டிக்காட்டியிருந்தோம்.

ஆனால், ஏற்பட்டுள்ள நிலைமையின் விபரீதத்தை சம்பந்தப்பட்டோர் இப்போதும் கூட உணர்ந்தவர்களாகத் தெரியவில்லை.

இப்போதைய யுத்தநிறுத்தம், எப்போது முறியும், மீண்டும் தீவிரப் போர் எப்போது வெடிக்கும் என்று தெரியாத பதற்ற - குழப்ப - நிலையே நீடிக்கின்றது. இப்போது வடக்கு, கிழக்கில் இடம்பெறும் வன்முறைகள் தெற்கேயும் கூடத் திரும்பலாம் என்ற அச்சமும் பல வட்டாரங்களில் நிலவுகின்றது.

யுத்தநிறுத்தம் நின்று, நிலைத்து, நீடிப்பதாயின் அது தொடர்பான உடன்பாடு முழு அளவில் கடைபிடிக்கப்பட வேண்டும். அது கடைப்பிடிக்கப்படுவதை உறுதிப்படுத்துவதில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும், அரசு - புலிகள் இடையே அமைதி நடவடிக்கைகளுக்கு அனுரணைப் பணி வகிக்கும் நோர்வேக்கும் கணிசமான பொறுப்புண்டு.

இவை இரண்டின் நிலைமையே இன்று சந்தேகத்துக்கு உரியதாக இருக்கும்போது அவற்றின் பங்களிப்புடன் நிலைநிறுத்தப்படவேண்டிய யுத்தநிறுத்தம் எப்படித் தாக்குப் பிடிக்கும் என்ற சந்தேகம் எழுவது இயல்பானதே.

இலங்கையில் புதிய ஜனாதிபதி பதவியேற்றிருக்கிறார். அவரின் தலைமையின் கீழ் புதிய அரசு, புதிய அமைச்சரவை, புதிய அதிகாரவர்க்கம் என்று எல்லாம் புதியனவாகவே பொறுப்பேற்றிருக்கின்றன. ஏன், அரச சமாதானச் செயலகத்துக்குக் கூட புதியவரே பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய போன்ற பௌத்த - சிங்களப் பேரினவாத சக்திகளின் ஆதரவில் தங்கி, அதன் மூலம் ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்த வெற்றியின் வாயிலாகவே ஆட்சியைப் பிடித்திருக்கிறார் மஹிந்த ராஜபக்ஷ.

இலங்கை இனப்பிரச்சினையில் அனுசரணைப் பணி வகிக்கும் பொறுப்பிலிருந்து நோர்வேயை விலக்கவேண்டும் என்ற முன் நிபந்தனையுடன்தான் இத்தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரித்து, அவரின் வெற்றிக்கு உதவியும் உறுதியும் அளித்தன இக்கட்சிகள்.

அப்படித் தெரிவாகி, ஆட்சிப்பீடம் ஏறியுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, தமது புதிய ஆட்சியை அமைத்துவிட்டார். அமைச்சர்கள், அதிகாரிகளை நியமித்துவிட்டார். பொறுப்புகளை உரியவர்களுக்கு பகிர்ந்தளித்து ஒப்படைத்துவிட்டார்.

ஆனால் அமைதி முயற்சிகள் தொடர்பாக ஒரு முக்கிய பணியை - அவசரமாகவும், அவசியமாகவும் செய்யவேண்டிய வேலையை- அவர் இன்னும் செய்யவே இல்லை. அந்த விடயத்தில் முடிவெடுப்பதை அந்தரத்தில் தொங்க விட்டு இழுத்தடிக்கின்றார் அவர்.

அது, புதிதாகப் பதவியேற்ற அவரது அரசு இனப்பிரச்சினைக்கான அமைதி முயற்சியில் நோர்வேயின் அனுசரணைப் பணி தொடர்வதை விரும்புகின்றதா, அது தொடரவேண்டுமா என்பதை அவர் இன்னும் தீர்மானிக்கவேயில்லை என்பதுதான்.

நோர்வேயில் புதிய அரசு பதவியேற்றவுடன், அந்த நாட்டின் அனுசரணைப் பணி இங்கு தொடரவேண்டும் என்று இலங்கையின் அப்போதைய ஜனாதிபதி சந்திரிகாவும், தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரனும் புதிய நோர்வேப் பிரதமருக்கு செய்தி அனுப்பியமை நினைவிருக்கலாம்.

அதுபோன்று இலங்கையிலும் புதிய அரசுத் தலைவரும் அவரது அரசும் பதவியேற்றவுடன் இது விடயத்தில் தமது நிலைப்பாட்டை நோர்வேக்கு உத்தியோகபூர்வமாகத் தெளிவுபடுத்தவேண்டும். தெளிவுபடுத்தியிருக்கவேண்டும். அதுவும் புதிய அரசுத் தலைவரின் கூட்டமைப்பில் உள்ள அவரது பிரதான சகாக்கள் நோர்வேயின் அனுசரணைப் பங்களிப்பு நிராகரிக்கப்படவேண்டும் என்று பகிரங்கமாக வலியுறுத்திவரும் நிலையில் தமது நிலைப்பாட்டை நோர்வேக்கு உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கவேண்டிய புதிய ஜனாதிபதியின் கடப்பாடு இரட்டிப்பாகின்றது.

ஆனால் இந்தப் பத்தி எழுதப்படும் இந்தச் சமயம் வரை அத்தகைய அனுசரணைப் பணியை வரவேற்கும் எந்த உத்தியோகபூர்வ அறிவித்தலையும் நோர்வே அரசுக்கு இலங்கையின் புதிய அரசுத் தலைவர் வழங்கினார் என்ற தகவலே இல்லை.

ஆக, முன்னைய இலங்கை அரசின் கோரிக்கையின் கீழ் தான் எடுத்த பொறுப்பை இப்போதும் பெயருக்குத் தொடர்கின்றது நோர்வே. அவ்வளவே. எனவே, அமைதி நிலைமை பேணப்பட வேண்டும், யுத்தநிறுத்தம் ஒழுங்காகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும், இணக்கத் தீர்வுக்கான பேச்சுகள் மீள ஆரம்பிக்கப்பட வேண்டும், அரசியல் தீர்வு நல்லிணக்கத்துடன் காணப்படவேண்டும், இறுதி உடன்பாடு எட்டப்படவேண்டும் என்றெல்லாம் நல்ல நோக்கங்கள் இருக்குமானால் அவற்றையெல்லாம் அடைவதற்குத் தேவையான -அவசியமான - கட்டாயமான -அனுசரணையாளர்களின் பங்கு, பணி, பொறுப்புக் குறித்து முதலில் தீர்மானிக்க வேண்டும். அது குறித்து இலங்கை அரசுத் தலைமை ஒரு முடிவு எடுக்காதவரை மற்றவை பற்றியெல்லாம் சிந்திப்பதில் அர்த்தமேயில்லை.

# மஹிந்தவின் அரசைக் கவிழ்ப்பதற்கு ரணில் - சந்திரிகா - பிரபா கூட்டுச்சதி!

## பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தீவிரப்படுத்தக் கோருகிறது ஜாதிக ஹெல உறுமய

கொழும்பு,டிசெ.7

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக ரணில் - சந்திரிகா - பிரபாகரன் ஆகியோரின் கூட்டுச்சதி இடம்பெறுவதாகக் குற்றஞ்சாட்டியிருக்கிறது ஜாதிக ஹெல உறுமய.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின்போது மேற்படி குற்றச்சாட்டை முன்வைத்தார் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் வண. அத்துரலியே ரத்னதேரர். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக ரணில் - சந்திரிகா - பிரபாகரன் ஆகியோர் கூட்டுச் சதியொன்றை மேற்கொண்டுவருகின்றனர்.

இதனைத் தடுத்து நிறுத்துவதற்காக கொழும்பு மற்றும் புறநகர்ப்பகுதிகளில் பாதுகாப்பு நடவடிக்கையை அதிகரித்துத் தேடுதல்களை மேற்கொள்ளவேண்டும். இந்த சதித்திட்டத்தின் ஓர் அம்சமாகவே யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவிற்கு அதிகப்படியான எந்தச் சலுகைகளும் வழங்கப்படக்கூடாது. அதனை நாம் ஆட்சேபிக்கின்றோம். சந்திரிகா நாட்டுக்கு உருப்படியாக எதனையுமே செய்யவே இல்லை.

எமது கட்சியின் உறுப்பினரான கொட்டகதெனிய பாதுகாப்பமைச்சின் ஆலோசகராக நியமிக்கப்பட்டமை தொடர்பில் பல விமர்சனங்கள் எழுந்துள்ளன. இந்தப் பதவியை நாம் கோரவில்லை. அது ஜனாதிபதி எடுத்த முடிவு.

- இவ்வாறு மேலும் கூறினார் வண. அத்துரலியே ரத்ன தேரர். (ஐ-க)

# பாதுகாப்பற்ற கிணறுகளால் ஏற்படும் உயிரிழப்புகளைத் தடுக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம்,டிசெ.7

பாதுகாப்பற்ற கிணறுகளில் பொது மக்கள் வீழ்ந்து உயிரிழக்கும் சம்பவங்கள் அதிகரித்திருப்பதால் அத்தகைய கிணறுகள் உட்பட நீர்நிலைகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரை யாழ்.நீதிவான் நீதிமன்றப் பதிவாளர் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக உதவி ஆணையாளருக்கு பதிவாளர் கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

பாதுகாப்பற்ற கிணறுகள் மற்றும் நீர்க்குண்டுகளில் பொதுமக்கள் வீழ்ந்து உயிரிழக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிகிறது. ஆகவே, பாதுகாப்பற்ற நீர் நிலைகள் குறித்த விவரம் திரட்டப்பட்டு அவற்றில் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

பாதுகாப்பற்ற கிணறுகளைச் சுற்றி உயரமாக சிறு பிள்ளைகள் எட்டமுடியாதவாறு - மதில் அமைக்கப்படவேண்டும். கிணறுகளின் மேற்குப் பகுதியைக் கம்பி வலை கொண்டு மூடவேண்டும்.

கிணறு உட்பட நீர்நிலைகளுக்குள் தவறி வீழ்பவர்கள் கரையேற வசதியாக படிகள், கைப்பிடிக் கம்பிகள் அமைக்கலாம்.

இத்தகைய நடவடிக்கைகளை கூடிய விரைவில் மேற்கொள்வது மேலும் உயிரிழப்புகளைத் தடுக்க உதவும்.

இவ்வாறு பதிவாளர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (ஒ-185)

# இராமநாதன் நுண்கலைக் கழக அனுமதிப் பரீட்சை திகதி மாற்றம்

யாழ்ப்பாணம்,டிசெ.7

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக் கழக இசை,நடன கற்கை நெறிகளுக்கான அனுமதிப் பரீட்சைகளில் யாழ்ப்பாண மாவட்ட மாணவர்களின் பரீட்சைத் திகதிகளில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்று யாழ். பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்துள்ளார். ஆயினும் வெளிமாவட்ட மாணவர்களுக்கான பரீட்சைத் திகதியில் மாற்றம் எதுவும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெற்ற யாழ். மாவட்ட மாணவர்களுக்கு பின்வரும் ஒழுங்குகளில் பரீட்சைத் திகதிகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

நடனம் கற்கைநெறிக்கு தெரிவு செய்யப்பட்ட யாழ்.மாவட்ட மாணவர்களுக்கு இம்மாதம் 5ஆம் 6ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த அனுமதிப் பரீட்சைகள் எதிர்வரும் 11 ஆம் திகதியும் இம்மாதம் 7ஆம் திகதி நடைபெறவிருந்த பரீட்சை எதிர்வரும் 12 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

இசை, வாய்ப்பாட்டு கற்கை நெறிகளுக்கு தெரிவுசெய்யப்பட்ட யாழ். மாவட்ட மாணவர்களுக்கு இம்மாதம் 5ஆம், 6ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த அனுமதிப்பரீட்சைகள் எதிர்வரும் 11 ஆம் திகதியும் -

இம்மாதம் 7ஆம் 8ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த அனுமதிப் பரீட்சைகள் எதிர்வரும் 12 ஆம் 13ஆம் திகதிகளிலும் நடைபெறவுள்ளன.

இதேவேளை- நடனம், இசை, வாய்ப்பாட்டு, வயலின், வீணை, மிருதங்கம், பண்ணிசை ஆகிய பாடநெறிகளுக்குத் தெரிவு செய்யப்பட்ட வெளிமாவட்ட மாணவர்களுக்கும் வயலின், வீணை,மிருதங்கும் பண்ணிசை ஆகிய பாடநெறிகளுக்குத் தெரிவுசெய்யப்பட்ட யாழ்.மாவட்டம மாணவர்களுக்கும் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட திகதிகளில் மாற்றமில்லை எனவும் யாழ்.பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்துள்ளார். (ஜ-12-14)

# பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மாவீரர் நாளன்று பட்டாசுச் சத்தம்!

## பாதுகாப்பு அலுவலர்கள், பொலீஸார் விசாரணை

கொழும்பு,டிசெ.7

தமிழர் பகுதிகளில் கடந்த மாதம் 27ஆம் திகதி கொண்டாடப்பட்ட மாவீரர் நினைவு தினத்தை முன்னிட்டு கடந்த 26ஆம் திகதியன்று நள்ளிரவு 12 மணிக்கு பேராதனைப் பல்கலைக்கழகத்திலுள்ள ஹில்டா ஒபயசேகர மண்டபத்தில் கேட்ட பட்டாசுகளின் சத்தம் தொடர்பாக பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்போடு பேராதனைப் பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

‘லங்காதீப’ சிங்களப் பத்திரிகை இத்தகவலை வெளியிட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக உடனடி விசாரணை ஒன்றை மேற்கொள்ளுமாறு பல்கலைக்கழக மாணவர் சங்கம் மற்றும் சில மாணவர்கள் கோரிக்கை விடுத்தனர். அதனை அடுத்து பல்கலைக்ழக மண்டபங்களின் தலைவர்கள் மற்றும் பல்கலைக்கழக பாதுகாப்புப் பிரிவு இணைந்து வெடிகள் கொளுத்தப் பட்டதாகச் சந்தேகிக்கப்பட்ட அறை ஒன்றில் சோதனை செய்தனர். எனினும் எது விதமான தடயங்களும் அங்கு காணப் படவில்லை.

இதேவேளை -

சோதனை முடிந்த சிறிது நேரத்தின் பின் மூடப்பட்டிருந்த அந்த அறை உடைக்கப்பட்டு அங்கிருந்த ஒரு தொகை இறுவட்டுக்கள் மற்றும் செல்லிடத் தொலைபேசி என்பன களவாடப்பட்டுள்ளன என்று பேராதனைப் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

- இவ்வாறு ‘லங்காதீப’ செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-206)

## நன்கொடை வழங்க வசதியில்லை

# கல்வி கற்க முடியாத நிலையில் நலன்புரி நிலையச் சிறார்கள்

இடம்பெயர்ந்தோருக்கான நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள சிறுவர்கள் பலரும் உரிய வயதடைந்தும் பாடசாலைகளில் சேர்க்கப்படாதுள்ளனர். பாடசாலை நிர்வாகங்கள் மாணவரைச் சேர்ப்பதற்கு நன்கொடை கேட்பதாகவும், அதனை வழங்கும் வசதி இல்லாததாலேயே பல சிறார்கள் பாடசாலைகளில் சேர்க்கப்படவில்லை என்றும் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்கள் கூறுகின்றனர்.

இடம்பெயர்ந்து வறுமையில் வாடும் குடும்பங்களே நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர். அவர்கள் தமது பிள்ளைகளைப் பாடசாலைகளில் சேர்க்க நன்கொடை வழங்க முடியாதுள்ளனர். இவ்வாறு அவர்கள் மேலும் கூறினர்.

சிறுவர், மேம்பாடு அபிவிருத்திக்கென அரசு மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் குடாநாட்டில் இயங்குகின்றன என்றும்-

ஆனால் அவற்றின் அலுவலர்கள் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்கள் குறித்து அக்கறை செலுத்தியிருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்காதென்றும்-

மேலும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-68)

**நாளை**

கார்த்திகை 23
வியாழக்கிழமை
08.12.2005
திதி: ஸப்தமி
காலை : 07.29 வரை
நட்சத்திரம் : சதயம்
பின்னிரவு : 02.17 வரை
சுபநேரம் : 07.47- 09.17
ராகுகாலம் : 01.47 - 03.17
(யாவும் பழைய நேரப்படி)

# மழைகாலத்தில் பாதீனியம் வேகமாக பரவும் அபாயம்!

## விவசாய அதிகாரி எச்சரிக்கை

மழைகாலத்தில் பாதீனியம் வேகமாகப் பரவும் அபாயமிருப்பதால் விவசாயிகள் இது குறித்து அதிக கவனத்துடன் செயற்படவேண்டும். இவ்வாறு யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாதீனியம் செடியின் பரம்பல், அதனால் பயிர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் ஆகியவை குறித்தும், பாதீனியம் செடியைக் கட்டுப்படுத்த விவசாயிகள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விவசாயத் திணைக்களம் கருத்தரங்கு போன்றவை மூலம் அறிவுறுத்தி வருகிறது. பாதீனியம் தொடர்பாக விவசாயிகள் கவனம் செலுத்துவது அவசியம். அதிலும் மழை காலத்தில் பாதீனியம் வேகமாகப் பரவுவதால் தற்போது விவசாயிகள் இதில் அதிக அக்கறை செலுத்தவேண்டும். - இவ்வாறு அதிகாரி மேலும் கூறினார். (ஒ-14)

**உதயவாக்கு**

மௌனம் என்பது அமைதியாக இருப்பது மட்டுமல்ல. மனதை ஒரு நிலைப்படுத்தி வைத்திருப்பதும் ஆகும்.

- ஓர் அறிஞர்.

# தலைவர் பிரபாவின் உரையை வழிமொழிந்து பின்பற்ற வேண்டிய நிலையில் சிங்கள அதிபர்

## புலிகள் பிரமுகர் பாலகுமாரன் கருத்து



கிளிநொச்சி,டிசெ.7

தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரை மஹிந்த ராஜபக்ஷவுக்கு சிக்கலைக் கொடுத்திருக்கிறது. தலைவரின் உரைக்குப் பின்னால் அதை வழிமொழிந்து நடக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலை அவருக்கு ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறு தெரிவித்தார் விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் வே.பாலகுமாரன்.

புலிகளின் குரல் வானொலியில் கடந்த 3ஆம் திகதி நடைபெற்ற அரசியல் அரங்கம் பகுதியில் கா.வே.பாலகுமாரன் ஆற்றிய உரையில் இந்த விளக்கத்தை அளித்துள்ளார்.

மாவீரர் நாளில் ஏதோ புதிய பூகம்பம் வெடிக்கப் போகிறது என்று கூறப்பட்ட எதிர்பார்ப்பிற்கு அப்பால் மீண்டும் வித்தியாசமான ஒரு சூழல் மாவீரர் நாளுக்கு பின்னர் ஏற்பட்டுள்ளது. இது வரை நிகழ்த்தப்பட்டது போன்ற மாவீரர் நாள் உரை அல்ல அது. நம்பிக்கைக்குரிய ஒரு பொறுப்பாளரின் உரை என்று அதனை சுருக்கமாகக் கூறலாம். தமிழீழ மக்களுக்கு என்பதை விட சிங்கள தேசத்துக்கும் சர்வதேசத்துக்குப் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை அது.

கார்ள் மார்க்ஸ், பொதுவுடமைக் கட்சியை உருவாக்கிய காலகட்டங்களில் வினா-விடையை வெளியிட்டார். தலைவரின் மாவீரர் நாள் உரையானது எல்லாவித கேள்விகளுக்குமான விடையை தன்னகத்தே கொண்டுள்ளது.

உண்மையில் அந்த உரை என்பது பட்டயம் போல், பிரகடனம் போல் ஆகிவிட்டது.

உரைக்குப் பின்னால் என்ன நிகழப்போகிறது, என்ன திசையில் செல்லப்போகிறது என்பதற்கான அறிகுறிகள் இப்போதே தென்படுகின்றன.

நாங்கள் முன்னர் கூறியதுபோலவே தமிழீழத்தில் அரங்கேறுகின்ற ஒவ்வொரு பெரிய காட்சியும் ஒரு ஒத்திசைவை அல்லது பின்னாடி நிகழப்போகும் சம்பவங்களுக்கு முன்னோடி போல் - நிகழ்தகவுபோல் தமிழீழ மக்களுக்கு மட்டுமல்ல இந்தியாவுக்கும் ஏனைய நாடுகளுக்கும் ஒரு வித்தியாசமான செய்தியைக் கூறிவருகிறது. தேர்தலுக்கு முன்பாக அல்லது தேசியத் தலைவரது உரைக்கு முன்பாக சிங்களத்தில் என்ன குதியாட்டம் நடந்தது... ஆனால் இப்போது சிங்களத்திலேயே ஒரு பேச்சையும் காணோம். மூச்சையும் காணோம். எல்லோரும் மௌனித்துப் போய் விட்டார்கள். அந்த அளவுக்கு 'இந்த உரையினது தாக்கம், நீண்ட காலத்திற்கு வேலை செய்யும் வகையிலேயே அமைந்துள்ளது.

எல்லோருடைய மனச்சாட்சியையும் மனதையும் இறுகப் பிளக்கும் பாறையைப் போல் பிளந்து அவர்களுக்கு உள்ளே சென்று மனச்சாட்சியையும் மனதையும் குழப்பும் வகையில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

எல்லோரும் எதிர்பார்த்தார்கள்... மஹிந்த வந்தவுடனேயே ஏதோ பெரியதாய் செய்யப் போகிறார் என எதிர்பார்த்தார்கள். முன்னர் இருந்த தலைவர்களைப் போலவே சிங்களப் பெருந்தேசிய இனவாதத்துக்கு தீனிபோடவும் ஆட்சியைத் தக்க வைத்துக்கொள்ள சமநிலையைப் பேணுகிற வகையிலுமாக அறிக்கைகளை வெளியிட முற்படும் வகையிலும் இருப்பினும் எங்களது செயற்பாடுகள் இன்று மஹிந்தவுக்கு ஒரு சிக்கலைக் கொடுத்திருக்கிறது என்று நம்புகிறோம்.

அவர் நினைத்திருந்தால் இவ்வளவு கடுமையான நிலைப்பாடுகளை மேற்கொண்டதற்கு பின்னால் புலிகளை சீண்டி, சமநிலையைத் தவறச் செய்து சிக்கலான சூழலை உருவாக்கி தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஒட்டுமொத்தமாக ஒடுக்கியிருக்கலாம்.

ஆனால் மிக குறுகியதும் நீண்ட ஆழமானதுமான வல்லுநரின் ஆராய்ச்சியிலேயே உருவாக்கப்பட்ட மஹிந்தவின் சிந்தனைகளோ இன்று சிதறடிக்கப்பட்டிருக்கின்றன.

இன்று தலைவரது உரைக்குப் பின்னால் அதை வழிமொழிந்து பின்பற்றி நடக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை மஹிந்தவுக்கு ஏற்பட்டுள்ளது.

அதுபோலவே ஜே.வி.பியும்தான். தேசியத் தலைவரது உரை, அவர்கள் அனைவருக்குமே சாட்டையடியாக இருக்கிறது.

ஜே.வி.பியினது உபாயங்களும் உத்திகளும் தூக்கி எறியப்பட்டிருப்பதால் அது தட்டுத்தடுமாறிக்கொண்டிருக்கிறது. இப்போது ஜே.வி.பிக்கும் மஹிந்தவுக்குமான உறவுகள் முட்டவேண்டிய காலம் தோன்றிவிட்டது. தலைவரின் உரையூடாக சிங்களதேசம் மட்டுமல்ல. உலகமே இன்று கலகலத்துப்போய் விட்டது.

தமிழ் மக்கள், சிங்களத் தேசம் என்பதற்கு அப்பால் சர்வதேச கொள்கை வகுப்பாளர்களை நோக்கி எழுதப்பட்டதாக அவரது உரை அமைந்துள்ளது.

உலக வரலாற்றில் குடியேற்ற காலகட்டத்தைத் தாண்டி, உலகப்போர்களைத் தாண்டி, பனிப்போர்களைத் தாண்டி ஒவ்வொரு காலகட்டத்திலும் நடைபெற்ற விடுதலைப் போராட்டங்களுக்கு பொதுவான தன்மைகள் இருந்தன. ஆனால் இந்தப் புதிய ஒழுங்கிலே நாம் செயற்படுகின்ற விதம் பார்த்து உலகமே மிகப்பெரிய திகைப்புக்குள்ளாகி இருக்கிறது. எங்களை எந்த வழியிலும் எந்த நுணுக்கத்திலும் சென்று கையாள முடியாது என்ற நுணுக்கமான நிலைப்பாட்டை தேசியத் தலைவர் உருவாக்கியுள்ளார்.

தலைவர் கூறியதில் முக்கியமானது என்பது 'குறுகியகால இடைவெளி' என்பது. இந்த குறுகியகால இடைவெளி என்ற சொல் மிகப்பெரிய இடைவெளியை நீண்டகாலத்திற்கு சிங்களத் தலைமைக்கும் சர்வதேசத்திற்கும் கொடுக்கப்போகிறது என்று நினைக்கிறேன்.

இந்த உரையானது சர்வதேச ரீதியில் அறிவார்ந்த ஒரு விடுதலைப் போராட்டத்தினது உச்சமான வெளிப்பாடாக இருக்கிறது. தேசியத் தலைவரது உரையை எவரேனும் கண்டனம் செய்திருக்கிறார்களா? ஒரு கண்டனமும் கூட தெரிவிக்க இயலாத வகையிலேயே ஒரு விடுதலைப் போராட்டத்தின் வெளிப்பாடாகத் தலைவரின் மாவீரர் நாள் உரை அமைந்துள்ளது. தலைவரின் உரையூடாக நிகழப்போகிற விபரீதங்கள் அல்லது மாற்றங்கள் என்பன மெல்ல மெல்ல உலகத்திற்கு உறைக்கத் தொடங்கியிருக்கிறது. அடுத்த கட்ட நடவடிக்கை என்ன என்பதை அறிய முடியாமல் தயங்கி, தயங்கி நிற்கிறார்கள். இப்போது இந்திய மாநாடு, இணைத் தலைமை நாடுகளின் மாநாடு. சொல்ஹெய்ம் மாநாடு என்று கூட்டப்பட்டு வருகின்றன... தலைவரது உரைக்கு எவ்வாறு முகம்கொடுப்பது என்பது சர்வதேசத்திற்கு உள்ள சிக்கலாக இருக்கிறது. இப்படியான ஒரு சிக்கலான சூழ்நிலையை உருவாக்குவதனூடாகத் தான் எமது விடுதலை வென்றெடுக்கப்படும் என்பது தெளிவான செய்தி. ✱

### பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் சிறை வழங்கிய

# தனது தீர்ப்பில் ஒன்றை உயர் நீதிமன்றம் மீளாய்வு செய்வது குறித்து ஆராய்கிறது

கொழும்பு, டிசெ.7

இலங்கையின் மிக உச்ச அதிகாரமுடைய நீதி ஆயமான உயர்நீதிமன்றம், தான் வழங்கிய ஒரு தீர்ப்பைத் தானே மீளாய்வு செய்யலாமா என்ற விடயத்தை விசாரணைக்கு எடுத்திருக்கிறது.

இலங்கையில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு இறுதியானதும், உறுதியானதுமாகும். அதை மீளாய்வு செய்வதற்கு தனியான சட்ட ஏற்பாடு ஏதுமில்லை. எனினும், வரலாற்றில் முதல் தடவையாகத் தனது தீர்ப்பை மீளாய்வு செய்வது குறித்து உயர்நீதிமன்றம் விசாரிக்கின்றது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின்கீழ் நீண்டகாலச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட நல்லரட்ணம் சிங்கராயர் என்ற தமிழர் தொடர்பானதே இந்த விடயமாகும்.

இவருக்கு மேல்நீதிமன்றம் வழங்கிய தண்டனை மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் உறுதிசெய்யப்பட்டிருந்தது. அதையும் ஆட்சேபித்து அவரின் சார்பில் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம், அவரது தண்டனைக் காலத்தை சற்றுக் குறைத்து இருபது ஆண்டுகள் சிறைவிதித்துத் தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பை ஆட்சேபித்து அவரின் சார்பில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையத்தில் முறையீடு செய்யப்பட்டது.

அந்த முறையீட்டை விசாரித்த ஆணைக்குழு இவருக்கு எதிரான வழக்கின் விசாரணையில் இடம்பெற்ற பல்வேறு குறைபாடுகள், முறைகேடுகள், நியாயப்படுத்த முடியாத நீண்ட தாமதங்கள் போன்றவற்றை விளக்கமாகச் சுட்டிக்காட்டி தீர்ப்பைக் கடுமையாகச் சாடியது. சம்பந்தப்பட்ட நல்லரட்ணம் சிங்கராயரை விடுதலை செய்யும்படி அல்லது மீள் விசாரணையை உரிய முறையில் நடத்தும்படி ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் இலங்கை அரசைக் கோரியது. தமது இந்த சிபாரிசு தொடர்பாக இலங்கை அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்தும் தெரியப்படுத்தும்படி ஆணையம் கேட்டுக்கொண்டது.

இந்த நிலையிலேயே - இதன் அடிப்படையிலேயே - தான் வழங்கிய தீர்ப்புச் சம்பந்தப்பட்ட விடயத்தை உயர்நீதிமன்ற பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்கள் நிஹால் ஜயசிங்க, நிஸ்ஸங்க உடலகம, நிமால் திஸநாயக்கா, நிமல் காமினி அமரதுங்க ஆகிய ஐந்து பேர் கொண்ட ஆயத்தின் முன் நேற்று முன்தினம் எடுத்துக்கொண்டது.

ஏற்கனவே மூன்று நீதியரசர்கள் கொண்ட உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மீளாய்வு செய்யவோ, விசாரிக்கவோ, முடிவுசெய்யவோ அதே உயர்நீதிமன்றுக்கு சட்ட அதிகாரம் உண்டா என்ற கேள்வியை நீதியரசர்கள் விசாரணையின் ஆரம்பத்திலேயே எழுப்பினர்.

அத்தகைய தீர்ப்பு ஒன்றை மீளாய்வு செய்ய சட்டத்தில் இடமில்லை என்றார் அரசுத் தரப்பில் ஆஜரான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் யஸந்த கோதாகொட.

ஆனால், மனுதாரர் தரப்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி ஆர்.கே. டபிள்யூ. குணசேகர அதை மறுத்துரைத்தார். அவர் கூறியதாவது:-

மனித உரிமைகள் தொடர்பான ஐ.நாவின் சர்வதேச ஒப்பந்தத்தில் 1966 இல் இலங்கை ஒப்பமிட்டுள்ளது.

அதற்கமைய அந்த ஒப்பந்த ஏற்பாடுகளைக் கடைப்பிடிப்பதற்கு இலங்கை அரசு, நாடாளுமன்றம், நிறைவேற்று அதிகாரம், நீதிமன்றம் ஆகிய அனைத்துமே பொறுப்புடையவை.

அத்தகைய பொறுப்பைச் செயற்படுத்துவதற்கு உயர்நீதிமன்றம் வழிவழியாக - உள்ளீடாக - தனக்கு இருந்துவரும் விசேட அதிகாரத்தைப் பயன்படுத்த முடியும்.

ஓர் இராணுவமுகாம் மீதான தாக்குதல் தொடர்பாக மனுதாரரிடமிருந்து பெறப்பட்டதாகக் கூறப்படும் ஓர் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவருக்கு இத்தகைய தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது.

சம்பவம் நடந்து நீண்ட பல வருட கால தாமதத்துக்குப்பின் விசாரணை, புரியாத மொழியில் வாக்குமூலம் பதிவு, முறையற்ற விசாரணை எனப் பல விடயங்களை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் இவ்விடயத்தில் குறைபாடுகளாகச் சுட்டிக்காட்டியுள்ளது.

ஒருவர் வழங்கியதாகக் கூறப்படும் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை அவருக்கு எதிராகவே பயன்படுத்துவதாயின் நான்கு அடிப்படை விடயங்கள் அவசியம் என்பது சுட்டிக்காட்டத்தக்கது. இந்தக் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்றுக்கொள்ளும் 'வொயர் டயர்' விசாரணையில் இந்த நான்கு அம்சங்களும் கவனிக்கப்படவில்லை.

அந்த ஒப்புதல் வாக்குமூலம்-

★சம்பந்தப்பட்டவரால் சுயமாக விரும்பி அளிக்கப்பட்டதாக இருக்கவேண்டும்-

★அது உண்மையை விளம்புவதாக இருக்கவேண்டும்-

★அது நம்பகத்தன்மை உடையதாக இருக்கவேண்டும்-

★அது பொருத்தப்பாடானதாக இருக்கவேண்டும்-

இந்த நான்கு அம்சங்களும் மனுதாரர் விடயத்தில் கவனிக்கப்படவேயில்லை.

- இவ்வாறு மனுதாரர் தரப்பில் ஆஜரான சட்டத்தரணி தெரிவித்தார்.

சட்டத்தரணிகள் தமது எழுத்து மூல வாதத்தைச் சமர்ப்பிக்க வாய்ப்பளித்து வழக்கு ஜனவரி 25 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. (ஐ-க)

## மொரட்டுவ பல்கலைக் கழக அனுமதிப் பரீட்சை

வலி.வடக்கு,டிசெ.7

மொரட்டுவ பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் கட்டடக்கலை மற்றும் வடிவமைப்பு ஆகிய பட்டப் பாடநெறிகளுக்கான அனுமதிப் பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.

விண்ணப்பித்த மாணவர்களுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள் பரீட்சைப் பகுதிப் பதிவாளரால் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பரீட்சைகள் தொடர்பான மேலதிக விவரங்களை பல்கலைக்கழகப் பதிவாளருடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-86-202)

## தியான அனுபவம் பெறும் நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.7

இலங்கை பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தினரின் பட விளக்கக் கண்காட்சியும் தியான அனுபவம் பெறும் நிகழ்வும் எதிர்வரும் 10 ஆம், 11 ஆம் திகதிகளில் முற்பகல் 10 மணிக்கு பலாலி வீதியில் அமைந்துள்ள யாழ்.பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தில் நடைபெறவுள்ளன.

ஆன்மீகம் என்பது ஒரு மனிதனை நற்குணங்களின் அடிப்படையில் வாழவைப்பதும், வாழ்க்கையில் வரும் இன்ப, துன்ப, மேடு பள்ளங்களை இலகுவாகக் கடந்து சென்று நம் இலக்கினை அடையச் செய்யும் இலகுவான வழிமுறை என்றும், இதனால் ஆன்மீக வழியில் ஈடுபட்டு பேரின்பப் பெருவாழ்வு பெற, இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ-204)

## அச்சுவேலி நகரில் பயணிகள் மலசல கூட வசதி இன்றி அவதி

இடைக்காடு,டிசெ.7

அச்சுவேலி பஸ் நிலையத்தில் பொது மலசல கூடம் ஒன்று இல்லாமையால் பயணிகள் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

பஸ் நிலையத்தை அண்டி சந்தை, வியாபார நிலையங்கள், வங்கிகள் போன்ற பல முக்கிய நிலையங்கள் அமைந்துள்ளன. பல்வேறு தேவைகளின் நிமித்தம் இந்த நிலையங்களை நாடிவரும் மக்களும் பஸ் நிலையத்தில் காத்து நிற்கும் பயணிகளும் இயற்கைக் கடன்களைக் கழிப்பதற்கும் பெரும் சிரமங்களை அனுபவிக்கின்றனர்.

சந்தையின் உள்பகுதியில் அமைந்துள்ள மலசல கூடமும் சுகாதாரமற்ற முறையில் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

(ஐ-ரி-202)

# வாய்க்காலை சீரமைத்திருந்தால் வெள்ளத்தால் பயிரழிந்திருக்காது!

## வலி.மேற்கு விவசாயிகள் தெரிவிப்பு

வலி.மேற்கு,டிசெ.7

வலிகாமம் மேற்குப் பகுதியில் உள்ள அந்திரான் வாய்க்கால் சீராகப் புனரமைக்கப்பட்டிருந்தால் சமீபத்தில் பெய்தமழையினால் வெள்ளம் ஏற்பட்டு அதனால் நெற்செய்கைக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்காது என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் சுமார் 10 ஹெக்ரெயர் வயல் நிலத்தில் மேற்கொள்ளப்பட்ட பெரும்போக நெற்செய்கை வெள்ளத்தினால் அழிந்துள்ளது.

வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் இந்தஆண்டு ஆயிரத்து 208 ஹெக்ரெயர் வயல் நிலத்தில் பெரும்போக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டது. இதில் அராலி, வட்டுக்கோட்டை, சுழிபுரம் போன்ற இடங்களில் அண்மையில் பெய்தமழையினால் சுமார் 100 ஹெக்ரெயர் வயல்நிலத்தில் நெற்பயிர்கள் அழிந்துள்ளன என்று விவசாயிகளும் தொல்புரம் கமநல சேவை நிலையத்தினரும் தெரிவித்துள்ளனர்.

சுமார் 20 ஹெக்ரெயர் வயல் நிலத்தில் முழுமையாக நெற்பயிர்கள் அழிந்துள்ளதாகவும் வட்டுக்கோட்டை அந்திரான் வாய்க்காலிலுள்ள வயல் நிலங்களேமுழுமையாக அழிந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. அந்திரான் வாய்க்கால் உரிய முறையில் புனரமைக்கப்படாமையினாலேயே வெள்ளம் வழிந்தோடமுடியாமல் வயல்களுக்குள் தேங்கி நின்று நெற்பயிர் முழுமையாகச் சேதம் அடைந்ததாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அந்திரான் வாய்க்காலை அடுத்த ஆண்டு பெரும்போக நெற்செய்கைக்கு முன்னர் உரியமுறையில் புனரமைப்பதற்கு சம்பந்தப்பட்ட அனைவரும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இப்பகுதி விவசாயிகளும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ஒ-8-175)



கொக்குவில் மேற்கு சனசமூக நிலையம், சுப்பிரமணியம் மாலதி ஆரம்ப சுகாதார நிலையம் அவையிரண்டும் அண்மையில் திறந்து வைக்கப்பட்டன. இவ்விரு நிலையங்களையும் நிறுவிக்கொடுத்த திரு.திருமதி சுப்பிரமணியம் - மாலதி தம்பதிகளைப் பாராட்டி நிலையச் செயலாளர் செ.சண்முகசுந்தரம் பாராட்டுப்பத்திரம் வழங்குவதைப் படத்தில் காணலாம். அருகில் நல்லை ஆதீன முதல்வரும் காணப்படுகின்றார். (ஐ-49)

## சமுர்த்தி பற்றிப் புரியாததாலேயே மக்கள் அதனை வெறுக்கிறார்களாம்

வலி.வடக்கு,டிசெ.7

சமுர்த்தி நிவாரணம் குறித்து மக்கள் முழுமையாகப் புரிந்து கொள்ளாததாலேயே அதனை ஏற்க மறுக்கிறார்கள்.

- இவ்வாறு தெரிவித்தார் நல்லூர் பிரதேச சமுர்த்தி முகாமையாளர் தி.சந்திரதாசன்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:-

சமுர்த்தி நிவாரண முத்திரைக்காகத் தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களில் ஓர் அங்கத்தவருக்கு 250 ரூபாவும் இரண்டு அல்லது மூன்று அங்கத்தவர்களுடைய குடும்பத்திற்கு 350 ரூபாவும் நான்கு அல்லது ஐந்துபேருள்ள குடும்பத்திற்கு 600 ரூபாவும் ஐந்து குடும்ப அங்கத்தவர்களுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு ஆயிரம் ரூபாவும் சமுர்த்தி முத்திரையாக வழங்கப்படவுள்ளன.

இவற்றில் ஆயிரம் ரூபா முத்திரையைப் பெறும் குடும்பத்திற்கு 400 ரூபாவுக்குப் பொருள்கள் வழங்கப்படும். மீதி 360 ரூபா பணமாக வழங்கப்படும். மீதி 200 ரூபா கட்டாய சேமிப்பாகக் கிராமிய வங்கியில் இடப்படும். இந்தப் பணத்தை 5 வருடத்திற்கு பின்னர்தான் மீளப்பெறமுடியும். மீதியில் 30 ரூபா நலன்புரி நன்மைக்காகக் கழிக்கப்படும். இதனைக் கொண்டு அக்குடும்பத்தில் நிகழும் மரணச் சடங்குக்கு 5 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.அக்குடும்பத்தில் இடம் பெறும் முதல் திருமணத்திற்கு 2 ஆயிரம் ரூபாவும் இரண்டாவது திருமணத்திற்கு ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

குடும்பத்தில் யாராவது ஒருவர் நோய்வாய்ப்பட்டு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 7 நாள்கள் உள்நோயாளியாகத் தங்கிச் சிசிச்சை பெற்றால் ஆயிரத்து 500 ரூபா வழங்கப்படும்.

இதேவேளை, வீட்டு லொத்தர் என்ற திட்டத்திற்கு 10 ரூபா கழிக்கப்படுகின்றது.

யாழ். மாவட்டத்தில் 60 ஆயிரம்பேர் வரை சமுர்த்தி நிவாரணம் பெறுகின்றனர். முத்திரை வழங்கலின்போது மாதாந்தம் 3 பேர் லொத்தர் மூலம் தெரிவுசெய்யப்படுகின்றனர். இதன்படி வருடத்திற்கு 36 பேர் தெரிவாகின்றனர். இவர்களுக்குத் தலா ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வீடு கட்டவென வழங்கப்படும் - இவ்வாறு அதிகாரி விளக்கினார். (ஒ-180)

## பொதுசன உதவிப் பணம்

நல்லூர்,டிசெ.7

யாழ்ப்பாணம் மற்றும் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த - ஆனைப்பந்தி உப தபாலகத்தில் உதவிக் கொடுப்பனவுகளைப் பெறுவோர் தமக்குரிய கொடுப்பனவுகளை எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு ஆனைப்பந்தி உப தபாலதிபர் கேட்டுள்ளார். (எ-111)


## தென்மராட்சிப் பிரதேசத்துக்கான குவைத் யுத்த நஷ்டஈட்டுப் பட்டியல்

சாவகச்சேரி,டிசெ.7

1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஈராக் - குவைத் யுத்த நடவடிக்கைகளின்போது பாதிக்கப்பட்டு இதுவரை நஷ்டஈட்டுத் தொகை எதுவும் பெறாத தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்குட்பட்டவர்களில் பின்வருவோர் - தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் - திட்டமிடல் பிரிவு - மனித வள அபிவிருத்தி உதவியாளருடன் தொடர்புகொள்ளுமாறு தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார்.

பெயர் விவரம் பின்வருமாறு:-

டி.சக்திகுமரன் - கச்சாய் தெற்கு, கொடிகாமம், எஸ்.யோகராசா - கரம்பகம், எழுதுமட்டுவாழ், எஸ்.யோகராசா - நாவற்குழி, தச்சன்தோப்பு, ஆர்.செல்வராசா - நாவற்காடு, வரணி, கே.வை.நாகரத்தினம் - பாலாவி வடக்கு, கொடிகாமம், என்.விக்னேரன் - கைதடிவடக்கு, எம்.பற்பராசா - கைதடி வடக்கு, கைதடி, எம்.ரட்ணம் - பாலாவி கிழக்கு, கொடிகாமம், எம்.இராஜரட்ணம் மே/பா ஏ.நமசிவாயம், மிருசுவில் வடக்கு, பி.வி.செல்வரத்தினம் - பெரியகுளம் வீதி, சாவகச்சேரி, ஏ.பி.ஐயாத்துரை - கண்டி வீதி, கொடிகாமம், கார்த்திகேசு சுபாவதி - மீசாலை வடக்கு, வேம்பிராய், வி.ரி.வேலுப்பிள்ளை - ஐயனார் கோயிலடி, கொடிகாமம், வி.நடராசா - மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி, எஸ்.திருநாவுக்கரசு - தனங்கிளப்பு, வி.தனபாலசிங்கம் - மே/பா கே.நவரட்ணம் - தனங்கிளப்பு, தெற்கு, ஏ.அருமைராசா - கச்சாய் வீதி, எம். குணராசா - மட்டுவில் தெற்கு, கே. என். ஆசைப்பிள்ளை - சிவன் கோயில் வீதி, மட்டுவில் வடக்கு, வை.விஸ்வராசா - சரசாலை மத்தி, பி.ஈஸ்வரன் - மே/பா தச்சணாமூர்த்தி, பழைய சந்தை தெரு, மிருசுவில், ஆர்.யோகவதனி - நுணாவில் கிழக்கு, கல்வயல், கே.பெரியம்பிள்ளை- புதிய வீடமைப்புத் திட்டம் கெற்பலி- மிருசுவில், பி.ராஜரட்ணம் - மறவன்புலோ, சுப்பிரமணியம் சிவராசா - நுணாவில் கிழக்கு, கே.சக்தியசீலன் - கோயில்குடியிருப்பு, சாவகச்சேரி, எம்.கே.செல்வரத்தினம் - கற்குழி வடக்கு, எம்.நாகராசா- தனங்கிளப்பு, எம்.சந்திரலிங்கம் - மட்டுவில் கிழக்கு, மருதங்குளம், எஸ்.நகுலேந்திரன் - மட்டுவில் தெற்கு, ரி.பாலதேவி - ஏ.மித்ரா வீதி, நாவற்குழி, ஏ.ஆர்.கதிர்வேலு - கைதடி தெற்கு, கே.வைரமுத்து - கைதடி தெற்கு, கே.ரவீந்திரன் - வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமம், என்.கே.சந்திரன் - சாவகச்சேரி, கே.விஜயர்ட்ணம் - இல. 5, இராமலிங்கம் வனசந்தடி, மட்டுவில் தெற்கு, மார்க்கண்டன் - பிரபா வீதி, நுணாவில் வடக்கு, பி.ஏ.சண்முகம் - மீசாலை தெற்கு, மீசாலை. (ஒ-31)




## இலங்கைக்கான பாப்பரசரின் பிரதிநிதி சில்லாலை பங்கு மக்களைச் சந்தித்தார்

வலி.தென்மேற்கு, டிசெ.7

இலங்கைக்கான பாப்பரசரின் பிரதிநிதி அதிவண.மேதகு மாரியோ சாறியோ ஆண்டகை கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் சில்லாலை புனித கதிரைமாதா ஆலயத்திற்கு விஜயஞ்செய்தார்.

அப்போது அவருக்கு சில்லாலை பங்கு மக்களாலும், ஆலய பரிபாலன சபையினாலும் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

சில்லாலை பங்குத் தந்தை அருட்திரு. ஜுட் நிக்சன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற இவ்வரவேற்பு உபசாரத்திலும் வழிபாட்டிலும் யாழ். மறை மாவட்ட ஆயர் அதிவண.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, குருமுதல்வர் அருட்திரு.நீக்கலாஸ் அடிகளார், ஆயரின் செயலர் அருட்திரு. என்.சிலி றோஷான் அடிகளார், அருட்திரு.றோஹான் அடிகளார் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

பாப்பரசரின் பிரதிநிதி அதிவண. மேதகு மாரியோ சாறியோ ஆண்டகை உரையாற்றுகையில்,

35வருடகால ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் வண.யோசவ் வாஸ் அடிகளார் சில்லாலை கிராமத்தில் தங்கியிருந்து ஆற்றிய சமயப் பணிகள் என்றும் மறக்கமுடியாதவை. இங்குள்ள கத்தோலிக்க மக்களுக்கு அவர் ஆற்றிய சேவைகளும் ஆன்மீகப் பணிகளும் என்றும் நினைவு கூரத்தக்கவை. அக்காலப் பகுதியில் யாழ்ப்பாணத்து வேத சாட்சிகள் அவருக்குக் காட்டிய விசுவாசத்தையும் அதன் காரணமாக அவர்கள் அனுபவித்த துன்பங்களையும் நான் நன்கு அறிவேன்.

மக்கள் எத்தனை துன்பங்கள், துயர்கள் வந்தாலும் இறைவிசுவாசத்துடனும் அர்ப்பணிப்புடனும் வாழவேண்டும். பெருமை மிக்க சில்லாலைப் பகுதிக்கு வந்து இங்குள்ள மக்களைத் தரிசிக்க சந்தர்ப்பம் கிடைத்தது குறித்துப் பெருமகிழ்ச்சியடைகின்றேன் - என்றார்.

யாழ். மறை மாவட்ட ஆயர் அதிவண.தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளாரும் அங்கு உரையாற்றினார். தமது வருகையின் ஞாபகார்த்தமாக ஆலய முன்றிலில் மரக்கன்று ஒன்றையும் பாப்பரசரின் பிரதிநிதி நட்டுவைத்தார். (எ-135)




மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலயத்தில் வடமராட்சி லயன்ஸ் கழகம் நடத்திய இலவச வைத்திய முகாமில் பிரிட்டனைச் சேர்ந்த குழந்தை வைத்திய நிபுணர்கள், டாக்டர்கள் ரிஷ்ரன் பேட், ஜெசிக்கா பேட் ஆகியோர் சிறுவன் ஒருவனுக்குச் சிகிச்சை அளிப்பதைப் படத்தில் காணலாம். (படம்: வடமராட்சிச் செய்தியாளர்)

## கோண்டாவிலில் பொதுமண்டபம்

வலி.வடக்கு,டிசெ.7

கோண்டாவில் வலி.கிழக்கு கிராம அலுவலர் பிரிவீல் ஒன்பது லட்சம் ரூபா செலவில் பொதுப் பயன்பாட்டிற்கான மண்டபம் கட்டப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

கோண்டாவில் வட கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் க.அருணாசலம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி சு.தெய்வேந்திரம் கட்டடத்திற்கான அடிக்கல்லை நட்டார்.

வடக்கு - கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் கீழ் இக்கட்டடம் அமைக்கப்படுகின்றது. இக்கிராம அலுவலர் பிரிவு விவசாய கிராமமாகத் தெரிவுசெய்யப்பட்டு முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களின் ஒரு பகுதியாக இந்தப் பொதுக்கட்டடம் அமைக்கப்படுகின்றது. (ஒ-86)

## தமிழர் புனர்வாழ்வுக்கழகம் நடத்தும் ஒளிப்பட, புகைப்படப் போட்டிகள்

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் 20ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கழகத்தின் ஊடகப் பிரிவு ஒளிப்படம் மற்றும் புகைப்படத் தொகுப்புப் போட்டிகளை நடத்தவுள்ளது.

இருபது ஆண்டுகால போர்ச் சூழலாலும் இயற்கை அனர்த்தங்களாலும் மக்கள் எதிர்நோக்கிய இடப்பெயர்வுகள், சமூக, பொருளாதார ரீதியாக எதிர்நோக்கிய பின்னடைவுகள், மக்கள் மத்தியில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் முன்னெடுக்கப்பட்டுவந்த மனிதாபிமானப் பணிகள், மீள்வாழ்வுக்கான புனர்நிர்மாணச் செயற்பாடுகள் என முக்கிய அம்சங்களை உள்ளடக்கியதான காலப்பதிவுகளாக இத்தொகுப்புகள் அமைந்திருத்தல்வேண்டும்.

ஏற்கனவே, பதிவுசெய்யப்பட்ட காட்சிகளாயின் அவை எங்கு, எப்போது யாரால் பதிவுசெய்யப்பட்டன போன்ற சான்றுகள் இணைக்கப்படவேண்டும்.

ஒளிப்படத் தொகுப்பு 20-25 நிமிடங்களுக்கு உட்பட்டதாகவும் புகைப்படத் தொகுப்பு 35-40 படங்கள் கொண்டதாகவும் இருத்தல்வேண்டும்.

இரு ஆக்கப்பதிவுகளும் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் ஊடகப் பிரிவு, நடுவப் பணியகம், தமிழர் புனர்வாழ்வுக்கழகம், கிளிநொச்சி, இலங்கை' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது. (ஐ-202)

## வலுவற்றோர் தினவிழா

வலி.வடக்கு,டிசெ.7

வெண்புறா நிறுவனத்தின் ஏற்பாட்டில் சர்வதேச வலுவற்றோர் தின விழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

திருநெல்வேலி, பலாலி வீதியில் அமைந்துள்ள வெண்புறா செயற்கை உறுப்புகள் தொழில்நுட்ப நிறுவனத்தின் தலைவர் வி.ரி.சிவலிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நல்லூர் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஜி.மோகன், கிராம அலுவலர் சி.விஜயரெட்ணம், வெண்புறா நிறுவன நிர்வாக உத்தியோகத்தர் சி.லோறன்ஸ் ஆகியோர் இதில் சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்டார்கள்.

இந்த நிகழ்வில் வலுவிழந்தவர்களுக்குப் பரிசில் பொருள்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். (ஒ-86)

## அன்பான அழைப்பு

## மூத்த வங்கியாளர் கௌரவிப்பு-2005

தற்பொழுது சேவையிலுள்ள யாழ்.மாவட்ட வங்கிகளைச் சேர்ந்த ஊழியர்கள், தமது வங்கிகளிலிருந்து இளைப்பாறியும் அன்றி வேறு வழிகளில் விலகியும் சென்ற மூத்த வங்கியாளர்களை (ஓய்வூதியம் பெறும் விதவைகள் உட்பட) கௌரவிக்கும் வருடாந்த நிகழ்வானது எதிர்வரும் 15.12.2005 வியாழக்கிழமை நினைவு கூரப்படவுள்ளது.

இடம்: வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபம்.
(வர்த்தக வங்கி அருகில்)
இல. 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

நேரம்: முற்பகல் 10 மணி (புதியநேரம்)

பிரதம விருந்தினர்: உயர் திரு. எஸ்.மோகனதாஸ்
(துணைவேந்தர் யாழ்.பல்கலைக்கழகம்)

கௌரவிக்கப்படுவர்களையும் கௌரவிப்பவர்களையும் இவ்விழாவில் பங்குகொண்டு மதியபோசன விருந்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றனர்.

திரு.ரி.ரகு
உபதலைவர்

திரு.என். சிவரத்தினம்
செயலாளர்.

குறிப்பு: பங்கு கொள்பவர்கள் தமது வருகை பற்றி இதுவரை அறிவிக்காவிடின் தயவு செய்து செயலாளருக்கு அறிவித்து ஏற்பாடுகளுக்கு உதவி செய்யுமாறு வேண்டப்படுகின்றனர்.

வங்கியாளர் சங்கம், யாழ்.மாவட்டம்.
BANKERS ASSOCIATION, JAFFNA DISTRICT.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
21.09.1980

இறைவன் அடியில்
07.12.2001

செல்வன்
### பொன்னுத்துரை யூட்கஷன்

(வவுனியா, தமிழ் மத்திய மகாவித்தியாலய 2000 ஆம் ஆண்டு வர்த்தகப்பிரிவு மாணவன்)

'வாழ்வில் நேசித்தோம் மரணத்திலும் மறக்கவில்லை'

நீ வாழும் நாளில் எம் இதயங்களை கவர்ந்திழுத்தாய்
அதனாலே இறைவனுக்கும் உன்னிலே விருப்பம் வந்ததுவோ
உன்னுயிரை எடுத்தானோ...
பாழ்பட்ட பூமியிலே இருக்கப்பிடிக்காமல்
விண்ணுலகு சென்று வாழ நினைத்தாயோ
நீயின்றி வாழ்விலே சுவையில்லை, நிம்மதியில்லை,
நித்திரையில்லை, பிடிப்பில்லை வெறுமையாய் ஆகிவிட்டோம்
நீ விண்ணுலகம் சென்று நான்காண்டு சென்றதோ?
நாங்கள் மடியும் வரை உன் நினைவு
எங்களை விட்டு நீங்காது.

என்றும் உன் நினைவில்
அம்மா, அப்பா, அக்கா, அண்ணா,
அத்தான், மருமக்கள், உற்றார், உறவினர்.

(48614)

தேவாலய வீதி, 7ஆம் கட்டையடி, மல்லாகம். T.P.: 077 6146718.

தகவல்: க.பொன்னுத்துரை (அப்பா).

## அரச பாடசாலைகள் வெள்ளியன்று மூடப்படும்

குருநகர்,டிசெ.7

அரச பாடசாலைகள் யாவும் மூன்றாம் தவணை விடுமுறைக்காக நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையுடன் மூடப்படவுள்ளன. மீண்டும் முதலாம் தவணைப் பாடசாலைச் செயற்பாட்டுக்காக 2006 ஆம் ஆண்டு ஜனவரி 2ஆம் திகதி திங்கட்கிழமை அவை திறக்கப்படும்.

(ஐ-51)

## தொற்றுநோயியலாளர் தற்காலிக நியமனம்

குருநகர்,டிசெ.7

வைத்திய கலாநிதி ஏகாம்பரநாதன் தேவநேசன் யாழ்.பிராந்திய தொற்றுநோயியலாளராக யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தில் தற்காலிகமாகத் தனது கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

இவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த பத்து வருடங்களாக வைத்தியராகச் சேவை புரிந்தவராவார்.

(ஐ-51)

## அடகு நகைகள் இன்று ஏலத்தில் விற்பனை

யாழ்ப்பாணம்,டிசெ.7

யாழ்.பிரதேசத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மக்கள்வங்கியின் சுன்னாகம், உரும்பிராய் நீடித்த கருமபீடம், யாழ். கன்னாதிட்டி, நெல்லியடி ஆகிய கிளைகளில் அடகுவைத்து மீட்கப்படாத தங்க நகைகளே இன்று புதன்கிழமை ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

(ஐ-202)

World Vision

## சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடுகள் அமைத்தலுக்கான ஒப்பந்தகாரர்களுடனான சந்திப்பு

வேள்ட் விஷன் நிறுவனமானது சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக முல்லைத்தீவு மாவட்டத்தில் 500 தொடக்கம் 580 சதுர அடி பரப்பளவைக் கொண்ட புதிய வீடுகளை நிர்மாணிக்க இருக்கின்றது.

ஆகவே மேற்குறிப்பிட்ட வீடுகளை அமைப்பதற்கான ஒப்பந்தகாரர்கள், கட்டடத் தொழிலாளர்கள், தச்சுத் தொழிலாளர்கள் ஆகியோருடன் கலந்துரையாடுவதற்காகத் தாங்கள் எதிர்வரும் மார்கழி மாதம் 5ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கீழ்குறிப்பிடப்படும் முகவரியில் சந்திக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

**வேள்ட் விஷன் லங்கா**
நெடுங்கேணி வீதி,
முள்ளியவளை,
முல்லைத்தீவு.

முக்கிய குறிப்பு: ஒப்பந்தகாரர்கள் சுயவிவரக் கோவையையும் தேசிய அடையாள அட்டையினையும் கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறீர்கள்.

[சி/46467] [21.19,17]

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 26.02.1971 மறைவு 08.11.2005

கடந்த 08.11.2005 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்த எமது குடும்ப குலவிளக்கு

அமரர்
### நடராசா ரவிச்சந்திரன்

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள், மதிய போசன நிகழ்வுகள் 08.12.2005 வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(43631)

ஸ்ரீ காமட்சி கோயிலடி, மாலி சந்தி, அல்வாய் தெற்கு, அல்வாய்.

தகவல்: குடும்பத்தினர்.

## 7 ஆம் ஆண்டு நிறைவு நாள் நினைவஞ்லி



பளையைச் சேர்ந்த திருமதி
### பரிமளம் ஜெயம் (கல்யாணி)

மலர்வு 23.02.1953 உதிர்வு 07.12.1998

எம் அன்புத் தெய்வமே! அம்மா!
பாசத்தின் வடிவமாகப் பாரினில்
எமையெல்லாம் பண்பு சொல்லி
பரிவு காட்டிப் படிக்க வைத்து
பாதியிலே உன் செல்வங்கள் பரிதவிக்க
தாயில்லாப் பிள்ளையோ காலனவன்
தாய் மடிக்கேங்கி உனைக் கவர்ந்தானோ?
மௌனத் துயர் அமர்ந்து நம் இதயம்
விம்மித் துடிப்பதென்ன?
அலைபாயும் மனமும் நிலைசோரும்
உடலும் உனைப்பார்க்கத் தவிக்கின்றதே
உங்கள் முகம் ஆங்கீங்கு எல்லாம்
கண்டு அகமெல்லாம் கலங்குகின்றதே!
ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
உங்கள் அன்புக்கு ஈடாகுமா? அம்மா
அன்போடு எமை அரவணைத்து
பண்போடு எமை வழிநடத்திய
நீங்கள் எமை விட்டுப் பிரிந்து
ஏழு ஆண்டுகள் உருண்டோடி
விட்டதே அம்மா
இன்னும் எத்தனை எத்தனை ஆண்டுகள்
உருண்டோடினாலும் உங்கள்
நினைவுகள் என்றுமே எம்மைவிட்டுப்பிரியாது
மீண்டுமொரு புனர் ஜென்மம் எடுத்திங்கு
எமதுயிரை விடுவிக்க வேண்டுமம்மா?
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவை எண்ணிக் கலங்கி நிற்கும்:

தாய் ந. நல்லம்மா
கணவர் வ. ஜெயம்
மகன் ஜெ. ஜெயந்தன் (ஜேர்மனி)

மகள்மார்:
ஜெயந்தி (சுவிஸ்)
சுகந்தி (பளை)
வசந்தி (விசுவமடு)
சுமிதா (நெல்லியடி)

மருமக்கள்:
ஸ்ரீஸ்வரலிங்கம் (சுவிஸ்)
தவஞானம் (லண்டன்)
சுகந்தகுமார் (விசுவமடு)
தசிராகவன் (நெல்லியடி)
விஜிதா (ஜேர்மனி)

பேரப்பிள்ளைகள்:
சியானா, சிந்துஜா (சுவிஸ்)
டனக்சாந், கோபிநாத் (பளை)
அபோஜன் (விசுவமடு)
யதுசன் (ஜேர்மனி)
மதுசா (நெல்லியடி)

தகவல்: T.சுகந்தி, வண்ணாங்கேணி, பளை.

(43548)(51)

## நீங்காத நினைவுகளில் முதலாம் வருடம்



மண்ணகம் 03.02.1955

விண்ணகம் 04.12.2004

திருமதி
### வசந்தகுமாரி செல்வராசா

திதி: 07.12.2005 ஸப்தமி

ஓராண்டு சென்றதுவே தாயே நீர் எமைப்பிரிந்து
ஓராறு விழி நீர் சொரிந்தே நாம் தேம்புகிறோம்
சீராக நாம் வாழ வழி சமைத்த அம்மாவே!
பாரினிலே உமைத் தேடி பரிதவிக்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

கணவர், பிள்ளைகள், உறவினர்.

847, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (43626)

# முடிவுக்கு வந்துவிட்டதா குடும்ப அரசியல்?

இந்த நாடு சுதந்திரமடைந்து 57 ஆண்டுகள்ஆகின்றன. இந்த நாட்டை ஆள்வதற்கு சேனநாயக்க குடும்பம் அல்லது பண்டாரநாயக்க குடும்பத்தால் மட்டுமே முடியும் என்ற நிலை இருந்து வந்தது. ஆனால், தற்போது அந்த நிலைமை மாறி வருகிறது. இந்தக் குடும்பங்களைச் சேராத சேர் ஜோன் கொத்தலாவல, டபிள்யூ தஹநாயக, ஜே.ஆர். ஜயவர்த்தன, ஆர்.பிரேமதாஸ, டி.பி. விஜேதுங்க மற்றும் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் மொத்தமாக சுமார் 18 ஆண்டுகள் இந்த நாட்டை ஆண்டுள்ளனர். எனவே, மிகுதி 34 ஆண்டுகள் இந்நாட்டின் நிர்வாகம் இந்த இரு குடும்பங்களின் கைகளிலேயே இருந்தது.

**நாடு சுதந்திரமடைந்து 57 ஆண்டுகளாகின்றன. இதில் சுமார் 39 ஆண்டுகள் சேனநாயக்க மற்றும் பண்டாரநாயக்க குடும்பத்தினரால் இந்த நாடு ஆளப்பட்டுவந்துள்ளது. இனியும் இந்தக் குடும்பங்களின் ஆட்சிக்கு இந்த நாடு ஆளாகுமா என்பது குறித்து இக்கட்டுரை ஆராய்கிறது.**

நாடு சுதந்திரமடைந்தபோது ஐ.தே. கட்சியே அதிகாரத்திற்கு வந்தது. அக்கட்சியின் தலைவரான டி.எஸ்.சேனநாயக்க நாட்டின் முதலாவது பிரதமரானார். அவரது அமைச்சரவையில் சுகாதார மற்றும் உள்ளூராட்சி அமைச்சராகப் பணியாற்றியவர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க.

பண்டாரநாயக்க இங்கிலாந்திலுள்ள ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றவர். பல்கலைக்கழக மாணவர் தலைவராக விளங்கியவர்; சிறந்த பேச்சாளர். அப்போது ஆளுங்கட்சியான ஐ.தே. கட்சியில் டி.எஸ்.சேனநாயக்காவுக்கு அடுத்த நிலையிலே இருந்தார். ஆனால், டி.எஸ். சேனநாயக்க தனக்குப் பின் தனது மகன் டட்லி சேனநாயக்கவே பிரதமராக வரவேண்டுமென விரும்பினார். தனது வெளிநாட்டு விஜயங்களின்போது மகன் டட்லியையும் கூட அழைத்துச் சென்றார். அந்த நாடுகளின் தலைவர்களுக்கு டட்லியை அறிமுகப்படுத்தும் போது "இவரே இலங்கையின் அடுத்த பிரதமர்" என அறிமுகப்படுத்தினார்.

உண்மையில் அடுத்த பிரதமருக்கான சகல தகுதிகளும் ஆற்றலும் பண்டாரநாயக்காவுக்கே இருந்தன. ஆனால், டி.எஸ். வகுத்த திட்டத்தால் அந்த வாய்ப்பு பண்டாரநாயக்கவுக்கு கிடைக்காது என்ற நிலை உருவாயிற்று. எனவே, பண்டாரநாயக்க அப்போதைய அரசிலிருந்தும் கட்சியிலிருந்தும் வெளியேறினார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற புதிய கட்சியை உருவாக்கினார். 1952 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் அக்கட்சி போட்டியிட்டது. 9 ஆசனங்களை மட்டுமே அக்கட்சியால் பெறமுடிந்தது.

இதற்கிடையில் காலிமுகத்திடலில் குதிரையோட்டப் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவேளையில் குதிரையிலிருந்து விழுந்து பிரதமர் டி.எஸ். மரணமடைய நேரிட்டது.



அதனையடுத்து, டி.எஸ். சேனநாயக்க பிரதமர் பதவியை ஏற்றார். அவருக்கு அரசியல் அனுபவமோ மனோதிடமோ அப்போது இருக்கவில்லை. 1953 ஒகஸ்ட் மாதம் 12 ஆம் திகதி நாட்டில் தொழிற்சங்கங்கள் அரிசியின் விலையை அதிகரித்ததை எதிர்த்து வேலை நிறுத்தத்தில் குதித்தன. இந்த வேலை நிறுத்தத்திற்கு முகங்கொடுக்க முடியாத டட்லி தனது பிரதமர் பதவியை ராஜினாமா செய்தார். அதனையடுத்து சேர். ஜோன் கொத்தலாவல பிரதமரானார்.

தனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு வஞ்சம் தீர்க்கும் நோக்கில் எவ்வாறேனும் ஐ.தே. கட்சியைத் தோற்கடித்து ஆட்சியைப் பிடித்து தான் பிரதமராக வரவேண்டுமெனப் பண்டாரநாயக்க திட்டம் தீட்டினார். புதிய குடியேற்றத் திட்டங்களை உருவாக்கி - புதிய கைத்தொழில் முயற்சிகளை ஆரம்பித்து நாட்டை முன்னேற்றும் முயற்சியின் ஆரம்பக்கட்டத்தில் வலுவான நிலையில் ஐ.தே. க்ட்சி அப்போதிருந்தது. அந்தக் கட்சியை வீழ்த்துவது இலகுவானதாகத் தோன்றவில்லை. சிங்கள மக்களின் இன, மத, மொழி உணர்வுகளைத் தூண்டுவதன் மூலம் தனது குறிக்கோளை எட்டலாம் என நினைத்த பண்டாரநாயக்க தான் பதவிக்கு வந்தால் சிங்கள மொழியை மட்டும் இந்நாட்டின் அரச கரும மொழியாக்குவேன் என வாக்குறுதியளித்தார். நாட்டிலுள்ள பௌத்த பிக்குகளைத் தன்னுடன் இணைத்துக் கொண்டார். சிங்கள மக்களைத் தனது பேச்சாற்றலால் உணர்ச்சி வசப்படுத்தினார். சில தொகுதிகளுக்குப் பொருத்தமான வேட்பாளர்கள் கூடக் கிடைக்கவில்லை. கொழும்பு மத்திய தொகுதி அதில் ஒன்று. தபால் திணைக்களத்தில் தபால்காரராகப் பணியாற்றிய தேமிஸ் என்பவர் அத்தொகுதியில் நிறுத்தப்பட்டார். பெரிய அளவில் அரசியல் அலை வீசியது. அந்த அலை தேமிஸையும் வெற்றிக் கம்பத்திற்கு இட்டுச் சென்றது. பண்டாரநாயக்கா யுகம் ஆரம்பித்தது.

தந்திரோபாயத் திட்டங்கள் மூலம் பண்டாரநாயக்க ஆட்சிக்கு வந்தாலும் நாட்டின் இன்றைய நிலைமைக்கு அவரது ஆட்சியே வித்திட்டது எனலாம். அவரைப் பௌத்த துறவிகளே ஆட்சியில் அமர்த்தினர். அந்த பௌத்த துறவிகளில் ஒருவரான சோமராம தேரரால் 1959 செப்டெம்பர் 26 ஆம் திகதி அவரது உயிர் பறிக்கப்பட்டது.



அதன் பின்னர் பிரதமரான டபிள்யூ. தஹநாயக்காவால் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு 1960 மார்ச் 19 ஆம் திகதியன்று பொதுத்தேர்தல் நடைபெற்றது. நாடாளுமன்றத்தில் எந்தக் கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை கிடைக்காத நிலையில் அதிக ஆசனங்களைப் பெற்ற ஐ.தே. கட்சி அரசை அமைத்தது. அதன் தலைவர் டட்லி சேனநாயக்க பிரதமரானார். மீண்டும் சேனநாயக்க குடும்பத்திடம் நாடு ஒப்படைக்கப்பட்டது. ஆனால், டட்லி அரசின் சிம்மாசனப் பிரசங்கம் மீதான வாக்கெடுப்பில் டட்லி அரசு தோல்வியுற்றதால் அது கவிழ் நேர்ந்தது.

மீண்டும் நாடாளுமன்றத் தேர்தல் 20.08.1960 அன்று நடைபெற்றது. 1960 மார்ச் மாதத்தில் நடைபெற்ற தேர்தலில் தோல்வியுற்றதையடுத்து 1960 ஆகஸ்ட் தேர்தலில் சுதந்திரக்கட்சி இடதுசாரிகளுடன் கூட்டமைத்துப் போட்டியிட்டது. தேர்தலில் சுதந்திரக் கட்சியின் கூட்டமைப்புக்கு அமோக வெற்றி. அந்தத் தேர்தல் சமயத்தில் சுதந்திரக் கட்சியின் தலைவியாக சிறிமாவோ இருந்தார். அவருக்கு எதுவித அரசியல் அனுபவமோ ஆற்றலோ இருக்கவில்லை. ஆனாலும், பண்டாரநாயக்க குடும்பத்தின் விலாசத்திலேயே ஓடவேண்டிய நிர்ப்பந்தம். அரசமைப்பிலுள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தி நாட்டினதும், உலகத்தினதும் முதலாவது பெண் பிரதமராக சிறிமா பதவியேற்றார். மீண்டும் பண்டாரநாயக்க குடும்பத்திடம் நாடு ஒப்படைக்கப்பட்டது. இடதுசாரிகளையும் அவர் தனது அரசில் சேர்த்துக் கொண்டார்.

1965 இல் நடைபெற்ற தேர்தலில் அதிக ஆசனங்களை ஐ.தே. கட்சி பெற்றபோதிலும் நாடாளுமன்றத்தின் அறுதிப் பெரும்பான்மையைப் பெறமுடியவில்லை. டட்லி தமிழரசுக் கட்சியின் உதவியை நாடினார். தமிழரசுக் கட்சி ஒத்துழைப்பு வழங்கவே 1965 இல் டட்லி ஆட்சியை அமைத்தார். இதையடுத்து, டட்லி-செல்வா உடன்பாடு கைச்சாத்திடப்பட்டது. மீண்டும் சேனநாயக்க குடும்பம் நாட்டின் பொறுப்பை ஏற்றது. தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த எம்.திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சரானார். பண்டாரநாயக்காவை ஆட்சியில் அமர்த்தியவர்களில் முக்கியமானவரும் ஒரு காலத்தில் இடதுசாரிகளின் தந்தை எனக் கருதப்பட்டவருமான பிலிப் குணவர்த்தன மற்றும் ஜே.ஆர்.ஜயவர்த்தன, தஹநாயக்க, சீ.பி.டி. சில்வா ஆகியோர் அங்கம் வகித்த அமைச்சரவையிலேயே தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த எம். திருச்செல்வமும் பணியாற்றினார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. டட்லி ஒரு பிரமச்சாரி. அவருக்கு வாரிசுகள் இல்லாத காரணத்தால் இந்நாட்டின் அரசியலில் சேனநாயக்க குடும்பத்தின் பங்கு அத்துடன் முற்றுப்பெற்றது.

1970 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் சிறிமா தலைமையிலான பொதுஜன முன்னணி மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சியைக் கைப்பற்றியது. மீண்டும் நாட்டின் ஆட்சி பண்டாரநாயக்க குடும்பத்திடம் சென்றது. இம்முறை சிறிமா ஓரளவு அரசியல் அனுபவத்தைப் பெற்றிருந்தார். தரப்படுத்தலை அறிமுகப்படுத்தினார். புதிய அரசியலமைப்பைக் கொண்டு வந்து மேலும் இரண்டு ஆண்டுகள் ஆட்சிக் காலத்தை அதிகரித்தார் (7ஆண்டுகள்).

1977 இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் சுதந்திரக்கட்சி படுதோல்வியைச் சந்தித்தது. மொத்தமாக 8 ஆசனங்களை மட்டுமே பெற்றது. எதிர்க்கட்சி அந்தஸ்த்துக்கூட சுதந்திரக்கட்சிக்குக் கிடைக்கவில்லை. தமிழர் விடுதலைக்கூட்டணி எதிர்க்கட்சியானது; அதன் தலைவர் அ.அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானார்.

ஆறில் ஐந்து பெரும்பான்மையைப் பெற்ற ஜே.ஆர். புதிய அரசமைப்பை அறிமுகப்படுத்தினார். ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்து சிறிமாவின் குடியுரிமையைப் பறித்தார். மகள் சந்திரிகாவும், மருமகன் விஜயகுமாரதுங்காவும் சுதந்திரக் கட்சியை விட்டு வெளியேறி மக்கள் கட்சியை ஆரம்பித்தனர். மகன் அநுரா, மைத்திரிபால சேனநாயக்கவுடன் இணைந்து கட்சியின் தலைமை அலுவலகத்தைக் கைப்பற்றினார். இனி சுதந்திரக்கட்சி தலைதூக்குமா என்ற நிலை உருவானது. 17 ஆண்டுகள் எதிர்க்கட்சியாக இருக்கவேண்டி வந்தது. இடையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் ஹெக்டர் கொப்பேக்கடுவவும் (1982), சிறிமாவும் (1988) தோல்விகளைச் சந்தித்தனர்.

இந்நிலையில் சந்திரிகா மீண்டும் சுதந்திரக்கட்சியில் இணைந்தார். 1993 இல் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தல்களில் சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட்டு மேல் மாகாண சபை முதல்வரானார். மீண்டும் பண்டாரநாயக்க குடும்பம் தலைதூக்க ஆரம்பித்தது. 1994 இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் சுதந்திரக் கட்சி ஆட்சியைக் கைப்பற்றியது. சந்திரிகா பிரதமரானார். அதே ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட சந்திரிகா வரலாறு காணாத வெற்றியைப் பெற்று நாட்டின் ஜனாதிபதியானார். இந்த ஆண்டில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலையடுத்து 11 ஆண்டுகள் ஜனாதிபதியாகப் பணியாற்றிய பின்னர் சந்திரிகா அந்தப் பதவியிலிருந்து ஓய்வுபெற்றார். அரசமைப்பின்படி சந்திரிகா மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட வாய்ப்பில்லை. ஆனால், அரசியலில் ஈடுபடுவதை அரசமைப்புத் தடுக்கவில்லை. ஜனாதிபதிப் பதவியைத் துறந்த பின்னர் சமூக சேவைகளில் குறிப்பாக சிறுவர்களின் நலன் தொடர்பாகப் பணியாற்றப் போகிறார் என சந்திரிகா தெரிவித்திருந்தார். ஆனால், முன்னாள் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரின் மறைவால் உருவான வெற்றிடத்திற்குத் தன்னை நியமிக்குமாறு சந்திரிகா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்குத் தெரிவித்துள்ளார். அது சாத்தியப்படும் போல் தோன்றவில்லை. சுதந்திரக் கட்சியின் தலைமையை புதிய ஜனாதிபதியிடம் ஒப்படைக்கவேண்டுமென்ற கருத்து வலுத்துவருகிறது. சுதந்திரக் கட்சியின் தலைமையும் பறிபோய் கதிர்காமரின் வெற்றிடத்திற்கும், நாடாளுமன்றத்திற்கும் நியமிக்கப்படாவிடின் சந்திரிகாவின் அரசியல் எதிர்காலம் கேள்விக் குறியாக அமையும். சந்திரிகாவுக்கு யசோதரா என்ற மகளும் விமுக்தி என்னும் மகனும் உள்ளனர். இவர்களில் விமுக்தி அரசியலில் ஈடுபட அதிக வாய்ப்புகள் உள்ளன. இருப்பினும் அவர் விமுக்தி குமாரதுங்காவே. பண்டாரநாயக்க குடும்பத்தின் பெயர் அவருக்கு வழங்காது. எதிர்காலத்தில் விமுக்தியின் உடலில் ஓடுவது பண்டாரநாயக்க குடும்பத்தின் இரத்தமே என்ற வாதம் முன்வைக்கப்பட்டால் ஆச்சரியப்படமுடியாது.

சரி, பண்டாரநாயக்காவின் நேரடி வாரிசான அநுராவின் அரசியல் எதிர்காலம் எவ்வாறு அமையும் என்பதைப் பார்ப்போம். 1982 இல் அநுராவின் தாயார் சிறிமாவோ சுதந்திரக் கட்சியின் தலைவியாக இருந்த போது அநுராவை சிறிமா ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கவில்லை. அதேபோல், 2005 இல் அவரது சகோதரி சந்திரிகா சுதந்திரக் கட்சியின் தலைவியாகவும், ஜனாதிபதியாகவும் இருந்தும் அநுராவை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கவில்லை.



பண்டாரநாயக்கவின் ஒரே வாரிசாக இருந்தபோதிலும் அநுராவை அவரது தாயாரும், சகோதரியும் குறைத்து மதிப்பிட்டுள்ளனர் எனவும் கருத இடமுண்டு. அல்லது அவர் சுதந்திரக் கட்சி மீது கொண்டுள்ள பற்றுக் குறித்து அவர்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டிருக்கக்கூடும். எது எவ்வாறாயினும் அநுரா பண்டாரநாயக்க தனக்கென உரிய ஒரு இடத்தை எதிலும் ஒருபோதும் உருவாக்கிக் கொள்ளவில்லை.

மேலும், அநுரா பண்டாரநாயக்க ஒரு பிரமச்சாரி. இனி அவர் இல்லற வாழ்க்கையில் இறங்குவதற்கும் அதன் மூலம் வாரிசை உருவாக்குவதற்குமான வாய்ப்புகள் அரிதாகவே உள்ளன. தற்போதுள்ள நிலையில் பண்டாரநாயக்க குடும்பத்தின் அரசியல் ஆதிக்கம் அஸ்தமித்துக்கொண்டு போவதையே அவதானிக்க முடிகிறது.

சரி, சுதந்திரத்திற்குப் பின்னர் இந்த நாட்டை இந்த இரண்டு குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் சுமார் 34 ஆண்டுகள் நேரடியாக நிர்வாகம் செய்துள்ளனர். ஆனால், நாட்டு மக்களுக்காக இவர்கள் ஆற்றியதென்ன என்பதே இப்போது எழும் வினாவாகும்.

தந்தை பண்டாரநாயக்க இன,மத, மொழி உணர்வுகளை உருவாக்கி அதன் மூலம் அதிகாரத்திற்கு வந்தார். ஆனால், மகள் சந்திரிகா அதிகாரத்திற்கு வர முற்பட்டபோது அவரது தந்தையார் வளர்த்த இனவாத உணர்வுகள் என்ற பயிர் ஏற்கனவே முளையவிட்டு வேரூன்றிப் பெரிய விருட்சமாகவே வளர்ந்திருந்தன. ஆனாலும், ஏதோ விதத்தில் மக்களை உணர்ச்சி வசப்படுத்தி அதன்மூலம் அனுதாபத்தைச் சம்பாதிக்க அவர் தேர்ந்தெடுத்த விடயம் மனிதப் புதைகுழிகளை (தென்பகுதிகளில் மட்டும்) தோண்டுவதாகும். அதன் உச்சக் கட்டமாக சூரியகந்த படுகுழி தோண்டும் பணி அமைந்தது. அந்தச் சம்பவம் குறித்து லங்காதீப வார இதழில் (5.8.1998) உபுல் யோசெப் பெர்னாண்டோ எழுதிய கட்டுரையின் ஒரு பகுதியை கீழே தருகிறோம்.

"தென்பகுதியில் இடம்பெற்ற வன்முறைகளின் எதிரொலியாக சூரியகந்தவில் மனித சடலங்கள் குவிந்தன. சூரியகந்த மனிதர்கள் வாழ முடியாத தனிமையான இடமாகும்.

ஒன்றையடிப் பாதை வழியாக அங்கு சென்றடைவது சுலபமான விடயமல்ல. இருப்பினும் சந்திரிகா தலைமையிலான குழுவினர் சூரியகந்த சென்றனர். அவர்கள் வெறும் கைகளுடன் சூரியகந்த செல்லவில்லை. மண்வாரும் அலகுகள், மண்வெட்டி ஆகியனவற்றை எடுத்துச் சென்று சூரியகந்தவை அகழ்ந்தனர். இச்செய்தி காணாமற் போனோரின் பெற்றோர் மற்றும் உறவினர்களின் செவிகளை எட்டியது. அவர்களும் சூரியகந்த நோக்கி ஓடினர்."

இவ்வாறு அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அரசியல் ஆதாயம் தேடுவதற்காக இவ்வாறு கால்நடையாகச் சென்று மக்களின் அனுதாபங்களை சம்பாதித்த சந்திரிகா அதே மக்களால் தெரிவு செய்யப்பட்டு நாட்டின் ஜனாதிபதியாக 11 ஆண்டுகள் பணியாற்றிய பின்னர் ஓய்வு பெறும்போது மக்களுக்காற்றிய பணியின் ஞாபகச் சின்னங்களாக ஜனாதிபதி மாளிகையில் விட்டுச் சென்ற மீதிகள்,

**அ.முத்துலிங்கம்**

- 32 வாகனங்கள்
- 260 உத்தியோகத்தர்கள்
- 4 குண்டு துளைக்காத சொகுசு வாகனங்கள்

ஏனவே, சந்திரிகா மீண்டும் அரசியலுக்கு வரும்போது இவற்றையெல்லாம் மறந்து மீண்டும் அவருக்கு வாய்ப்பளிப்பார்களெனில் அது சந்திரிகாவின் தவறல்ல. அதேநேரம் மக்கள் இவற்றையெல்லாம் ஞாபகத்தில் வைத்திருந்தால் பண்டாரநாயக்க குடும்பத்தின் ஆதிக்கம் கடந்த மாதம் 17 ஆம் திகதியுடன் முற்றுப்பெற்றுவிட்டது எனக் கொள்ளலாம். ✱

## ஒளி விழா

யாழ்ப்பாணம்,டிசெ.7

சுண்டுக்குழி பரியோவான் பாலர் பாடசாலை யின் ஒளிவிழா இன்று புதன்கிழமை காலை 9.30 மணியளவில் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

(ஜ-190)

## பன்றித்தலைச்சி அம்மன் பெருந்திருவிழா

தென்மராட்சி,டிசெ.7

மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி கண் ணகை அம்பாள் ஆலய வருடாந்த பெருந் திருவிழா நாளை வியாழக்கிழமை கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

டிசம்பர் 16ஆம் திகதி தேர் உற்சவமும் மறு நாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

(ஜ-119)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாராந்த நிகழ்வு

இடைக்காடு,டிசெ.7

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண் பாட்டுப் பேரவை நடத்தும் வாராந்த நிகழ்வு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

பேரவைத் தலைவர் க.அருள்லிங்கம் தலை மையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் எஸ். எஸ். ரஜீந்திரனின் புல்லாங்குழல் இசை நிகழ்வு நடைபெறவுள்ளது. (ஜ-ரி-202)

## திருவள்ளுவர் விழா

இடைக்காடு,டிசெ.7

தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்தின் திருவள்ளுவர் விழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை நடை பெறவுள்ளது.

விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர் களிடையே நடத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசில்கள் சந் நிதியான் ஆச்சிரமத்தினால் நிகழ்வில் வைத்து வழங்கப்படவுள்ளன

(ஜ-ரி-202)

## திருவாசக விழா ஏற்பாடு

இடைக்காடு,டிசெ.7

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டு பேரவை நடத்தும் திருவாசகவிழா அடுத்த மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பங்குபற்ற விரும்பும் மாண வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன.

எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் விண் ணப்பங்களைப் பேரவைக்கு தபாலிலோ நேரிலோ அனுப்பி வைக்கலாம். என ஆச்சிரம சுவாமிகள் தெரிவித்துள்ளார். (ஜ-ரி-202)

## திருக்குறள் போட்டி

இடைக்காடு,டிசெ.7

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிர மம் நடத்தும் திருக்குறள் போட்டி எதிர்வ ரும் சனிக்கிழமை வதிரிவடக்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடை பெறவுள்ளது.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு அன்றையதினமே பரிசில்கள் வழங்கப்படும் என்று ஆச்சிரம சுவாமிகள் தெரிவித்தார்.

(ஜ-ரி-202)

## ஓய்வுபெற்ற ஊழியர்கள் கௌரவிப்பு

குருநகர்,டிசெ.7

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தில் சேவைபுரிந்து வேறு அலுவலகங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் இளைப்பாறிச் சென்ற ஊழியர்களைக் கௌரவிக்கும் வைப வம் எதிர்வரும் 14 ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 2 மணிமுதல் நடைபெறவுள்ளது.

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலக மாநாட்டு மண்டபத் தில் யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தலை மையில் வைபவம் இடம்பெறும். (ஜ-51)

## பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் வாராந்த நிகழ்வு

இடைக்காடு,டிசெ.7

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயிலின் பெரியாழ்வார் ஆச்சிரமம் வாராந்தம் ஆன்மீக நிகழ்வுகளை நடத்தி வருகின்றது.

அந்த வகையில் எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை வதிரி பூவற்கரைப் பிள்ளையார் கோயில் அடியார்கள் வழங்கும் கூட்டுப் பிரார்த்தனை அங்கு நடைபெறவுள்ளது.

(ஜ-ரி-202)

## பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்களை பிரதேச செயலகங்களிலும் பெறவசதி

நவாலி,டிசெ.7

பிறப்பு, இறப்பு, விவாக அத்தாட்சிப் பத் திரங்களை அடுத்த ஆண்டு ஜனவரி முதல் தென்மராட்சி, வேலணை ஆகிய பிரதேசங் களைச் சேர்ந்த மக்களும் தமது பிரிவுகளிலுள்ள பிரதேச செயலகங் களில் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான நடவடிக்கைகள் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தி னால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வத்தாட்சிப் பத்திரங்களை சண்டிலிப்பாய், சங்கானை, கோப் பாய், தெல்லிப்பழை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தத்தமது பிரிவு பிரதேச செயலகங்களில் தற்போது பெற்று வருகின்றனர். இதேபோன்று தென்மராட்சி, வேலணை மக்களும் இனிமேல் யாழ். செயலகத்திற்கு அலையாமல் தமது பிரிவில் இலகுவாக அவற்றை பெற்றுக்கொள்ளமுடியும்

இதேவேளை, யாழ். பதிவாளர் அலுவலகத்தில் தற்போது நாளொன் றுக்கு சராசரியாக 300 விண்ணப்பங்கள் கையளிக்கப்படுகின்றன.

இவற்றில் இலக்கம் தெரிந்த 'ஏ' விண்ணப்பங்களுக்கு நான்கு நாள்களிலும் இலக்கம் தெரியாத 'பி' விண்ணப்பங்களுக்கு ஒரு வாரத் திலும் அத்தாட்சிப் பத்திரங்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன.

இவ்வாறு மேலதிக யாழ்.மாவட்டக் காணிப் பதிவாளர் வி.பிர பாகரன் தெரிவித்துள்ளார். (த-100)


### கருத்தரங்கும் - ஆசி வழங்கலும்

ஐ.டி.சி மற்றும் கல்விசார் நிறுவனங்களும் இணைந்து நடத்தும் க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான கருத் தரங்கும் சமயப் பெரியார்கள், கல்லூரி அதிபர்களின் ஆசி வழங்கலும்.

இடம்: யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபம்

காலம்: 10.12.2005 சனிக்கிழமை காலை 8 மணி (கணிதம், விஞ்ஞானம்)

கொழும்பு, யாழ்ப்பாணம் பிரபல கல்லூரிகளின் ஆசிரியர்கள் இணைந்து வழங்கும் பரீட்சை வினா எதிர்பார்ப்பும் வினா அணுகுமுறையும் பற்றிய கருத்தரங்கும், சமயப் பெரியார்கள், கல்லூரி அதிபர்களின் ஆசி வழங்கலும் இடம்பெறும்.

சகல மாணவர்களும் கலந்து கொள்ளுங்கள் கையேடுகளும் வழங்கப்படும்.

(43648)(21.16.15) ஐ.டி.சி. நிறுவனம்.


### 31 ஆவது நாள் நினைவஞ்சலி

பிறப்பு 28 - 02 - 1950



இறப்பு 07 - 11 - 2005

அமரர் வேலுப்பிள்ளை சூரியகுலசிங்கம்

31ஆவது நாள் கடந்த போதிலும் இவர் எங்களுடன் தொழில் புரிந்த அந்த பொன்னான நாள்கள் இன்று போல் எங்கள் முன் நிழல் ஆடுகின்றன.

இந் நாளில் இவரது ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

நீங்காத நினைவுகளுடன்

தலைவர், பணிப்பாளர் சபை, நிறைவேற்று உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், வடகடல் நிறுவனம்.

(43635)(21.16.15)

### மனமகிழ்ந்து வாழ்த்துகிறோம்

ஸ்ரீமதி சாந்தினி சிவநேசன்

(அதிபர்,கொக்குவில் கலாபவனம்

விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை)

14.11.2005 அன்று ஜனாதிபதி சந்திரிகாவினால்

**கலாகீர்த்தி** விருது வழங்கி

கௌரவிக்கப்பட்டார்

அவர்களை மனமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



கலாபவன மாணவிகள்
திருமதி. அ. ராஜ்உமேஸ்
திருமதி. ஸ்ரீ. ஸ்ரீகரன்

### பாராட்டுகின்றோம்



இளவாலை யா/மாரீசன் கூடல் றோ.க.த.க. பாடசாலையில் 2005ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 143 புள்ளிகள் பெற்று சித்தியடைந்தமைக்கும், UCMAS அகில இலங்கைப் போட்டியில் வெற்றிக்கிண்ணம் பெற்றமைக்காகவும்

செல்வன்

**அலோசியஸ் அனோஜன்**

அவர்களைப் மென்மேலும் பல வெற்றிகளைப் பெற்று உயரவேண்டுமென வாழ்த்திப் பாராட்டுகின்றோம்.

இளவாலை. பாடசாலைச் சமூகம்.

(43634)(32.21.16.15)

## மரண அறிவித்தல்

**திருமதி மற்றில்டா சுகந்தம் ஜெயரட்ணம் (ராணி அக்கா)**

பலாலி வீதி, உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட திருமதி மற்றில்டா சுகந்தம் ஜெயரட்ணம் 05.12.2005 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற டேவிட் ஜெயரட்ணம் (Retd.Foreman, Dept. of Agriculture) இன் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வர்களான நல்லப்பா மான்-நேசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தம்பு-ராமாசி தம்பதியரின் அன்பு மரு மகளும் பத்மினி, காலஞ்சென்ற ஜெயானந்தம் மற்றும் கிளாடிஸ் (வவுச்சி - நிர்வாகி, றூத் பெண்கள் இல்லம், ஜெயபுரம், கிளி நொச்சி) வண.பிதா நோர்மன் ஜெயச்சந்திரன் (Christ Church, Galle Face) ஜெயறூபி, ஜெயந்தராஜ் (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயாரும் வேதநாயகம் சில்வா (Retd. Addl. Deputy Director of Agriculture, North -East), தையல்நாயகி, செல்வ ராணி, ஜேசுதாசன் (Pananathan Chemicals), பியற்றிஸ் ஆகி யோரின் மாமியாரும், காலஞ்சென்ற பென்ஜமின்மான் மற்றும் தயாமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் விமல்ராஜ், ஆன் (நோர்வே), துசீதரன், துஷ்யந்தி, அனித்தா, சசி,ஆனந், ஷர்மிலி, மகிந்தன், ஜோயல், டல்னி, திலீபன், சஜீவன், கெனத், தோமஸ், சாரா, சிசிலியா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் எலிசபெத், திவ்யா, எலியாஸ், ஷானியா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (08.12.2005) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் கோப்பாய் சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

பலாலி வீதி, உரும்பிராய் தெற்கு, (43646)(21.16.15)

தகவல் குடும்பத்தினர்.


## COMPUTER EXPRESS

Institute of Information Technology
No 15, Sirambiyadi Lane,Jaffna.
Tel:- 021-2228250, 0777-222422

யாழ்நகரில் முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர

**Computer Hardware Engineering Course**

உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப்பெற, சுயதொழில் ஆரம்பிப்பதற்கு மற்றும் தரம்வாய்ந்த சான்றிதழைப்பெற......!

*Course Condense :-*

- கணனி தொடர்பான அறிமுகம்
- Operating System - Windows XP & Dos
- Internet & E-mail
- கம்ப்யூட்டரின் பாகங்களும் அவற்றின் விளக்கங்களும்.
- Mother board, Processor, Ram தொடர்பான விரிவான விளக்கம்
- கம்ப்யூட்டரை அசெம்பிள் செய்தல்
- அசெம்பிளிங் முடிந்தவுடன் என்ன செய்வது என்பது தொடர்பான விளக்கம்.(BIOS Setup)
- Hard Disk ஐ முறைப்படுத்தல்
- Software,Operating System இன்ஸ்ரோல் செய்தல்
- கம்ப்யூட்டரில் ஏற்படுகின்ற பழுதுகளை சரிபார்த்தல்.

நன்மைகள்

- பாடநெறியின் இறுதியில் Computer Hardware சம்பந்தமான பூரண அறிவைப்பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்.
- Pentium I முதல் Pentium IV வரையிலான Computer களில் பூரண செய்முறைப் பயிற்சி.
- எமது ஆய்வுகூடத்தில் கம்ப்யூட்டரின் உட்தொழினுட்பம் பற்றி பூரண அறிமுகம் செய்வதால் கம்ப்யூட்டர் பற்றிய முன்னறிவு அவசியமில்லை.
- தராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களினால் கற்பிக்கப்படுகின்றது.

*Hardware* பயிற்சி

- கணனிப் பாகங்களை இனம் காணும் முறை
- Assembling
- BIOS Configurations (முறைப்படுத்தல்)
- Hard Disk இனை முறைப்படுத்தல் (Partition & Formatting)
- Net work தொடர்பான அறிமுகம்.
- Trouble Shooting / Maintenance

Free Study Pack & Driver CD

*Soft Ware* பயிற்சி

- Operating System நிறுவும் முறை (Windows 98/ Windows XP)
- Software Install செய்யும் முறை.
- Driver Installation செய்யும் முறை (Sound card, Modem , VGA, TV Card, Printer)
- Trouble Shooting .(Files Updating, Copying)

வகுப்புக்கள் ஆரம்பம்:-
12/12/2005 :- 08.30-04.30

*Course Fee :- 2000/=*

சர்வதேச தரம்வாய்ந்த சான்றிதழ்கள் வழங்கப்படும்

அனுமதிகள் வரையறுக்கப்பட்டுள்ளதால் அனுமதிக்கு முந்துங்கள்

கொழும்பிலிருந்து வருகைதரும் பிரபல விரிவுரையாளரால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

# இரணைமடுக்குளம் தொடர்பான தகவல்களைத் தரக் கோரிக்கை

இரணைமடுக்குளம் பற்றிய முக்கிய தகவல்கள் தெரிந்தால் அவற்றைத் தந்து உதவுமாறு கிளிநொச்சி பிராந்திய பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் எந்திரி ஏ.சி.வினோத்ராஜ் கேட்டுள்ளார்.

'நியாப்' திட்டத்தின் கீழ் இக்குளம் புனரமைக்கப்படவுள்ளதால் அதனைப் பாதுகாப்பாகவும் செம்மையாகவும் புனரமைப்பதற்காகக் கடந்த காலத்தில் ஏற்பட்ட, குறிப்பாக 1957, 1994 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட பெருவெள்ளத்தின் போது குளத்தில் ஏற்பட்ட மாற்றம், பாதிப்பு என்பன பற்றிய தகவல்களை பத்திரிகைச் செய்திகளாகவோ நேரடி அனுபவ மனப்பதிவுகளாகவோ வைத்திருப்போர் அத்தகவல்களை தந்துதவுமாறு அவர் கேட்டுள்ளார்.

இத்தகவல்களை எழுத்து மூலமோ அல்லது நேரடியாகவோ கிளிநொச்சியிலுள்ள தமது பணிமனையில் தந்துதவுமாறும், நேரடியாக சமுகம் தரமுடியாதோர் 0212285867 எனும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு அத்தகவல்களை வழங்கலாம் என்றும் அவர் மேலும் கூறினார்.

இத்தகவலை ஒருவார காலத்தில் தந்துதவுமாறும் கேட்டுள்ளார். (த-405)

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி

உலக தரிசன நிறுவனத்தின் அனுசரணையுடன் வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட முத்தையன்கட்டு இடதுகரை 18 ஏக்கர் பிரதேச மக்களுக்கு கடந்த 24 ஆம் திகதி இடதுகரை அ.த.க. பாடசாலையிலும் சிவநகர் இ.த.க. பாடசாலையிலும் வைத்து உணவுப் பொருட்களும் ஏனைய இதர பொருள்களும் முல்லை மாவட்ட பொருண்மிய மதியுரையகத்தால் வழங்கப்பட்டன. (த)

# ஒட்டுசுட்டானில் மழையால் காலபோகப் பயிர்கள் அழிவு

ஒட்டுசுட்டான்,டிசெ.7

அண்மையில் பெய்த மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தினால் ஒட்டுசுட்டான் பகுதியில் காலபோக நெற் செய்கை பெரும் பாதிப் படைந்துள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள கற்சிலைமடு, முத்தையன்கட்டு, புளியங்குளம் மற்றும் மன்னாங்கண்டல் ஆகிய கிராமங்களிலே காலபோக நெற்செய்கை பாதிப்புக்குள்ளாகியது.

கனகரத்தினபுரம் முதலாம் கண்டப்பகுதிகளில் மூன்று வீடுகள் மழை வெள்ளத்தில் மூழ்கி முற்றாக அழிந்துள்ளன. இதனால் இவ்வீடுகளின் குடியிருப்பாளர்கள் இடம் பெயர்ந்து சென்று உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர். அத்துடன், அப்பகுதியிலுள்ள வீடுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வாழைத்தோட்டங்களும் பெரும் சேதத்துக்குள்ளாகின.

மழை வெள்ளம் காரணமாக நெற்செய்கை நிலங்கள் மணல் மேடுகளாகக் காட்சியளிக்கின்றன. மரக்கறிச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதனால் இப்பிரதேசத்தில் மரக்கறி வகைகளின் விலையும் பெருமளவு உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-6-341)

# தலைவரின் பிறந்த தினத்தன்று சிறார்களுக்கு வங்கிக் கணக்கு

தமிழீழத் தேசியத்தலைவர் வே.பிரபாகரனின் 51 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு முழங்காவில் பிரதேச முன்பள்ளிச் சிறார்கள் இருபது பேருக்கு முழங்காவில் அரசியல் துறையினரால் தமிழீழ வைப்பகத்தில் தேட்டக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டு வைப்புப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.



இந்த நிகழ்வு கடந்த 26 ஆம் திகதி முழங்காவில் அரசியல்துறைச் செயலகத்தில் பிரதேச பொறுப்பாளர் தமிழரசன் தலைமையில் நடைபெற்றது.

முழங்காவில் காவல் பணிமனைப் பொறுப்பாளர், முத்துமாரி அம்மன் ஆலய குருமுதல்வர், முழங்காவில் அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர், மாதர் சங்கத் தலைவர், முன்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர் போன்றோர் கலந்து சிறப்பித்தனர். (த-415)

# ஆரம்ப சுகாதார நிலையம் கற்சிலைமடுவில் அமையும்

ஒட்டுசுட்டான், டிசெ.7

ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள கற்சிலைமடுக் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட்டு வருகிறது.

இக்கட்டடத்தை முத்துதைஐயன்கட்டு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பொறுப்பேற்று நிர்மாணித்து வருகிறது. இதன் ஆரம்பவேலைகள் முடிவடைந்து விட்டன.

வேலைகள் தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றன.

இப்பகுதியில் சுகாதார வசதி இல்லாது மக்கள் பெரிதும் சிரமம் அடைந்துவந்தனர். இந்நிலையில், இந்த ஆரம்ப சுகாதார நிலையம் மக்களுக்குப் பெரிதும் பயனுள்ளதாக அமையும் என்று தெரிவிக்கப்பட்டது.(த-341)

# மேய்ந்து கொண்டிருந்த மாடுகளும் வெள்ளத்தில் அள்ளுண்டு போயின

## துணுக்காய் பாலியாறு பகுதியில்

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள துணுக்காய் பிரதேசத்தில் சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின்போது அங்கு பட்டியாக நின்ற சுமார் ஐம்பதுக்கு மேற்பட்ட மாடுகளும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன.

பாலியாறு பகுதிக்குச் சமீபமாக மேற் பகுதியில் மேய்ச்சலுக்காக விடப்பட்டிருந்த மாடுகளே இவ்வாறு மழைவெள்ளத்துள் அள்ளுண்டு போயின.

இதனால் மாட்டுப்பட்டியின் உரிமையாளர்களான மு.பேரம்பலம், மு.சந்திரன் ஆகியோருக்கு சுமார் மூன்று லட்சம் ரூபாவுக்கு மேல் நட்டம் ஏற்பட்டிருக்கிறது என்றும் கூறப்பட்டது. (த-352)

## குளவிசுட்டான் கிராமத்தில் சுழற்சி முறைக் கடன்

நெடுங்கேணி பிரதேசத்தின் குளவிசுட்டான் கிராமத்தில் தனிநபர் தொழில் விருத்திக்காக 20 பயனாளிகளுக்கு சுழற்சி முறைக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

நெடுங்கேணி அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனம் டி.ஆர்.சி.நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இச்சுழற்சிமுறைக் கடனை வழங்கியுள்ளது.

ஒரு பயனாளிக்கு 20 ஆயிரம் ரூபா வீதம் 4 லட்சம் ரூபா இத்திட்டத்துக்கென ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இக் கடன் வழங்கும் நிகழ்வு கடந்த 26 ஆம் திகதி நடைபெறவுள்ளது. நெடுங்கேணி அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்திட்ட இணைப்பாளர், வெளிக்கள உத்தியோகத்தர், சமூக வலுவூட்டாளர், கிராம அலுவலர் பிரதேச அரசியல்துறை உறுப்பினர், சமூக பொருளாதார அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், கடன் அனுமதிக் குழு உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (த-204)

# மருத்துவ வசதிகள் இன்றி ஜெயபுரம் மக்கள் அவதி !

முழங்காவில்,டிசெ.7

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள ஜெயபுரம் பகுதியைச் சேர்ந்த மக்கள் அடிப்படை வைத்திய வசதிகள் எவையும் இன்றி பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

கிளிநொச்சி பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் பல்லவராயன்கட்டுப் பகுதியில் அமைந்துள்ள ஜெயபுரம் கிராம மக்கள் தமது வைத்திய சேவைகளுக்காகப் பல மைல் தூரத்திற்கு அப்பால் அமைந்துள்ள முழங்காவில், வன்னேரிக்குளம் ஆகியபகுதிகளுக்குச் செல்லவேண்டியுள்ளது. இப்பகுதியிலுள்ள வைத்தியசாலைகளும் எவ்வித அடிப்படை வசதிகள் இன்றிக் காணப்படுகின்றன.

இப்பகுதி மக்களின் நன்மைகருதி திலீபன் மருத்துவ சேவைப் பிரிவினரால் மருத்துவ சேவை வழங்கப்பட்டபோதும் போக்குவரத்துச் சீரின்மை காரணமாகத் தொடர்ந்து அச்சேவையை நடத்த முடியாத நிலைமை காணப்படுகிறது.

இப்பிரதேச மக்களின் நன்மை கருதி இப்பகுதியில் ஒரு பொதுவான இடத்தில் மக்களுக்கான மருத்துவ சேவையை வழங்க அரசினர் மருத்துவ சேவையைச் சேர்ந்த வைத்திய அதிகாரிகள் முன்வரவேண்டுமெனப் பொதுமக்கள் சார்பாக வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

முழங்காவில் - வேரவில் மற்றும் வன்னேரி ஆகிய வைத்தியசாலைகளில் இருந்து ஒரு நாளுக்கு 2 மணி நேரம் ஜெயபுரம் பொதுமண்டபத்தில் வைத்து மருத்துவ சேவையை வழங்க கிளிநொச்சி மாவட்ட சுகாதாரத் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் இப்பகுதி மக்கள் சுகாதாரத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-6,323)

# மாவீரர் தினத்தன்று பிறந்த குழந்தைகளுக்குச் சேமிப்பு

ஒட்டுசுட்டான்,டிசெ.7

மாவீரர் தினத்தன்று பிறந்த குழந்தைகளுக்கு கிராமிய அபிவிருத்தி வங்கியினால் 40 'தளிர்' சேமிப்புக்கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அந்த அடிப்படையில் மாவீரர் தினத்தன்று கிளிநொச்சி மாவட்டத்தில் பிறந்த மூன்று குழந்தைகளுக்கு கிளிநொச்சிக் கிளையிலும்-

முல்லைத்தீவு, முள்ளியவளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தலா 5 குழந்தைகளுக்கு அப்பிரதேசங்களைச் சேர்ந்த கிளைகளிலும்-

மன்னார் கிளையில் 6 குழந்தைகளுக்கும், மட்டக்களப்புக் கிளையில் 19 குழந்தைகளுக்கும், பூநகரி, வவுனியா ஆகிய கிளைகளில் தலா ஒவ்வொரு குழந்தைகளுக்குமாக மொத்தம் 40 தளிர் சேமிப்புக் கணக்குகள் கிராமிய அபிவிருத்தி வங்கியால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஆண்டுகளில் இக் கணக்கில் வைப்பிலிடப்பட்ட பணத்தைவிட இவ் வருடம் இருமடங்கு அதிகரித்த பணத்தைக் கிராமிய அபிவிருத்தி வங்கி தளிர் சேமிப்புக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-6-341)



# தமிழீழ மோட்டார் ஊர்திப் பிரிவின் நடமாடும் சேவை இன்று ஆரம்பம்

வட்டக்கச்சி,டிசெ.7

தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுப் பகுதியினரின் நடமாடும் சேவைகள் இன்று தொடக்கம் எதிர்வரும் 19 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளன.

இதுவரை தமிழீழப் பதிவுகளை மேற்கொள்ளாத மோட்டார் ஊர்திகளை பதிவு செய்யும் நோக்குடனும் 2006 ஆம் ஆண்டுக்கான வரி அட்டையை வழங்கும் நோக்குடனும் இந்த நடமாடும் சேவை பிரதேச ரீதியாக நடத்தப்படவுள்ளது.

இச்செயற்பாடானது போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவின் பிரதேச செயலகங்களில் நடைபெறும். இதன்படி, இன்று நெடுங்கேணியிலும், நாளை ஒட்டுசுட்டானிலும், 9 ஆம் திகதி முள்ளியவளையிலும், 10 ஆம் திகதி முல்லைத்தீவிலும், 11 ஆம் திகதி விசுவமடுவிலும், 12 ஆம் திகதி பளையிலும், 13 ஆம் திகதி மருதங்கேணியிலும், 14 ஆம் திகதி பூநகரியிலும், 15 ஆம் திகதி முழங்காவிலிலும், 16 ஆம் திகதி இலுப்பைக்கடவையிலும், 17 ஆம் திகதி விடத்தல் தீவிலும்,18 ஆம் திகதி கனகராயன் குளத்திலும், 19 ஆம் திகதி புளியங்குளத்திலும் நடைபெறும்.

இச்சேவை காலை 9 மணிமுதல் பி.ப. 4 மணிவரை நடைபெறும் எனவும் தமிழீழ போக்குவரத்துப் பிரிவு வெளிக்களப் பரிசோதனைப் பகுதி மேலாளர் அறிவித்துள்ளார்.

ஊர்தியைப் பதிவு செய்வதற்கு உரிமையாளர் பழைய கடவுச்சீட்டு அளவுள்ள கறுப்பு வெள்ளைப் புகைப்படம் ஆயப்பகுதித் தீர்வைச் சான்றும் அதன் நிழற்படப்பிரதியும், சிறிலங்கா பதிவு ஆவணங்கள், குடும்ப அட்டை என்பவற்றைச் சமர்ப்பிக்க வேண்டியதுடன் பிணையாளியையும் அவரது குடும்ப அட்டையுடன் அழைத்துவருதல் வேண்டும். அத்துடன் பதிவு செய்யப்படும் ஊர்தியையும் கொண்டு வருதல் அவசியமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (த-405)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்

**இராமலிங்கம் சதீஸ்**

(சதீஸ் வீடியோ உரிமையாளர்)

சிரித்து விட்டு
சென்றுவிட்டீர்,
ஆறவில்லை
விழிகளில் நீர்......

வீடியோ ஜெயம்
சாவகச்சேரி



## சாவகச்சேரி வடக்கில் பொதுநோக்கு மண்டபம்

'நியாப்' திட்டம் 2 இன் கீழ் சாவகச்சேரி வடக்கு இலுவம் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் பொதுநோக்கு மண்டபம் ஒன்று அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டது.

இக்கட்டடம் 27 அடி நீளமும் 18 அடி அகலமும் கொண்டதாக அமையவுள்ளது.

இக்கட்டடத்திற்கான அடிக்கல் லினை தென்மராட்சி பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் சம்பிரதாய பூர்வமாக நட்டு வைத்தார்.

இந்நிகழ்வு க.கிருபானந்தக் குருக்கள் தலைமையில் நடைபெற்றது. (த-31)

## தேவை

யாழ்.நகரில் இயங்கும் முன்னணி நிறுவனத்தில் கடமையற்றுவதற்கு பெண் பிள்ளைகள் தேவை. பழகுவோரும் விண்ணப்பிக்கலாம்.

தொ.பே. 077 6171414
222 8427

(43729)(26-11-15)

## யாழ்.ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம் பாராட்டி வாழ்த்துகின்றோம்


பு.ஜனோஜ் 153


த.தர்சிகா 132


வி.பிரதீபன் 151


ப.மணிகாந் 130


பா.ஷயந்தன் 148


சௌ.லக்சன்யா 125


க.சரணியா 137


தி.சசிகரன் 125


க.ஆர்த்திகா 134


கு.ரகுராம் 124

ஐந்தாம் தர புலமைப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களையும், அவர்களைக் கற்பித்த பாடசாலை அதிபர், உப அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி மகிழ்கின்றோம்.

-பெற்றோர்.


விளம்பர அனுசரணை:- "வெங்கடேஸ்வரா"
125,127 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(43720)(26-11-15)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 31 - 07 - 1975

உதிர்வு 24 - 10 - 2005



**அமரர் இ.சதீஸ்**

வீடியோப் படப்பிடிப்பாளர் - நுணாவில் கிழக்கு

*ஆரத் தழுவி எம்மை அகமகிழ்ந்து முகம்மலர்ந்து*
*தீரப்புன் சிரிப்பதனால் தித்திக்கும் சொல்லதனால்*
*இராமலிங்கம் சதீஸ் நீ நண்பர்களின் நாயகனாய்*
*வீடியோப் படப்பிடிப்பின் விற்பன்னராய்த் திகழ்ந்து*
*வாடிக்கையாளர்கள் தொகை தொகையாய் நாடிவர*
*வீடியோ எடுப்பதற்காக விடிகாலை ஓட்டோதனில்*
*கூடிவரும் நண்பருடன் குதூகலமாய் செல்கையில்*
*தேடி வந்த எமனாக மினிபஸ் உன் ஓட்டோதனை*
*மோதிவிட மேதினியில் வாழ்ந்தது இனிப் போதுமென*
*மழலையால் அப்பா என அழைக்கும் உன் மகனையும்*
*உளம் முழுதாய் உன் நினைவாய் வாழும் உன்மனைவியையும்*
*பழுதில்லாப் பாசமுடன் சுற்றிவரும் நண்பரையும்*
*கதறியழ வைத்துவிட்டு கணப்பொழுதில் சென்றதெங்கே?*
*நண்பா உன் பிரிவினாலே நலமிழந்தோம் வெறுமையுற்றோம்*
*அன்பான சதீஸே! உனைக்காண்பதெப்போ? கதைப்பதெப்போ?*
*நாம் கண்ணீரைக் காணிக்கையாய்த் தருகிறோம் ஆன்ம சாந்திக்காக !*

கைதடி நுணாவில், மட்டுவில்
நண்பர்கள்.

## வறிய மாணவருக்கு அரிமாக்கழகம் உதவும்

சாவகச்சேரி, டிசெ .7

சாவகச்சேரி அரிமாக்கழகம் தென்மராட்சிப் பிரதேசத்தில் கல்வியை தொடர வசதியற்ற மாணவர்களுக்கு நிதி உதவி வழங்கத் தயாராக உள்ளதாக சாவகச்சேரி அரிமாக் கழகத்தைச் சேர்ந்த லயன் எஸ்.சிவபாலசுப்பிரமணியம் தெரிவித்தார்.

கல்வியைத் தொடரமுடியாத வசதி குறைந்த - தரம் 1 தொடக்கம் பல்கலைக் கழக உயர் நிலைக் கல்வி வரையான மாணவர்கள் யாராக இருந்தாலும் சாவகச்சேரி அரிமாக் கழக உறுப்பினர்களான லயன் கு.பிரகாஸ் அல்லது அதிபர் செ.சுப்பிரமணியத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-31)

## 3 ஏ பெறுபேறு பெற்ற தென்மராட்சி மாணவருக்கு பாராட்டும் பணப்பரிசும்

சாவகச்சேரி,டிசெ.7

இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளை க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தோற்றி 3ஏ பெறுபேறுகளைப் பெற்ற தென்மராட்சி மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கவுள்ளது.

இவர்களுக்கு பணப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-31)

## இராசாவின் தோட்டம் வீதியின் முதலாவது ஒழுங்கையை புனரமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.7

நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாது குண்டும் குழியுமாகக் காணப்படும் இராசாவின்தோட்டம் வீதியின் முதலாவது ஒழுங்கையைப் புனரமைத்துத் தரும்படி அப்பகுதி மக்கள் உரியவர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குண்டும் குழியுமாகக் காணப்படும் ஒழுங்கை தற்போது பெய்து வரும் மழை காரணமாக வெள்ளம் தேங்கி நிற்கின்றது.

இதனால் இப்பகுதியூடாக பயணம் செய்வோர் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குகினர். (த-190)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 28 - 01 -1922

மறைவு 19 - 11 - 2004

அமரர் **கந்தர் அம்பலவாணர்**

அன்பின் உறை விடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
வாழ்ந்த எம் தந்தையே
ஆண்டொன்று சென்றாலும்
ஆறாது உம் பிரிவு

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

*மானிப்பாய் றோட்,*
*உரும்பிராய்.*

**பிள்ளைகள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**மருமக்கள்.**

(43717)(26-11-15)

## முக்கிய அறிவித்தல்

அதிபர்களே மாணவ மாணவிகளே!

எங்கள் ஸ்தாபனத்தில் பொருள்களை கொள்வனவு செய்ய வேண்டாம் என்று திட்டமிட்டுச் சிலர் பரப்பிவரும் விஷமப் பிரசாரங்களை நம்பவேண்டாம். சில சக்திகள் ஏதோ உள்நோக்கத்துடன் பிரசாரம் செய்து வருவதாக அறிகின்றோம்.

ஒரே கூரையின் கீழ் எல்லாவிதமான பொருள்களையும் பெற்றுக் கொள்ளக்கூடியது எமது நிறுவனம். எங்கள் ஸ்தாபனம் 1959ஆம் ஆண்டு தொடக்கம் கடந்த 49 வருடமாக கல்விச் செல்வத்தை அள்ளி வழங்குவதுடன் இலங்கைத்தீவு பூராகவும் லட்சணக்கான வித்தகர்களை உருவாக்கிய ஸ்தாபனம். லாபநோக்குடன் நடத்தப்படும் ஸ்தாபனம் அல்ல இது ஒரு வரையறுக்கப்பட்ட தர்ம ஸ்தாபனத்தின் கிளை என்பதை அறியத்தருகின்றோம்.

**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**

இல.212, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்

உரிமையாளர்:- ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் இன்வெஸ்ட்மென்ட் லிமிட்டட்

## முத்திரை விநியோகம்

நவாலி, டிசெ.7

தெல்லிப்பழையிலிருந்து இடம் பெயர்ந்து சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தங்கியிருப்பவர்களுக்கான நிவாரண உணவு முத்திரைகள் கிராம சேவகர்களினால் வழங்கப்பட்டு வருகின்றன. (க-100)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி அதிபர் **செ.புத்மநாதன்** அவர்களின் அன்பு மாமனார்

**அமரர் தம்பையா சுந்தரமூர்த்தி**

அவர்கள் இறைபதமெய்திய செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம். துயருற்றிருக்கும் உறவுகளுக்கும் சுற்றாத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்திபெறவும் இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

பிரதி அதிபர்கள்,
ஆசிரியர்கள், மாணவர்கள்
ஆளணியினர்.

(43642)(26-11-15)

## திருமுறை விழா

யாழ்ப்பாணம், டிசெ.7

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்க சைவத்திருமுறை விழாவும், சைவ சமய செயற்பாட்டு பரிசளிப்பு நிகழ்வும் எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் ஆனைக்கோட்டை காசி காண்ட மட சிவன் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.வ.கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஆசியுரையினை காசி காண்டமட சிவன் ஆலய சிவஸ்ரீ சோ.கௌரிபாலக் குருக்களும் வாழ்த்துரையினை ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாலய அதிபர் அ.சதானந்தனும் நிகழ்த்தவுள்ளனர்.

சிறப்புரைகளை செஞ்சொற் செல்வன் ஆறு. திருமுருகன், சைவப்புலவர் சு.செல்லத்துரை ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ஒ-13)

## கண்ணீர் அஞ்சலி

எமது வித்தியாலய அதிபர்
திரு.இ.அருணகிரிவாசன் அவர்களின்
அன்புத் தாய்
திருமதி **சின்னம்மா இராமலிங்கம்** அவர்களின்
மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

யா/கோண்டாவில் இந்து மகாவித்தி.,
கோண்டாவில்.

ஆசிரியர்கள், மாணவர்கள்,
பழைய மாணவர் சங்கம், அபிவிருத்திச் சங்கம்.

(43637) (24-26-11-15)

## துயர் பகிர்கின்றோம்

**எந்திரி கே. துரைராசா**

(யாழ். கிளை முகாமையாளர் நிர்மாண உத்தரவாத நிதியம்)

அன்னார் நேரகாலம் பார்க்காது அபிவிருத்திப் பணிக்காக உழைத்தார் என்பதை மறக்கமுடியாது. அன்னாரின் திடீர் மறைவையிட்டு துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

*வடக்கு-கிழக்கு பிராந்திய நிர்மாணிகள் சங்கம்,*
*தலைமை செயலகமும்,*
*மாவட்ட செயலகங்களும்.*

(43725)(53-26-11-15)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

கட்டணம் 1000/- உடன் 6 மாதங்களில் ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயில பிரிவில் 10 மாணவர்கள் மட்டும், By.விக்னேஸ்வரன் ஆச்சாரி. 426 (302) K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (43712)(26-11-15)

## கண்ணீர் அஞ்சலி



**விஜேந்திரன் பிரதீபன்**

*எமது நண்பன் விஜேந்திரன் பிரதீபன் அவர்கள் 05.12.2005 திங்கட்கிழமை அகலாமரணம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியும், ஆழ்ந்த துயரம் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

2005 வர்த்தகப்பிரிவு,
மாணவர்கள் [யாழ்.மத்திய கல்லூரி]

(43719) (39-26-11-15)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
கல்வியியல் முதுமாணி அனுமதிப் பரீட்சை
கல்வியியல் பட்டப்பின் டிப்ளோமா அனுமதிப் பரீட்சை

மேற்படி பரீட்சைகள் முறையே 11.12.2005 (ஞாயிற்றுக்கிழமை) 17.12.2005 (சனிக்கிழமை) ஆகிய திகதிகளில் நடைபெறும்.

- பதிவாளர்.

(அ/46650)(42-10-11)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 29 - 10 - 1929 | 18 - 11 - 2004 |

## அமரர் திருநாவுக்கரசு இராசதுரை

(உரிமையாளர் T.R. ஹாட்வெயர் சென்ரர் சித்தன்கேணி,
தர்மகர்த்தா - சிலம்புப்புளியடி வைரவர் கோயில், சங்கானை)

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
எங்களுக்கு நல்வழி காட்டிய நாயகனே!
எமக்கு இனிய வாழ்வளித்த தெய்வமே!
மனிதவாழ்வுக்கு இலக்கணமாக வாழ்ந்து காட்டியவரே!
பிறந்த ஊருக்குத் தொண்டு செய்த தொண்டனே!
ஊர்மக்கள் புகழ வாழ்ந்த உத்தமரே!
எங்களைச் சிறப்புற வாழவைத்த அன்புத் தெய்வமே!
ஓராண்டென்ன எத்தனை எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்களுடைய ஒவ்வொரு செயல்களும் எங்கள் நெஞ்சைவிட்டு
என்றென்றும் அகலாது - ஐயா!
நெஞ்சினிலே உங்களை இருத்தி
நினைவுகளிலே உங்களை நிறைத்து

*உங்கள் ஆத்மசாந்திக்காக எல்லாம் வல்ல சங்கானையூர் சிலம்புப்புளியடி வைரவரைப் பிரார்த்திப்போமாக.*

சித்தன்கேணிச் சந்தி,
சித்தன்கேணி. (43711)(42-11-15)

அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## நாவலர் பாடசாலை பரிசில் தினம்

வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தின் பரிசில்தின விழாவும் நிறுவுநர் ஆறுமுகநாவலரின் நினைவுப் பேருரையும் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெறவுள்ளன.

வித்தியாலய அதிபர் ந.சிவராஜா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராகப் பேராசிரியர் ப.கோபால கிருஷ்ணஐயர் கலந்துகொள்ளவுள்ளார். நாவலர் நினைவுப் பேருரையை யாழ்.பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர் பொ.செங்கதிர்ச்செல்வன் நிகழ்த்துவார். நாவலர் சரித்திரம் (மறுபதிப்பு) எனும் நூலினை யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம், வெளியிட்டு வைக்க முதற்பிரதியினை கலாநிதி வ.கந்தசாமி பெற்றுக்கொள்வார். நிகழ்வின் இறுதியில் மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். (ஓ-13)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம்,டிசெ.7

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு யங்ஹென்றீசியன் விளையாட்டுக் கழகம் மாவட்ட ரீதியில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்றும் நாளையும் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

இன்று பிற்பகல் 3.30 மணிக்கு மாதகல் சென்.தோமஸ் வி.க.எதிர் நவாலி சென்.பீற்றஸ்.

பிற்பகல் 4.30 மணிக்கு சக்கோட்டை சென்.சேவியர் வி.க.எதிர் ஏழாலை கண்ணகி வி.க.

நாளை பிற்பகல் 3.30 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தா ஸ்ரார் எதிர் குப்பிளான் விக்னேஸ்வரா வி.க.

பிற்பகல் 4.30 மணிக்கு யாழ்.பல்கலைக் கழக விளையாட்டு விஞ்ஞான அலகு வி.க. எதிர் கரவெட்டி இமையாணன் வி.க.(ஓ-190)


**புத்தகம் பைன்டிங் பண்ணத் தெரிந்த அனுபவமுள்ள பைன்டர்ஸ் தேவை**

*பழக விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.*

*தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:*

**விவேகானந்தா அச்சகம்,**
**10,14,ஸ்ரான்லி வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(43709)(42-11-15)


## லட்சார்ச்சனை



தாவடி - ஸ்ரீ ஐயப்பன் ஆலயத்தில்

இன்று (07-12-2005) புதன் தொடக்கம் 26-12-2005 திங்கள் மாலை 6.30 மணிவரை நடைபெறும்.

அடியார்கள், ஐயப்ப சுவாமிமார்கள் வில்வம், துளசி, பூஎன்பனவற்றைச் சமர்ப்பித்து பூரண பலனைப் பெறவும். நாட்டில் சாந்தி, சமாதானம் நிலவப் பிரார்த்திப்போமாக.

*சுவாமியே சரணம்.*

ஐயப்பன்அடியான்
பிரம்மஸ்ரீ-தானு-வாசுதேவகுரு(பிரதமகுரு).

(43615)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை
இராமநாதன் நுண்கலைக்கழகம்
நுண்கலைமாணி இசை/ நடனம்
கற்கை நெறிகளுக்கான அனுமதிப் பரீட்சைகள்
*பல்கலைக்கழக அனுமதி 2005/2006*

### பரீட்சைத் திகதி மாற்றம்


மேற்படி பரீட்சைகள் தொடர்பாக பரீட்சை அனுமதி அட்டைகள் விண்ணப்பதாரிகளுக்கு ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. தவிர்க்க முடியாத காரணங்களினால் பரீட்சை நடைபெறும் திகதிகளில் பின்வரும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதைத் தயவுடன் அறியத்தருகின்றேன்.

| கற்கைநெறி | புதிய திகதி | மாவட்டம் | ஏற்கனவே அறிவிக்கப்பட்ட திகதி |
|---|---|---|---|
| நடனம் | 09.12.2005 | யாழ்ப்பாணம் தவிர்ந்த | 09.12.2005 |
| | 10.12.2005 | யாழ்ப்பாணம்தவிர்ந்த | 10.12.2005 |
| | 11.12.2005 | யாழ்ப்பாணம் | 05.12.2005 |
| | 11.12.2005 | யாழ்ப்பாணம் | 06.12.2005 |
| | 12.12.2005 | யாழ்ப்பாணம் | 07.12.2005 |
| வயலின் வீணை மிருதங்கம் பண்ணிசை | 09.12.2005 | யாழ்ப்பாணமும் யாழ்ப்பாணம் தவிர்ந்ததும் | 09.12.2005 |
| இசை வாய்ப்பாட்டு | 09.12.2005 | யாழ்ப்பாணம் தவிர்ந்த | 09.12.2005 |
| | 10.12.2005 | யாழ்ப்பாணம் தவிர்ந்த | 10.12.2005 |
| | 11.12.2005 | யாழ்ப்பாணம் | 05.12.2005 |
| | 11.12.2005 | யாழ்ப்பாணம் | 06.12.2005 |
| | 12.12.2005 | யாழ்ப்பாணம் | 07.12.2005 |
| | 13.12.2005 | யாழ்ப்பாணம் | 08.12.2005 |

பதிவாளர்.
05.12.2005

(அ/46649)(42-11-15)

# 45ஆம் நாள் நினைவஞ்சலி



| கண்மகிழ | கண்நெகிழ |
|---|---|
| 31.07.1975 | 24.10.2005 |

கடந்த 24.10.2005 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியையில் கலந்துகொண்டு ஆறுதல் கூறிய அனைவருக்கும், எமக்கு சகலவழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் மற்றும் அனுதாபச் செய்தி அனுப்பிய உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (07.12.2005) புதன்கிழமை கல்லடி வீதி, துணாவில் கிழக்கு, சாவகச்சேரியில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற உள்ளது. உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் பின்னர் இடம்பெறும் மதியபோசன விருந்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

## அமரர் இராமலிங்கம் சதீஸ்

(சதீஸ் வீடியோ உரிமையாளர்)

(43716)(54-11-15-42)

கல்லடி வீதி,
துணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

என்றும்
நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



கடந்த திங்கட்கிழமை 05.12.2005 அன்று அகால மரணம் அடைந்த எமது முன்னாள் மாணவ முதல்வர்

செல்வன்

**விஜேந்திரன் பிரதீபன்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உறவினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*மாணவ முதல்வர் சபை,*
*யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.*

(43730) (54-11-46)

## உரும்பிராயில் மிதிவெடிச் சம்பவம் ஒருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், டிசெ.7

உரும்பிராய்ப் பகுதியில் நேற்று மிதிவெடிச் சம்பவம் ஒன்று இடம் பெற்றிருக்கிறது.

வேலி அடைப்பதற்காக கம்பு வெட்டச் சென்ற ஒருவரே மிதிவெடியில் சிக்கி தனது இடதுகால் பாதத்தில் படுகாயமடைந்தார்.

நேற்றுக்காலை இடம் பெற்றஇச்சம்பவத்தில் இருபாலையைச் சேர்ந்தவரான சிவராசா பால்ராஜ் (வயது 32) என்பவரே படுகாயமடைந்தவராவார். இவர் யாழ்.போதான வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-15-154)

## ஆசிரிய நியமனம் கிடைக்காதோர் மறியல் போராட்டம் நடத்த முஸ்தீபு

தென்மராட்சி,டிசெ.7

போட்டிப் பரீட்சையில் முன்னிலைப் புள்ளிகள் பெற்றும் இதுவரை ஆங்கில ஆசிரிய நியமனம் கிடைக்காதவர்கள் கல்வி அலுவலகங்கள் முன்பாக போராட்டம் நடத்தப் போகிறார்கள் என்று தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக அவர்கள் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளனர்.

வர்த்தமானி பத்திரிகையின் விளம்பரத்துக்கு அமைய ஆங்கில ஆசிரியர் பதவிக்காக விண்ணப்பம் செய்து போட்டிப் பரீட்சையில் முன்னிலைப் புள்ளிகள் பெற்றபோதிலும் மாகாணக் கல்வி அமைச்சினால் தமக்கு இதுவரை நியமனம் வழங்கப்படவில்லையெனவும்-

நியமனத்துக்காக ஒருவருடத்துக்கு மேலாக காத்திருந்த போதிலும் போட்டிப் பரீட்சையில் பின்னிலைப் புள்ளிகள் பெற்றவர்களுக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகவும்-மகஜரில் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட தமக்கு நீதி கிடைக்காவிடில் கல்வி அலுவலகங்களின் முன்னால் மறியல் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்றும் குறிப்பிட்டுள்ளனர். (ஓ-117)

## மனித உரிமைகள் தின வைபவம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.7

வடக்கு-கிழக்கில் உள்ள மனித உரிமைகள் அமைப்புகளும் ஏனைய நிறுவனங்களும் ஒன்றிணைந்து கரித்தாஸ் நிறுவனத்தின் தலைமையில் நாளை வியாழக்கிழமை மல்லாகம் ஆர்.டி.எஸ் மைதானத்தில் நடத்த விருந்த அனைத்துலக மனித உரிமைகள் தினநிகழ்வு தவிர்க்க முடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது என்று கியூடெக் - கரித்தாஸ் நிறுவன இயக்குநர் வண.கி.யோ.ஜெயக்குமார் அறிவித்துள்ளார்.

விழா நடைபெறும் தினம் தொடர்பாகப் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-202)

## 45ஆம் நாள் கண்ணீர்க் காணிக்கை



*அமரர்*

**இராமலிங்கம் சதீஸ்**

*(சதீஸ் வீடியோ உரிமையாளர்)*

மலர்வு 31.07.1975 — உதிர்வு 22.10.2005

சோடிழந்த அன்றிலைப் போல் துயரமானோம்
தோகைமயில் வாயிலகப்பட்டதோரு
- சற்பமானோம்
காடுகளில் இனம்பிரிந்த கலைகளானோம்
கருங்கடலில் காற்றடிக்கும் கப்பலானோம்
ஓடுகின்ற பாய்மரத்தின் காகமானோம்.
குடும்ப உறவுகளின் துயரில் நாமும்
பங்குகொள்கிறோம்.

பிரகாஷ் வெல்டிங் வேர்க் சொப்
தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி.

(43727) (54-11-46)

**பொன்னம்பலம் குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### டாக்டர் தம்பையா அப்பாத்துரை



சித்தன்கேணி, சிவன் கோயிலடியைச் சேர்ந்த டாக்டர் தம்பையா அப்பாத்துரை 02-12-2005 வெள்ளிக்கிழமை இந்தியாவில் இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஓவசியர் தம்பையா-முத்தம்மா தம்பதியரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்றவர்களான தபால் அதிபர் நாகலிங்கம்- திலகவதி தம்பதியரின் மூத்த மருமகனும் செல்வவதியின் அன்புக் கணவரும் பாஸ்கரன் (கனடா), திவாகரன் (கனடா), சிறீகரன் (கனடா), சிவகரன் (கனடா), மீனாம்பாள் (இந்தியா), வசிகரன் (இந்தியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கங்காதேவி, மேகலா, ஜனனி, அன்பழகன் ஆகியோரின் அன்பு மாமனாரும் அமுதவல்லி, பத்மநாதன், செல்வரட்ணம், சிவபாதசுந்தரம், புஸ்பராணி, சற்குணம் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற அருணாசலம் மற்றும் விவேகானந்தன், சர்வேஸ்வரி, இராமநாதன் (அமெரிக்கா), பரமேஸ்வரி, கனகாம்பிகை, சண்முகநாதன் ஆகியோரின் அருமை மைத்துனரும் நிருஜன், அனித்தா, கஜன், தாரணி, தர்சிகன், மதுரா, சாஸ்றூஷன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.12.2005) புதன் கிழமை இந்தியாவில் நடைபெறும்.

அத்துடன் சிவன் கோயிலடி, சித்தன் கேணியில் உள்ள அவரது இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சகோதரர்கள்*
*சிவன் கோயிலடி,*
*சித்தன்கேணி.*

(43731) (54-11-46)

தகவல்:
**மனைவி** *(இந்தியா),*
**மகன் வசிகரன்** *(இந்தியா),*
**பிள்ளைகள்** *(கனடா).*

## Jayoda ஜயோதா ජයෝදා

### உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6404250 முதல் 6415286 வரை சீட்டிழுப்பு இல. 191 திகதி 05-12-2005

வெற்றி எண்கள் **5 6 0 3 4 7** சுப்பர் எண் **07**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,26,05,050/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,26,05,050/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 10 | 50,000/- | 5,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 93 | 5,000/- | 4,65,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 960 | 500/- | 4,80,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 9,518 | 50/- | 4,75,900/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 94,370 | 10/- | 9,43,700/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 09 | 5,000/- | 45,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 99 | 1,000/- | 99,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 956 | 100/- | 95,600/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 9,429 | 20/- | 1,88,580/- |
| | | மொத்தம் | 42,92,780/- |
| மோட்டார் சைக்கிள்களின் பெறுமதி | 08 | 75,325/- | 6,02,600/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | | | 48,95,380/- |

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரு. **1,28,69,850/-**

தொடர் இல. 7331421 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 டிசம்பர் 08 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்வுக்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மட்டக்களப்பு | 6412151-4-69 |
| குருநாகல் | 6405961-8-45 |
| புத்தளம் | 6414309-6-23 |
| கொழும்பு | 6413117-1-49 |
| களுத்துறை | 6412453-6-62 |
| கம்பஹா | 6411576-4-70 |
| கொழும்பு | 6412664-2-47 |
| இரத்தினபுரி | 6411717-0-34 |


ஆயுர் வேத மருந்துகள் மூலம் நாங்கள் சிகிச்சையளிக்கிறோம்




பக்க விளைவுகள் இல்லை உள் விளைவுகள் இல்லை

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்

FAIR PHARMA (PVT) LTD
(Manufacturers of Ayurvedic Medicines)
A BOI Approved & ISO 9001:2000 QMS Certified Company
Level 5/East Tower/1C, World Trade Centre, Colombo 01.
Tel : 0094-11-5517897, 5551879, 5558442 Fax : 0094-11-5517756
E-mail : fppvtl@lankabellnet.com
Website : www.fppvtl.org - AVAILABLE ON LINE

தொடர்புகளுக்கு கிழமை நாட்களில் திறக்கும் நேரம் காலை 9.00மணி-மாலை 5.00மணி வரை சனிக்கிழமைகளில் காலை - 9.00மணி - மாலை 2.00வரை

# கண்ணீர்க் காணிக்கை



## அமரர் கி.துரைராசா

(இளைப்பாறிய பொறியியலாளர்)

எமது ஆலயத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து கட்டடக்கலைக்கு ஆக்கம் தந்த அன்னாரின் திடீர் மறைவை ஒட்டி எமது ஆழ்ந்த அனுதாபங்களை அவர்தம் குடும்பத்தினருக்கு தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**நாரந்தனை சரவணை கர்ணந் தோட்டம்,**
**ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில்.**

*ஆலய பரிபாலனசபை.*

(43736) (53-12-45)

# கண்ணீர் அஞ்சலி

எமது கழகத்தின் உபசெயலாளர் Rtn. இ.மகேந்திரன் அவர்களின் சகோதரர் **இராஜதுங்கம் சிவநேசராசா** அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-46666)
(53-12-45)

**றோட்டறிக்கழகம்,**
**யாழ்ப்பாணம்.**

# மரண அறிவித்தல்கள்

## குணபாலசிங்கம் கீர்த்திபானு

திருப்பூர், மயிலிட்டியை நிரந்தரமாகவும் உதயநகர் மேற்கு கிளிநொச்சியை தற்காலிக முகவரியாகவும் கொண்ட குணபாலசிங்கம் விஜயராணி தம்பதியரின் மகள் கீர்த்திபானு 05.12.2005 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினம், இராசரத்தினம், பாக்கியம் மற்றும் வண்ணமயில் அவர்களின் அன்புப்பேர்த்தியும், தனம் யேசு, பாபு, ராசா மற்றும் காலஞ்சென்ற தவம், ஜெயம் அவர்களின் அன்புப் பெறாமகளும், விஜயா, வெள்ளி மலை மகள், சயந்தன், சிவம், ரவிச்சந்திரன், சுப்ரமணியம், பிரகாஷ், செல்லக்கிளி, கீரன், அம்பிகாவதி, பரமஞானி அவர்களின் மருமகளும், ஜெனுசா, பானுசா, ஜெலி, தனுஷன், யதுர்சா ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று (06.12.2005) செவ்வாய்க்கிழமை மருதடி, புலோலிமத்தி (டிப்போ அருகில்) வைரவன் இல்லத்தில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி-46663)
(54-12-15)

**தகவல்:-**
**இ.ரவிச்சந்திரன்**
**(மாமன் - வவுனியா வளாகம்).**

## திருமதி இரத்தினம்மா தம்பிராசா

கொக்குவில் கிழக்கு, நந்தாவிலைப் பிறப்பிடமாகவும் பொற்பதி வீதியை வதிவிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வருபவருமான திருமதி இரத்தினம்மா தம்பிராசா அவர்கள் 4.12.2005 ஞாயிற்றுக்கிழமை கனடா ஸ்காபுரோ நகரில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி சோதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னப்பு- செல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சின்னப்பு தம்பிராசா(துரை) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற திருமதி மகேஸ்வரி சுப்ரமணியத்தின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சுப்ரமணியம் **(N.P.S)**, செல்வநாயகம் **(R.M.P)**, திருமதி கண்மணி செல்வநாயகம் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற பாலகிருஸ்ணன்,சுலோசனாதேவி(ஓய்வு பெற்ற ஆசிரியர்), சுகந்தாதேவி, ஸ்ரீபற்குணன் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற வசந்தகுமாரன், பரமேஸ்வரன், தவநேசன், நரேந்தின், பாலகிருஸ்ணன், பாஸ்கரன், அனுராதா, ரூபினா, ஆகியோரின் அன்புத்தாயாரும், பாலசுப்ரமணியம், கருணானந்தசிவம், வசந்தாதேவி, பவானி, கொன்சி, சித்திரா, கண்ணகி, உமாலினி, தசரதன், நற்குணசிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும் பாலஸ்கந்தா, சந்திரிக்கா, பாலரமணா, நிஷாந்தி, அனித்தா, ஜினித்தா, கருணராஜ், மிதுலா, ரம்யா, பிரதீபா, பிரியங்கா, பிரியா, நிலாந்தி, அனந்தன், கோகுலன், கனிஷா, விதுஷன், திவ்யந்தன், சர்மிளா, கபிலன், நிரன், நிஷானா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் அகில், கெலின் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 6.12.2005 செவ்வாய்க்கிழமை, 7.12.2005 புதன்கிழமை ஆகிய இரு தினங்களும் பிற்பகல் 5 மணி முதல் 9 மணி வரை 3280 **SHEPPARD AVENUE EAST** இல் உள்ள **HIGELAND FUNERAL HOME** இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு வியாழன் காலை 10 மணி முதல் 12 மணி வரை **DONMILLS STEELS** இலுள்ள **HIGHLAND MEMORY GARDEN** மயானத்தில் இறுதிக் கிரியைகளுடன் தகனமாகும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி-46664)
(53-12-45)

*மு. நவரட்ணராஜா*
**53, ரட்ணாகர பிளேஸ்,**
**தெஹிவளை.**
T.P.0112-722750

*தகவல்:-*
*பிள்ளைகள்*
*416-335-0438* CANADA
*49 2302 697157* GERMANY

## திருமதி ஜோசப் அன்னம்மா

பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜோசப் அன்னம்மா நேற்று (06.12.2005) செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற தா.ஜோசப்பின் அன்பு மனைவியும் அல்பிறட், செல்வநாயகம், மதுரநாயகம், இமெல்டா, ராஜசேகரம் ஆகியோரின் அன்புத்தாயாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இன்று (07.12.2005) புதன்கிழமை பி.ப.3.30 மணியளவில் புனித செபமாலை ஆலயத்தில் இரங்கல் திருப்பலியுடன் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

*முல்லையடி வீதி,*
**பண்டத்தரிப்பு.**

(43735)
(53-12-45)

*தகவல்:-*
*A. போல் குயின்ரஸ்.*
*(பேரன்).*

# மாணவர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பாடசாலைகளுக்கு அருகில் உள்ள இராணுவ முகாம்கள், காவலரண்கள் அகற்றப்படுவதோடு அச்சுறுத்தல் எவையுமற்ற சுதந்திரமான கற்றல் செயற்பாடுகளுக்கு இராணுவம் வழிவிடல் வேண்டும்.

என்ற கோரிக்கையோடு தமிழ் மாணவர் ஒன்றியத்தின் அழைப்பின் பேரில் கல்விச் செயற்பாடுகளைப் புறக்கணிக்கும் போராட்டம் வடமராட்சியில் ஆரம்பிக்கப்பட்டது. வடமராட்சிப் பிரதேசமெங்கும் கல்விச் செயற்பாடுகள் அனைத்தையும் புறக்கணித்த மாணவர்கள் தங்களது கோரிக்கைக்கான நியாயமான பதிலை நேற்று மாலைக்கிடையில் இராணுவத் தரப்பினர் தர வேண்டுமெனக் கோரி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஹாட்லிக் கல்லூரி வளாகத்துள் அமைந்திருக்கும் இராணுவ முகாம் அதிகாரிகளுடனும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவருடனும் தமிழ் மாணவர் ஒன்றியத்தினர் பேச்சுவார்த்தை நடத்தியபோதும் பலனேதும் எட்டப்படவில்லை.

இந்நிலையில் பருத்தித்துறை நெல்லியடிப் பகுதிகளில் மாணவர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். நெல்லியடிப் பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் மீது இராணுவத்தினர் இருபதுக்கும் மேற்பட்ட வேட்டுக்களைத் தீர்த்தனர். பருத்தித்துறைப் பகுதியில் மாணவர் மீது தடியடிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

உரிமைக்காகப்போராடும் மாணவர்களின் மீது அவர்களை அடக்கும் முகமாக ஸ்ரீலங்காஇராணுவம் தமது ஆயுத பலத்தைப் பிரயோகிப்பதை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு பாரிய பின் விளைவுகள் ஏற்படுமெனவும் எச்சரிக்கின்றோம்.

மாணவர் ஒன்றியத்தால் அழைப்பு விடப்பட்டு வடமராட்சியில் இடம்பெற்ற போராட்டத்திற்கு அரசுத்தரப்பும், இராணுவத் தரப்பும் இதுவரையில் பதிலெதுவும் தராத நிலையில் அனைத்துக் குடாநாட்டு மாணவர்களும் இனிவரும் தினங்களில் தொடர்ச்சியாக கல்விச் செயற்பாடுகளைப் புறக்கணிக்க உள் ளோம்.

தொடர்ந்தும் பதில் தராமல் இழுத்தடிக்கப்படுமானால் க.பொ.த (சா/த) பரீட்சையைக் கருத்திற்கொண்டு எதிர்வரும் 9 ஆம் திகதி மாலையுடன் எமது போராட்டத்தினை தற்காலிகமாக இடைநிறுத்தி பரீட்சை முடிவடைந்தவுடன் குடாநாடெங்கும் தொடர்ச்சியாக எதிர்ப்புப் போராட்டங்களை மாணவர்களாகிய நாங்கள் முன்னெடுப்போம் - என்றுள்ளது. (3)

# மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலைக்குப் பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தின் விடுதலைப் புலிகள் பிரதேசத்தில் இருந்தே இந்தப் படகு'வந்ததாகவும்-

படகில் வந்தவர்கள் விடுதலைப் புலிகள் உறுப்பினர் எனவும் தெரிவித்துள்ள மன்னார் பொலீஸார் அப்படகில் இருந்த மூன்று ஆண்களையும் ஒரு பெண்ணையும் கைது செய்து விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

படகில் இருந்து 2 கைக்குண்டுகள், புலிகளின் பெண் உறுப்பினர் அணியும் 2 சீருடைகள் 3 இடுப்புப் பட்டிகள் என்பன கைப்பற்றப் பட்டுள்ளன என தெரிவித்த மன்னார் பொலீஸார், சந்தேக நபர்கள் பயணம் செய்த படகும் தடுத்துவைக்கப்பட்டுள்ளது எனக் கூறினர்.

இச்சம்பவம் குறித்து புலிகளின் கருத்தை உடனடியாக அறிய முடியவில்லை. (3-12)


மனோகரா யாழ்ப்பாணம்



7.ஆவது வெற்றி வாரமாக இளைய தளபதி விஜய்,அசின்,பிரகாஷ்ராஜ் நடித்த
சிவகாசி
கா.நே:10.30,2.30,6.30,9.30(பு.நே)
9ஆம் திகதி முதல்
காலை 10.30 காட்சியாக சிவகாசி
1.30,4.30,7.30,10.30 காட்சியாக சூரியா, திரிஷா வடிவேல் நடித்த
ஆறு
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு
9 ஆம் திகதி முதல் புதிய நேரப்படி புதிய காட்சி நேரம்
காலை 10.30, மதியம் 1.30, மாலை 4.30, இரவு7.30,10.30

ராஜா யாழ்ப்பாணம்
அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க இந்தியாவில் 200 நாள்களுக்குமேல் ஓடிய வெற்றிச்சித்திரம்.
சுப்பர் ஸ்ரார் ரஜனி, இளையதிலகம் பிரபு, ஜோதிகா, நயன்தாரா, வடிவேல், வினித், விஜயகுமார் நடித்த
சந்திரமுகி காட்சிநேரம்: பு.நே. 10.30, 2.30, 6.30,

நாகம்ஸ் சுன்னாகம்



இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடாக
அர்ஜூன், நமிதா, வடிவேல் நடித்த
ஆணை
தினசரி: புது நேரம் 11.00, 3.00, 7.00,10.00


# பரிசளிப்பு விழா

சங்கானை, டிசெ.7

அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் வருடாந்தப் பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை பாடசாலை மண்டபத்தில் அதிபர் கு.ஜெகநாதன் தலைமையில் நடைபெறுகின்றது.

இந்நிகழ்வில் தெல்லிப்பழை உதவிப் பிரதேச செயலர் சு.முரளிதரன் பிரதம விருந்தினராகவும், வலிகாம வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் (அழகியல்), திருமதி விமலா நாகேஸ்வரன், ஓய்வு பெற்ற அதிபர் அ.விஸ்வநாதன் மற்றும் வலிகாமம் வலய உடற்பயிற்சி ஆலோசகர் மு.லோகநாதன் ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்கின்றனர். (3-29)

**மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழகம் நடத்தும்**
**கல்விசார் சேவைத்திட்டம்**

We Serve

சண்டிலிப்பாய் கோட்டத்தில் 2005 ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி எய்திய மாணவர்களை ஊக்குவிக்கும்

## பாராட்டு வைபவம்

**காலம்: 08.12.2005 (வியாழன்) பி.ப. 3 மணி**
**இடம்: பிரதேச சபை மண்டபம், மானிப்பாய்.**

பிரதம விருந்தினர்: **திரு.கே.கணேஷ்** (யாழ். அரச அதிபர்)
கௌரவ விருந்தினர்கள்: **திரு.P.விக்கினேஸ்வரன்**
[கல்விப்பணிப்பாளர் -வலிகாம் வலயம்]
**திரு.K. தனபாலசிங்கம்**
[கோட்ட கல்விப்பணிப்பாளர், சண்டிலிப்பாய்]
சிறப்பு விருந்தினர்: **லயன்.S.யோகசிங்கம்**
[மாவட்டத்தலைவர்-கல்வி மாவட்டம் 306B1]

**பிரதேசவாழ் பெரியோர்களை பங்குபற்றி சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

*லயன் எஸ். ஸ்ரீநிவாசன்*
*கழகத் தலைவர்.*

லயன் எஸ்.எஸ்.தங்கராஜா
சேனை இணைப்பாளர்/ செயலாளர்.

(சி-46667)

# மரண அறிவித்தல்கள்

## திருநாவுக்கரசு ஆறுமுகம் (செல்வம்)

பாண்டியன்தாழ்வைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு ஆறுமுகம் அவர்கள் நேற்று (06.12.2005) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல். துண்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

62, கொழும்புத்துறை வீதி,
[சந்தனமாதா கோயில் அருகில்]
பாண்டியன்தாழ்வு.

(43737)
(54-12-15)

**தகவல்:**
**தி. ரூபன்**
**(மருமகன்).**

## திருமதி பழனி சிவகாமி

காரைநகர், சடையாளியைச் சேர்ந்த திருமதி பழனிசிவகாமி அவர்கள் நேற்று(06.12.2005) செவ்வாய்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் அமரர் வ.பழனி அவர்களின் அன்பு மனைவியும் அமரர் சபாரத்தினம், அமரர் கதிரவேலு, நடராஜா (இளைப்பாறிய உயர் நீதிமன்றப் பதிவாளர்,ஜேபி), சதாசிவம், இராஜதுரை(யாழ்.போதனா வைத்தியசாலை), நற்குணராசா ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (06.12.2005) செவ்வாய்க்கிழமை காரைநகரில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சடையாளி அ.மி.த.க.*
*பாடசாலை அருகில்,*
*காரைநகர்-0777 145807*
*0777 245886*

(43734)
(53-12-45)

**தகவல்:**
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

## லயன் கிருஷ்ணபிள்ளை துரைராஜா



*(ஓய்வு பெற்ற பிரதம பொறியியலாளர் (RDD), நிறைவேற்றுப் பொறியியலாளர் (RDA), கிளை முகாமையாளர்-நிர்மாண உத்தரவாத நிதியம்)*

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், 287, பலாலி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கி.துரைராஜா அவர்கள் 04.12.2005 அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணபிள்ளை தங்கம்மாவின் அன்பு மகனும், காலஞ்சென்ற **ANK** பொன்னுத்துரை மற்றும் மங்கையர்க்கரசியின் மருமகனும், பாலசரஸ்வதியின் அன்புக்கணவரும், கலாநிதி மங்களகுமாரி(**Canada**), ராஜ்குமார்(**London**), பாலகுமாரி(ஆசிரியை **Hindu Ladies College Wellawatte**) ஆகியோரின் அன்புத் தந்தையும், கலாநிதி ஜெயநாதன் (**Canada** ), செல்வநாதன் (பொறியியலாளர் **RDA**) ஆகியோரின் மாமனாரும் சிவரம்யா(**Methodist College Colombo-3**), வித்யா(**Canada**), கிருஷ்ண்யா ஆகியோரின் ஆசைப் பேரனும், காலஞ்சென்ற சதாசிவம், நடராசா மற்றும் பாலசுந்தரம் (**Aswi Rice Mill Vavuniya**), சிவராஜா, தவமணிதேவி, காலஞ்சென்ற பொன்னம்பலம் ஆகியோரின் சகோதரனும் பாலசுப்ரமணியம் (**Canada**), தனபாலச்சந்திரன்(சோதி), காலஞ்சென்ற கனகசபாபதி மற்றும் பாக்கியராஜா, கமலாவதி (**Canada**), விமலாவதி, புஷ்பவதி(**London**), பத்மாவதி(**London**) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2005) புதன்கிழமை பிற்பகல் 4 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(43715)
(54-12-15)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# உயர் பாதுகாப்பு வலயத்தை விட்டுக்கொடுக்க முடியாது

## புதிய இராணுவத்தளபதி திட்டவட்டம்

கொழும்பு, டிச. 07

யாழ்ப்பாணத்தின் உயர் பாதுகாப்பு வலயம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படும். அதற்கு மாறாக உயர் பாதுகாப்பு வலயம் நீக்கப்பட வேண்டும் எனச் சொல்லப்படுவதில் அர்த்தமில்லை. பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கு உயர் பாதுகாப்பு வலயம் மிக முக்கியம்.

- இவ்வாறு புதிய இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத்பொன்சேகா நேற்றுப் பதவியேற்றதையடுத்து ஊடகவியாளர்களைச் சந்தித்து உரையாடும்போது கூறினார். அவர் இது குறித்து மேலும் கூறியதாவது:-

ஒரு நாட்டினதும், அவ்வப்பிரதேசத்தினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு அதி உயர்பாதுகாப்பு வலயங்கள் பிரகடனப் படுத்தப்படுவது தவிர்க்க முடியாதது.

கொழும்பில் துறைமுகங்கள், விமான நிலையம், ஜனாதிபதி மாளிகை போன்றவற்றின் சுற்றாடல்கள் அதி உயர்பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு பிரகடனப்படுத்தப்படாவிட்டால் இவற்றின் பாதுகாப்பில் குறைபாடு ஏற்படும்.

அதேபோல்தான் யாழ். மாவட்டத்திலும் அதன் பாதுகாப்பை உறுதிப்படுத்த அதி உயர் பாதுகாப்பு வலயம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் பாதிக்கப்படும் மக்கள் குறித்து நாம் கவலையடைகின்றோம். இருந்தாலும் வேறு எதுவும் நாம் செய்யமுடியாது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடு வழங்கப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

யாழ். அதிஉயர் பாதுகாப்பு வலயத்தால் பாதிக்கப்பட்ட மக்களில் 70 வீதமானவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டனர். மீதி 30 வீதமானவர்களே இலங்கையில் உள்ளனர். இவர்களுக்கும் கட்டாயம் நட்டஈடு வழங்கப்படும் - என்றார் அவர். (க-3)

# ஈரானில் கோர விமான விபத்து 130 பேர் பலி; 100 பேர் காயம்

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் நேற்று இராணுவ விமானம் ஒன்று 10 மாடிக் கட்டடத்தின் மீது விழுந்து நொருங்கியதில் 130இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். மேலும் 100 பேர் வரை காயமடைந்தனர். மீட்புப்பணிகள் இடம் பெற்று வருகின்றன.

மெஹ்ரபாத் விமான நிலையத்திலிருந்து சி-130 ரக விமானம் புறப்பட்டு சிறிது நேரத்தில் விமானி அபாய அறிவிப்பு ஒன்றை விடுத்து விமானத்தை திருப்புவதாக அறிவித்துள்ளார். அதன்பின்னர் விமானம் கட்டுப் பாட்டு நிலையத்தினுடனான தொடர்பை இழந்தது.

விமானம் பத்து மாடிக் கட்டடத்தின்மீது விழுந்தபோது பெரும் வெடிச்சத்தம் கேட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். விமானத்தில் பயணம் செய்த 94 பேரும் உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. கட்டடத்தினுள் இருந்த பலரும் உயிரிழந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. குறைந்தது 130 பேர் உயிரிழந்தனர்; மேலும் 100 பேர் வரை காயமடைந்தனர்.

கட்டடம் தொடர்ந்து தீப்பிடித்து எரிவதாகவும் அப்பகுதி தடைசெய்யப்பட்ட பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-3)

## கருணா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பவர் கருணா குழுவின் முக்கியமான உறுப்பினராவார். ஏனைய மூவரும் சுமன், தேவன், சுரேஷ் என அடையாளம் காணப்பட்டனர்.

அம்பாறை மாந்தோட்டத்திலுள்ள விசேட அதிரடிப்படை முகாம் அமைந்திருக்கும் பகுதியிலிருந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவ கருணா குழு முயன்றதாகவும், அப்போது வம்மியடி முன்னணிக் காவலரங்கப் பகுதியில் இக்குழு மீது புலிகள் தாக்கினர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. கொல்லப்பட்டவர்களின் சடலங்களைக் கருணா குழுவின் இதர உறுப்பினர்கள் எடுத்துச் சென்றனர் என்றும் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தையடுத்து நேற்று அதிகாலை புலிகள் அந்தப் பகுதியில் தேடுதல்களை நடத்தினர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சில மாதங்களுக்கு முன்னர் காத்தான்குடிப் பகுதியில் பிஸ்டல் உட்பட ஆயுதங்களுடன் சென்ற வேளையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இனியபாரதி, பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். ஆயுதங்களுடன் பிடிபட்ட அவர் எப்போது, எப்படி விளக்கமறியலில் இருந்து வெளியே வந்தார் என்பது தெரியவில்லை.

பிரபல ஊடகவியலாளர் மாமனிதர் சிவராமின் படுகொலைப் பின்னணியில் இனிய பாரதியின் பெயரும் இணைக்கப்பட்டு செய்திகள் வெளியாகியிருந்தன என்பது தெரிந்ததே.

இதேவேளை, இவ்விடயம் தொடர்பாக புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் தயாமோகன், கருணா அணியில் இருந்த இருவரே, அவர்களின் நடவடிக்கை பிடிக்காததால் அந்த நால்வரையும் சுட்டுவிட்டு எம்மிடம் தஞ்சம் கோரியுள்ளனர்.

தற்போது எமது பாதுகாப்பில் உள் ளனர் எனத் தெரிவித்துள்ளார். (க-3-12)

## யாழ்.பல்கலை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த நடைமுறை அமுலுக்கு வருகின்றது என அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோன்ற அறிவுறுத்தல் ஏனைய 13 பல்கலைக்கழகங்களுக்கும் விடுக்கப்பட்டுள்ளது எனக் கூறப்பட்டது. (3)

## உயர்மட்டக்குழு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பலாலியில் இராணுவ அதிகாரிகளுடன் புதிய இராணுவத் தளபதி கலந்துரையாடினார்.

யாழ். இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் ஓய்வுக்கு முந்திய விடுப்பில் இருப்பதால், அவருக்குப் பதிலாக புதிய வடபகுதித் தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கும் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந் திரசிறியும் இந்த உயர்மட்டக் குழுவுடன் பலாலிக்குச் சென்றார்.

புதிய இராணுவத் தளபதி பலாலி முன்னரங்க காவல் அரண்களுக்குச் செல்ல விருந்தபோதும் பாதுகாப்புக் காரணங்களுக் காக அது கைவிடப்பட்டதாகத் தெரிவிக் கப்பட்டது.

## சிதறிக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சடலங்களை அப்புறப்படுத்த முன் குண்டு செயலிழக்கும் பகுதியினரை வரவழைக்க வேண்டும் என்று பொலீஸார் நீதிவானிடம் விண்ணப்பித்தனர்.

இதை ஏற்றுக்கொண்ட நீதிவான் அதற்கு அனுமதி வழங்கினார். இராணுவத்தின் பொறியியல் பிரிவின் குண்டு செயலிழக்கும் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு உடன் தகவல் கொடுக்கப்பட்டது.

எனினும், அவர்கள் இருமணிநேரத்தின் பின்பே அந்த இடத்துக்கு வந்து சோதனை செய்தனர். அப்போது வெடிக்கும் நிலையில் இருந்த மூன்று 'கிரனேட்' குண்டுகள் உடன் அங்கு வைத்து செயலிழக்கச் செய்யப்பட்டன.

சோதனை முடிவடைந்த பின்னர் மரண விசாரணையை நீதிவான் அங்கு நடத்தினார்.

வாக்குமூலங்களைப் பதிவு செய்தபின் சடலங்களைக் கொழும்பு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி மூலம் பிரேத பரிசோதனை செய்தபின் உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

அதன் பின்னர் சம்பவத்தில் காயமடைந்து பலாலி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற சிப்பாயிடமும் நீதிவான் வாக்கு மூலங்களைப் பெற்றார். இச் சம்பவத்தில் வீதி அருகே மரத்தில் பொருத்தப்பட்டிருந்த இரு 'சைட் சார்ஜர்கள்' மூலமே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும் - தாக்குதல் நடத்தப்பட்ட பின் டிராக்டர் ஐம்பது அடி தூரத்துக்கு இழுத்துச் செல்லப்பட்டு பள்ளம் ஒன்றில் வீழ்ந்துள்ளது என்றும்- விசாரணைகளில் தெரிவிக் கப்பட்டது. (க-3)

BITSMANS
கல்வி நிறுவனம்
மானிப்பாய்
கல்வியாண்டு 2006
எமது Super Grade ஆசிரிய குழுவினால் புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன.
தரம் 1 தொடக்கம் O/L வரை
ஆரம்பம் 10.12.2005
சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு
(சி-46653)

# எந்தச் சவாலுக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களைத் தொடர்ந்தும் அமைதிகாக்குமாறே நான் கூறுகிறேன். அவர்கள் புலிகளின் ஆத்திரமூட்டல்களுக்கு இலகுவில் எடுபடமாட்டார்கள்.

புலிகளுடன் பேசி தொடர்ந்தும் யுத்த நிறுத்தத்தை நடைமுறைப்படுத்த அனைத்து நடவடிக்கைளையும் நான் மேற்கொள்வேன். அதேவேளை, புலிகளைத் தவிர வேறு ஆயுதக்குழுக்கள் வடக்கில் இயங்குகின்றனவா எனக் கண்டுபிடித்து அவற்றுக்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வேன்.

கடந்த இரண்டு மாதங்களாக இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையில் சந்திப்புகள் ஏதும் நிகழவில்லை. புலிகளின் முக்கியஸ்தர்கள் கிளிநொச்சியில் இருந்ததனாலும், அங்குள்ள விவகாரங்களில் அவர்கள் கவனம் செலுத்தியிருந்தமையினாலும் எம்மால் அவர்களுடன் பேச்சுகளை நடத்த முடியாமல் போனது.

பேச்சுகளை நடத்த நாம் பலதடவைகள் முயன்றபோதும் அது முடியாமல் போய்விட்டது. இவ்வாறான நிலைமைகள் இரு தரப்புக்குமிடையில் புரிந்துணர்வைக் குறைத்து வருகின்றன எனலாம்.

இந்த நிலைமையை மாற்றி யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை முழு அளவில் நடைமுறைப் படுத்த நாம் விரும்புகின்றோம். அதேவேளை, யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் பல குறைபாடுகள் உள்ளன என்பதையும் நான் அறிகிறேன்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீள்பரிசீலனை செய்யவேண்டும் என அரசு தெரிவித்துள்ளது. அதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். யுத்த நிறுத்த ஒப்பந்தம் மீள் பரிசீலனை செய்யப்படும்போது இராணுவத்தின் சார்பில் பல யோசனைகள் முன்வைக்கப்படும். அவற்றைத் திருத்தப்படும் யுத்தநிறுத்த ஏற்பாட்டில் உள்ளடக்குமாறு கேட்போம்.

அப்போது அந்த ஒப்பந்தம் இரு தரப்புகளுக்கும் பாதகமில்லாதவகையில் அமையும் என நாம் நம்புகிறோம்.

அதேவேளை, முழு நாட்டின் பாது காப்பு மீதும் கவனம் செலுத்துவோம். பொதுவாக வடக்கு - கிழக்கில் பிரச்சினைகள் எழும்போது கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தவேண்டும். கடந்தகால யுத்த அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டே நாம் இதை மேற்கொள்கிறோம்.

இப்போது கொழும்பில் பாதுகாப்பைப் பலப்படுத்துகிறோம். இருந்தும் கொழும்பு நகரை நூறுவீதம் பாதுகாத்துவிட முடியாது என்பதையும் நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், முடியுமானவரை பாதுகாப்பைப் பலப்படுத்தி வருகிறோம்.

அதேவேளை, நாட்டின் பாதுகாப்பிற்கு முதுகெலும்பாய் உள்ள புலனாய்வுத்துறை பலப்படுத்தப்பட வேண்டும். புலனாய்வுத் துறை அதிகாரிகளின் பாதுகாப்பு உறுதிப் படுத்தப்பட வேண்டும். உரிய பாதுகாப்பு இல்லாததன் காரணத்தால் யுத்தநிறுத்த காலத்தில்கூட நாம் பல புலனாய்வுத்துறை அதிகாரிகளை இழந்துள்ளோம். இப்போக்கு எமது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்த லாகும்.

புலனாய்வுத்துறை அதிகாரிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி அதன்மூலம் முழு நாட்டின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்த நான் நடவடிக்கை எடுப்பேன் -என்றார் அவர். (க-3)

# இருபாலையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னமாகியது. அதில் பயணம்செய்த எட்டுப் படையினரில் அறுவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர் என்று கூறப்படுகிறது. அவர்களில் ஒருவர் லெப்டினன்ட் தர அதிகாரி என்று இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

காயமடைந்த படையினர் பின்னர் சம்பவ இடத்தில் இருந்து தனியார் வாகனம் ஒன்றில் பலாலி இராணுவ மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டனர். அவர்களில் ஒருவர் பின்னர் அங்கு உயிரிழந்தார் என்று கூறப்படுகிறது.

லெப்டினன்ட் முத்துகலகே, கோப்ரல்களான விஜயதுங்க, அத்தநாயக்க, சமரசிங்க, உதயசிறி, தயாவன்ஸ, அஜித்குமார ஆகியோரே இந்தத் தாக்குதலில்உயிரிழந்தனர் என்று இராணுவத் தலைமையகம் தெரிவித்தது.

கிளைமோர் கண்ணி பெரும் சத்தத்துடன் வெடித்ததை அடுத்து அப் பிரதேசம் எங்கும் பெரும் பரபரப்பும் பதற்றமும் ஏற்பட்டது. பருத்தித்துறை வீதி நெடுங்கிலும் வீதிக்கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த சிப்பாய்கள் ஆகாயத்தை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தவாறு சம்பவம் நடந்த இடத்துக்கு முன்னேறினர். அதனால் வீதியில் சென்று கொண்டிருந்தோர் கலவரமடைந்து தலைதெறிக்க ஓடித்தப்பினர். எங்கும் சிறிது நேரம் விடாது வேட்டுச் சத்தங்கள் கேட்டபடி இருந்தன.

இருபாலைச் சந்தியில் உள்ள வர்த்தக நிலையங்கள் இழுத்து மூடப்பட்டன. சிலர் தமது கடைகளை மூடாமல் அப்படியே விட்டுவிட்டு அங்கிருந்து வீடுகளை நோக்கி ஓடித் தப்பினர்.

பருத்தித்துறை வீதி வழியாக வந்த வாகனங்கள் கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு பகுதிகளைத் தவிர்த்துவேறு பாதைகள் வழியே பயணத்தைத் தொடர்ந்தன. இந்தப்பகுதிகளில் பெரும் பதற்ற நிலை நீடித்தது.

இருபாலை மற்றும் கட்டப்பிராய் பகுதிகளில் வீதிகளில் நடமாடுவோரை நோக்கிப் படையினர் வேட்டுக்களைத் தீர்த்தனர். சிலர் படையினரால் தாக்கி விரட்டப்பட்டனர்.

இருபாலைச் சந்தியிலும் கட்டப்பிராய் பகுதியிலும் கடைகளின் முன்பாக விட்டுச் சென்ற மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள் என்பன அடித்து நொறுக்கப்பட்டிருந்தன.

சம்பவம் நடந்த பகுதியில் படையினர் குவிக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது. வீடுகள், வெறும் வளவுகளில் படையினர் சல்லடை போட்டுத் தேடுதல் மேற்கொண்டனர்.

பருத்தித்துறை வீதி ஊடான பொதுப் போக்குவரத்து நண்பகலுக்குப் பின்னரும் தடைப்பட்டிருந்தது. பயணிகள் பஸ்கள் அச்சுவேலி - கோண்டாவில் மார்க்கத்தில் சேவை யில் ஈடுபட்டிருந்தன.

சம்பவம் நடந்த ஒரு மணி நேரத்தின் பின்னர் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதிகள் அவ்விடத்துக்குச் சென்று விசாரணை மேற்கொண்டனர். கடந்த மூன்று நாள்களில் யாழ்.குடாநாட்டில் இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட இரண்டாவது தாக்குதல் இது.

இந்தத் தாக்குதலின் பின்னர் படையினரின் தாக்குதலுக்கு இலக்காகிய நால்வர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள் ளனர். சிறுப்பிட்டியைச் சேர்ந்த கந்தன் பத்மநாதன் (வயது 44) என்ற ஆறு பிள்ளைகளின் தந்தையும் நீர்வேலி கரந்தனைச் சேர்ந்த துரையழகன் பத்மநாதன் (வயது 31) என்ற ஒரு பிள்ளையின் தந்தையும், பருத்தித்துறையைச் சேர்ந்த அ.சிவசுப்பிரமணியம் (வயது 46), மானிப்பாய் உடுவிலைச் சேர்ந்த எஸ். கிருஷ்குமார் (வயது 48) ஆகியோர் காயமடைந்தவர்களாவர்.

இதுதவிர காயமடைந்தவர்களில் பலர் பிரதேச வைத்தியசாலைகளிலும் தனியார் வைத்தியசாலைகளிலும்சிகிச்சை பெற்றுள்ளனர். (க-ஐ-3-7-13-180-15-31-117-86-173-154-78)

கல்வியாண்டு 2006
தரம் 3 முதல் O/L வரை
ஆரம்பம் - 10.12.2005
சனிக்கிழமை காலை 9 மணி
சதா பொன்ஸ் கல்வி நிலையம்
அல்வாய்.
T.P: 021-2263206 (சி-40639)

கல்வியாண்டு-2006
தரம் 1 முதல் O/L வரை
ஆரம்பம்: 09.12.2005
வெள்ளி 4.30
கற்சுமி கல்வி நிறுவனம்
166, நாவலர் வீதி, யாழ்.
(43217)

IIS
மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2006
விண்ணப்பிக்கத் தவறாதீர்கள்!
விண்ணப்ப முடிவு திகதி
15.12.2005
இவ் அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ளுங்கள்.
இயக்குநர்
IIS, யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.12.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.